சுந்தரியே யென்றாயே சுகித்திச் சுகத்திடத்தே
விந்தவலை வருந்துவதற் கென்னதீங் கிழைத்தனையோ
வெந்தவித மென்னுயிரை யினித்தாங்கி யிருப்பேன்காண்.

(சுந்தரானந்தன் மூர்ச்சித்துவிழுதல்)

இருவரும்:—இதென்ன! இதென்ன! இதென்ன, புதுமை?

(இருவரும் மூர்ச்சைதெளிவித்தல்.)

பூஞ்சோலையின் மற்றொருசார்.

(ரூபாவதி, கனகமாலை, அம்புஜாட்சி யிவர்கள் வருதல்.)

ரூபாவதி:—அம்புஜாட்சி! இங்கே சமீபத்திலே யென்னவோ அழுகைக்குரல் கேட்டதே! அதென்னவென்று போய்ப் பார்த்துவிட்டு வருவமே?

அம்புஜாட்சி:—ஏன், கனகமாலை! ரூபாவதிதான் பார்க்கலாமாவென்று கூப்பிடுகிறாளே! எல்லாருமாய்ப் போய்த்தான் பார்ப்போமே?

கனகமாலை:—ஆனாற்சரி. நீங்கள் இரண்டுபேருங் கூப்பிடும்போது நான் மாட்டேன் என்பேனோ, நான் மாட்டேனென்றாலுந்தான் விடுவீர்களோ?

ரூபாவதியும் - அம்புஜாட்சியும்:—சரி, போகலாம்வா.

(இவர்கள்போதல்.)

சுகுமாரன்:—அப்பா! சுந்தரானந்தா! இப்படி என்மேற் சாய்ந்துகொள். ஏ! சந்திரமுகா! இப்புறம்வா, சற்றுக்குளிர்ச்சியாய்க் காற்று மேலேபடிக்கட்டும்.

சந்திரமுகன்:—ஏன், சுந்தரானந்தா! உனக்கு உடம்பு என்னசெய்கிறது?

(ரூபாவதி முதலானவர்வருதல்.)

சுந்தரானந்தன்:—அம்மா! அப்பா! அம்மா! அப்பா! கொஞ்சம்பொறுங்கள்.

ரூபாவதி:—இரு, இரு, இங்கேதான். இங்கேதான்.

அம்புஜாட்சி:—அதோ, அந்த மாதவி மரத்தின் கீழ் மூன்றுபேர் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒருவன் மடியில் லட்சணமுள்ள ஒருவன் சாய்ந்துகொண்டிருக்கிறான் பார்.

கனகமாலை:—ஆமாம், நாம், இரைந்து பேசக்கூடாது.

ரூபாவதி:—மெள்ளச் சத்தப்படாமல் நாமிந்த மல்லிகைப் பந்தரிலேயே யொளித்துக் கொண்டிருந்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்—நில், நில்! என்னவோ பேசுகிறார்கள். கேட்போம்.

(இவர்கள் ஒளித்துப்பார்த்தல்.)

சந்திரமுகன்:—என்ன இது? ஒரு நாளுமில்லாமல் இன்றைக்கு மாத்திரம் இப்படி நீ மூர்ச்சை யடைந்து எங்களை யெல்லாம் வருத்தப்படும்படி வைத்துவிட்டாய், எனப்பா! சுந்தரானந்தா!

சுந்தரானந்தன்:—(சுகுமாரன் மடியை விட்டு விலகிக்கொண்டு) இதைக் குறித்து ஞாபக மூட்டாதே; என்னை யொன்றும் இப்பொழுது கேட்காதே, நாம் இனிமேல்; சுகுமாரா! இங்கே தாமஸஞ் செய்யக் கூடாது.

சுகுமாரன்:—ஆமாம், அந்தப் பயல் சிறைகாப்பாளன் கொஞ்சம்நேரம் கழித்துப் போனால் அதிகமாய்த் தலைகீழாய் விழுகிறான். இராசனிடத்தில் தெரியப்படுத்துவேன் என்கிறான்.

சந்திரமுகன்:—ஆமாம். சீக்கிரமாய்ப்போவோம் வாருங்கள்.

(சுந்தரானந்தன், சுகுமாரன், சந்திரமுகன் இவர்கள் போதல்.)

(ரூபாவதி கனகமாலை அம்புஜாட்சியிவர்கள் வருதல்)

ரூபாவதி:—ஏன், கனகமாலை! இந்த மூன்றுபேரும் யார்? நீ யிந்த ஊரிலேயே இருக்கிறவளாயிற்றே! உன்னாலே, இவர்கள் இன்னார் என்று சொல்லக் கூடுமே!

அம்புஜாட்சி:—என்னைக்கேளேன்! நான் சொல்லுகிறேன். அவள் இந்த ஊருக்கு வந்து இன்னும் இரண்டுவருஷம் கூட ஆகவில்லை. அவளுக் கிவர்களைப்பற்றி என்ன தெரியப் போகிறது!

கன. கமாலை:—எடியம்மா! எனக்கும் அவர்களில் ஒருத்தனைத் தெரியும்.

ரூபாவதி:—என்னத்திற்கு இவ்வளவுபேச்சு? நீங்கள் இரண்டுபேரும் இந்த ஊரிலேயே இருக்கிறவர்களாய் இருக்குமென்று நினைத்துச்சொன்னேன். இப்போது யார்சொன்னால் தான் என்ன? அம்புஜாட்சீ! நீதான் சொல்லேன்.

அம்புஜாட்சி:—இல்லை, இல்லை! அவளுக்குத் தெரிந்தமட்டும் அவளே சொல்லட்டும், அப்புறம் வேண்டுமென்றால் அவளுக்குத் தெரியாதது இருந்தால் நான் சொல்லுகிறேன்.

கனகமாலை:—அதெல்லாம் இல்லை, உனக்குத்தான் நன்றாய்த் தெரியுமே! சொல்லேன்.

ரூபாவதி—சரி, இருக்கட்டும், இவர்கள் யார்? சீக்கிரம் சொல்லேன். பார்ப்போம்.

அம்புஜாட்சி:—அழகாய் ஒருபிள்ளை இன்னொருத்தன் மடியிலே உட்கார்ந்து சாய்ந்து கொண்டிருந்தானே, அவன் தான் முந்தி இருந்த ராஜா சற்குணவழுதியின் பிள்ளை.

கனகமாலை:—அவனைத்தான் எனக்கும் தெரியும்.—

ரூபாவதி:—ஒருத்தி சொல்லுகிறபோது நடுவிலே பேசாதே. உனக்குத்தெரிந்தால், அப்புறம் சொல்லேன்.

அம்புஜாட்சி:—அவன்பெயர்சுந்தரானந்தன், வில்வித்தையில்மகாகெட்டிக்காரனும், படிப்பில் மிகத் தேர்ந்தவனும். முன்னிருந்த ராஜாவுக்கு இவன் ஒரே பிள்ளை, ஆகையினாலே வெகு அருமையாய்க் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்து வந்தார். இவனை மடியிலே உட்கார்த்திக் கொண்டிருந்தானே அவன் தான் என் தகப்பனாரோடு கூடப் பிறந்த அத்தை பிள்ளை. அவன் பெயரை நான் சொல்லப்படாது!

கனகமாலை:—அவனுக்கு வாழ்க்கைப்படப் போகிறாயோ? அதுதான்பேர் சொல்ல மாட்டேன் என்கிறாய் போலும்!

ரூபாவதி:—யாருக்கு வாழ்க்கைப்படப்போகிறாள்?

கனகமாலை:—அவளுடைய அத்தைபிள்ளைக்காம். இன்னும் கலியாணம் கூட ஆகவில்லை. அதற்குள்ளே பேர் சொல்லப்படாது என்கிறாள்!

ரூபாவதி:—எடி அம்புஜாட்சீ! அதெல்லாம் இருக்கட்டும், நீ அழகாய் ஒருத்தன் ராஜாபிள்ளை என்றுசொன்னாயே அவன் [illegible]ழவானேன்?

அம்புஜாட்சி:—எல்லாம் உனக்கே தெரிந்திருக்குமே!

ரூபாவதி:—இல்லை, நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். எனக்கொன்றும் தெரியாது.

அம்புஜாட்சி:—நிஜந்தானா? உனக்கு நிச்சயமாய்த் தெரியாதா?

ரூபாவதி:—நிஜந்தான். நிச்சயமாய்த்தான் தெரியாதென்கிறேனே.

அம்புஜாட்சி:—ஆனால் சரிதான், ஒருவேளை உனக்குத் தெரிந்திருக்குமோவென்று நினைத்தேன். உங்கள் தகப்பனார் இந்தப்பாண்டியராஜ்யத்தை ஜெயித்து இந்தேசத்து ராஜாவையும், ராஜாபெண்டாட்டியையும் ஒருசிறையிலேயும், இந்தராஜாபிள்ளை, இப்போது பார்த்தோமே அவனை இன்னொரு சிறையிலேயும் அடைத்து வைத்திருந்தார். அந்தராஜாவும் ராஜாத்தியும் இந்த ஊரிலேயே இருக்கிறதினாலே கலகங்கள் உண்டாகின்றனவென்று நினைத்து அவர்கள் இரண்டு பெயரையும் இன்றைக்காலமேதான் இந்த ஊருக்கடுத்த ஒரு காட்டிலே கொண்டு போய்த்துரத்திவிட்டு வரும்படி உங்கள் தகப்பனார் உத்தரவு கொடுத்தாராம். அந்தப்படியே சேவகர்களும் அவர்களை அழைத்துக்கொண்டு துரத்திவிட்டுவரக்காட்டுக்குப்போயிருக்

கிறார்களாம். இந்தச்சமாசாரத்தைக் கேட்டுவிட்டுத்தான் சுந்தரானந்தன் அழுதது. தாயார் தகப்பனார் என்றால் அவனுக்குப் பிராணன்! என்ன செய்வன்?

நூபாவதி:—அடி! மூர்ச்சைபோட்டு விழுந்தானாமே! அவர்கள் பேசிக்கொண்டார்களே! அதென்ன! அழுதால் மூர்ச்சைபோகுமோ?

கனகமாலை:—தாயார் தகப்பனாரைக் காட்டுத் துஷ்டமிருகங்களுக்கு இரையாகும்படி வயசானகாலத்திலே துரத்திவிட்ட சங்கதியைக் காதிலேகேட்டும் மூர்ச்சையடையாதவர்யார்? அப்போர்ப்பட்டவர் மகா கல்னெஞ்சராய்த்தான் இருக்கவேண்டும்.

அம்புஜாட்சி:—அந்த சுகுமாரனும், சந்திரமுகனும், பக்கத்திலே இல்லாதிருந்தால், சுந்தரானந்தன், அப்பாவி! வருத்தமென்பதை இன்னதென்று அறியாதவன்! வெகு அவஸ்தைப்பட்டுப் போயிருப்பான். சுவாமி, அவர்களைச் சமீபத்திலிருக்கும்படி செய்தாரே! அதுவன்றோ விசேஷம்?

கனகமாலை:—அதெல்லாம், இருக்கட்டும். அப்போதுமாத்திரம் அகமுடையான் பெயரைச் சொல்லப்படாதென்றாயே! இப்போதுமாத்திரம் சொல்லலாமோ?

நூபாவதி:—இன்னும் கலியாணம் ஆகவில்லையே! சொன்னால் என்ன? பாதகமில்லை.

கனகமாலை:—சந்திரமுகனென்று சொன்னாயே. அவன்யார்?

அம்புஜாட்சி:—அவன்தான் நயவசனர் என்பவருடைய புத்திரன். சுந்தரானந்தனோடுகூடப் படித்தவன். இவர்களும், எங்கள் அத்தைபிள்ளையும் ஆக மூன்றுபெயரும் வித்தியாசாகரப் புலவரிடம் கல்வி கற்றுக் கொண்டார்களாம்.

நூபாவதி:—அதிருக்கட்டும். சுந்தரானந்தனைப்பற்றிஇவ்வூரார் என்னசொல்லிக் கொள்ளுகிறார்கள்?

கனகமாலை:—சுந்தரானந்தனு, மகாபுத்திசாலி! ஊரார்சொல்லுகிறதென்ன, நன்றாய்த்தெரிந்த விஷயந்தானே!

நூபாவதி:—அம்புஜாட்சி! கனகமாலை மாத்திரம் என்னவோ இப்படிச் சொல்லுகிறாள். நானும் இரண்டு மூன்று பேரிடத்திலே கேட்டேன், அவன் என்னவோ வெகு துஷ்டனாம். தான் தான் ராஜாபிள்ளை என்று எண்ணிக்கொண்டு ஊர்ப்பிள்ளைகளை எல்லாம் பிடித்துக் கொண்டு அடித்து இம்சை பண்ணுவனாம். இப்படி எல்லாம் சொல்லிக் கொள்ளுகிறார்களே!

அம்புஜாட்சி:—சுந்தரானந்தனையுஞ் சொல்லி மற்றைப் பெயரையும்சொல்லுகிறதா? வெகு நன்றாயிருக்கிறது! அவனா துஷ்டனாம்? அப்படிச்

சொல்லுகிறவர்கள் நாக்குப் புழுத்துத்தான் போகும். பரமசிவகாருண்ணியனென்றால், அவனுக்குத்தான் தகும்.

கனகமாலை:—அப்படி இருக்க, அழகு அழகு, யார் சொன்னதோ தெரியவில்லை!

அம்புஜாட்சி:—இந்தப்படிச்சொன்னால்தான்இப்போது வந்திருக்கிற ராஜா சூரசேனவர்மர் தங்கள் பேரிலே பிரியமாயிருப்பாரென்று நினைத்தார்களோ! அவர்களும் நன்றாய்ச் சொன்னார்கள்! ராஜாவும்நன்றாய்க் கேட்டுக்கொண்டார்! வீட்டிலே இருக்கிறபோதே விதிவந்து சூழ்ந்தது போல, தெய்வமே! என்று இருக்கிறவன் தலையிலே நன்றாய்ப்பழியைப் போட்டார்கள்! சுவாமி இருக்கிறார் எல்லாவற்றிற்கும்! நாம் சொல்லியா ஆகப் போகிறது?

கனகமாலை:—உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூடலாமோ? சொல்லுகிறவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டும்!

அம்புஜாட்சி:—யார் என்ன சொன்னபோதிலும் அவனைப்பற்றி நம்முடைய எண்ணம் என்னவோ மாறப் போகிறதில்லை.

நூபாவதி:—என்னவோ? அம்மா! ஊரார்சொன்னதைச் சொன்னேன். அவன் நல்லவனாக இருந்தால் எல்லாம் நல்லதுதானே!

கனகமாலை:—எனக்குத் தெரிந்தமட்டில் அழகு,புத்தி,சக்தி, குணம்இவற்றிலெல்லாம் அவனுக்குச் சமானமானவர்கள் இல்லை என்றே சொல்லலாம்.

நூபாவதி:—சரி, அது அப்படி இருக்கட்டும், அம்புஜாட்சி! ஏதாவது ஒரு பாட்டுப் பாடேன் கேட்போம். நன்றாய் மந்தமாருதம் வீசுகிறது. எங்கே! சுகமாய்ப் பாடு பார்ப்போம்.

அம்புஜாட்சி:—(பாடுதல்:)

இராகம்-இந்துஸ்தான்காபி, தாளம்-ஆதி.

பல்லவி.

நாயகனே வருவாய்—இவ்வேளையில்

சரணங்கள்.

சிந்தை தினந்தொறும் நொந்து வருந்தினேன்
இவ்வேளையில். (நாயக)
சுந்தர மதிவதன மார்பினிற் பாய்ந்தன
மன்மத பாணங்கள் இவ்வேளையில். (நாயக)
கன்மனஞ் செய்தருள்வாய் மிளகில தோசெஞ்சஞ்
இத்தனை கூடியு இவ்வேளையில். (நாயக)
சுத்தகல் லாமனந்தான் சாகரர்தம்பதஞ்
சன்மார்க்கர் வித்தியா இவ்வேளையில். (நாயக)
சொன்மேலுந் தாமதயா

நபாவதி:—சமயத்துக் கேற்ற பாட்டும் பாட்டுக்கேற்ற குரலும் ராகமும் தாளமும் எல்லாம் நன்றாயிருக்கின்றன.

கனகமாலே:—அவளுக்குப் பாடுகிறதற்குக்கேட்பானேன்? ஜன்மாந்திரத்திலே புண்ணியம் பண்ணி இருக்கிறாள்! அதுதான் தெய்வம் நல்ல குரலாய்க் கொடுத்திருக்கிறது!

அம்புஜாட்சி:—இன்றைக்கு என்று என்னவோ கொஞ்சம் தொண்டை கட்டிக் கொண்டிருக்கிறது, இல்லாமற்போனால் இன்னும் சற்று நன்றாய்ப்பாடி இருக்கலாம்.

நபாவதி:—பாட்டுப்பாடுகிறவர்களெல்லாரும் அது என்னவோ தெரியவில்லை, தொண்டை கட்டிக் கொண்டிருந்தாலும் சரி, இல்லாமற் போனாலும் சரி இப்படித்தான் சொல்லுகிறார்கள்.

கனகமாலே.—அது அவர்களுக்கு வழக்கமாய்ப் போய்விட்டது! அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்?

அம்புஜாட்சி:—சரி.நாம் இப்படிப்பேசிக்கொண்டிருந்தால் நமக்குநாழிகையாகவில்லையா? அஸ்தமித்துப்போயிற்று. அகத்திற்கு போகவேண்டாமா?

கனகமாலே:—ஆமாம். சூரியன் அப்போதே மலைவாயிலே விழுந்துவிட்டானே. சீ, சீ, இனிமேல் இருக்கப்படாது அம்மா, எங்களப்பா கோபித்துக் கொள்வார்!

நபாவ[illegible]—ஆம், எனக்கும் நேரமாய்விட்டது. சரி, போகலாம்வாருங்கள்.

(எல்லாரும்போதல்,)

இரண்டாங்களம்.

இடம்:—காடு. காலம்—நண்பகல்.

நடர்:—சற்குணவழுதியும், சுந்தரியாரும்.

சற்குணவழுதி:—இன்னும் கொஞ்சத்தூரம் போனால் ஒருவேல மரமிருக்கின்றது, அதின் நிழலில் தங்குவோம்.சிறிது விரைவாய் வா. ஐயோ! உன்பாதங்கள் தரையை மிதித்தறியாவே! உனக்கு வெய்யிலென்பதேதெரியாதே! என்செய்வேன்! இதுவும் என்தலைவிதியோ? ஆ! தெய்வமே!

சுந்தரியார்:—தெய்வந்தான் என்னசெய்யும்? நாம்தாம்என்னசெய்வோம்? கொஞ்சத்தூரத்திற்கப்பால் வேலமரம் ஒன்று இருக்கிறதென்றீர்களே! அதெப்படி உங்களுக்குத் தெரியும்?

சற்குணவழுதி:—அந்தோ! உன்னைக் கைப்பிடித்த இந்தப்பாவி அரசனாயிருந்த காலத்தில் பலதரம் இதே காட்டில் வேட்டையாட வந்திருக்கின்றான்!

சுந்தரியார்:—வெய்யிலோ அகோரமாய்க் கொளுத்துகிறது! இப்படியே அழுதுகொண்டு போவோமானால் உடம்பு களைத்துப்போய்விடும். அப்புறம் நடக்கமுடியாது.

சற்குணவழுதி:—ஐயோ! என் கண்ணே! உனக்கு இருக்கிற அறிவு எனக்கில்லையே! என் செய்வேன்!

சுந்தரியார்:—நம்மைப் பிரமா அவஸ்தைப் படவேண்டுமென்றே நினைத்து முதலில் இராஜ்ய பரிபாலனத்தை யெல்லாம் கொடுத்து இப்போது அவற்றையெல்லாம் பிடுங்கிக்கொண்டு துஷ்டமிருகங்களுக்கு இரையாகும்படி படைத்துவிட்டான்! காடோ மகாகொரேமாயிருக்கிறது! வெய்யிலோ இன்றைக்கு என்று உக்கிரமாயிருக்கிறது! தினமும் இருந்த தைரியமும் இன்று சோதனை செய்ததுபோலக் கைவிட்டுப் போய்விட்டது! பூர்வ ஜன்மத்தில் நாம் என்ன பாவம் செய்தோமோ அவற்றின் பயனை எல்லாம் இப்போது அனுபவிக்கும்படி நேரிட்டுவிட்டது! வளப்பமுள்ள நாட்டை இழந்தோம்! வெகு நேர்த்தியான மதுரைநகரத்தை இழந்தோம்! அலங்காரமான அரண்மனையை இழந்தோம்! உடையை இழந்தோம்! பொருளை இழந்தோம்! மீனாட்சி சுந்தரேசுவரர் தரிசனத்தை இழந்தோம்! சுந்தரேசுவரர் என்றவுடனே ஞாபகம்வருகிறது.எல்லாப்பாக்கியத்திலும் மேலான நம்முடைய அருமைச்சுந்தரானந்தனையும் இழந்தோம்! இழந்தோம்! தெய்வமே! தெய்வமே! சுந்தரானந்தா! சுந்தரானந்தா! உன்னை இழந்தபிறகும் உயிர் தரிப்பேனோ. (சுந்தரி[illegible]ர்மூ[illegible]சித்தல்)

சற்குணவழுதி:—ஐயோ! என்ன செய்வேன்! நீ சிறிது தைரியமாயிருக்கிறாயே என்று நினைத்தேன். நீயு மிவ்வாறு மூர்ச்சியடைந்துவிட்டாயே! இவ்வனாந்தரத்திற் கொஞ்சம் ஜலம், மயக்கம் தீரும்படி உன்முகத்தில் தெளிக்கலாம் என்றாலும் ஜலமில்லையே! எங்கேயாவது சுற்றிப்பார்த்துக்கொண்டு வருவோம் என்றாலும் உன்னைத் தனியாய்விட்டுவிட்டுப் போனாற் புலியடித்துக் கொண்டு போய்விட்டாலென்செய்வேன்! கடைநாளில், நாடு, நகர் எல்லாவற்றையும் துறந்தேன்! அரும்புதல்வனை யிழந்து புத்திரசோக முற்றேன்! கடைசியில் என் உயிர்த் துணைவியாகிய சுந்தரியையும் இழக்கவேண்டுமோ! வேண்டுமோ! சுந்தரீ! சுந்தரீ! என்னை இப்படி ஏகாங்கியாய் விட்டுப் பிரிதல் நியாயமோ?

கலையெலாங் கற்ற மாதே போதியோ கடிய நெஞ்சாய்த்
தலைவியை யிழந்த பின்னுஞ் சாகிலே னிருக்கின் றேனே!

-(மௌனம்.)

'ஐயா' என்ற சப்தம் கேட்டேன். ஆ! யாரோ பார்ப்பேன்.

(ஒரு வேடன் வருதல்.)

வேடன்:—என் ஐயா! இப்படி யழுகிறீர்கள்? உங்களுக்கு—ஆகாகா! யாரோ அம்மாள்! என்ன மயக்கமோ? இதோ தண்ணீரிருக்கிறது தெளியுங்கள் முகத்தில்.

(தண்ணீர் தெளித்தல்.)

சற்குணவழுதி:—கொஞ்சம் அம்மாளைத் தூக்கிக்கொள் அப்பா!

(வேடன் தூக்கி நிமிர்த்தலும், சுந்தரியார் மூர்ச்சை தெளிதல்.)

சுந்தரியார்:—ஹா! ஹா!

சற்குணவழுதி:—என் பிராண நாயகியே! எனக்குத் தைரியஞ் சொன்னாயே! நீ இவ்வாறு மூர்ச்சையடைந்து என்னைத் துன்பப்படுத்துதல் சரியாகுமோ? நீ யப்படியே யுயிர் துறந்திருப்பையாயின் யான்தான் பிழைப்பேனோ? இவையெல்லாம் எம்பெருமான் ஆஞ்ஞையாட்டேயன்றோ? "அவனின்றி யோரணுவும் அசையாது" என்ற பெரியோர் வசனம் பொய்த்துப் போகுமோ? என் முத்தே! ... கொண்டு சற்று இளைப்பாறுவாய்!

வேடன்:—ஐயா! இங்கே புலி, கரடி முதலிய பிராணிகள் சுற்றித்திரியுமே. இங்கே யிருக்கக் கூடாதே—

சற்குணவழுதி:—நாங்கள் சாகவேண்டியதும் கடவுளுக்கு இஷ்டமானால் அதுவும் நடந்தே தீரும். அதற்காக நாம் பயப்படுவதென்ன?

சுந்தரியார்:—அப்படியில்லை. நாம் நம்மாலான பிரயத்தனத்தைச் செய்தால் நடக்கிறபடி நடக்கட்டும். கடவுள் நம்முடைய செயல்கள் மூலமாகவேதான் நமக்கு நன்மையினையுந் தீமையினையும் விளைவிக்கிறார். ஆகையால் நாம் ஒன்றுஞ் செய்யாதிருந்தால் நமக்கு நன்மை விளைவதெப்படி?

சற்குணவழுதி:—என தருமைத் தலைவியே! நீ சொல்வனவெல்லாம் நியாயந்தான். நாம் இப்பொழுது தங்கி யிருப்பதற்கு இடம் எங்கே?

வேடன்:—ஐயா! நீங்கள் அதற்கு யோசனை செய்யவேண்டாம். இதற்கருகாமே இரண்டுநாழிகைவழித் தூரத்திலே ஒரு சாமியார் சாவடியிருக்கிறது. இப்போது உங்களைக் கூட்டிப்போய் அந்தச் சாமியார் மடத்திலே விட்டுப்போட்டு அப்புறம் வீட்டுக்குப்போகிறேன்.

சற்குணவழுதி:—அந்தச் சாமியார் பெயரென்ன?

வேடன்:—அது எனக்குத் தெரியாது. அவர்சாவடிமாத்திரந் தெரியும். வருகிறதென்றால் வாருங்கள்.

சற்குணவழுதி:—கொஞ்சம் பொறுத்துக்கொள், அப்பா! வருகிறோம்.—என், புறப்படுவமா?

சுந்தரியார்:—இன்னும் எவ்வளவுதூரம் இருக்கும்அப்பா! அந்தச்சாவடி?

வேடன்:—இதோ! கிட்டத்திலேதான் அம்மா!

சுந்தரியார்:—ஆனாற் சரி.

சற்குணவழுதி:—மெள்ள! மெள்ள!—என்கையைப் பிடித்துக்கொள்.

வேடன்:—நான் முன்னுக்குப் போகிறேன். பின்னுக்கு நீங்கள் மெதுவாய் வாருங்கள்.

(எல்லாரும்போதல்.)

மூன்றாங் களம்.

இடம்:—மேற்படி காட்டில் முனிவராச்சிரமம். காலம்—மாலை.

நடர்:—ஞானதீப முனிவரும், ஆன்மநாதரும்.

ஞானதீபர்:—அப்பா! ஆன்மநாதா! செய்யவேண்டிய காரியத்தையெல்லாஞ் செய்து விட்டாயா? சிவஞானபோத சூத்திரங்களை நேற்றுச் சிரவணம் பண்ணினாயே! இன்றைக்கு அவற்றை எல்லாம் மனனம் பண்ணிவிட்டாயா? மேற்போகலாமா?

ஆன்மநாதர்:—ஆக்ஞாப்பிரகாரம், சகல காரியங்களையுஞ் சம்பூர்ணப்படுத்திவிட்டேன். சிரவணம் பண்ணின சூத்திரங்களிற் சில மனத்தில் அவகாஹப்படவில்லை. ஆகையால் அவை முழுவதையும் மனனம் பண்ணத் தடைப்பட்டது. ஆகையாலென்னை மன்னித்து என்மீது மீட்டுங் கிருபை கூரவேண்டும்.

ஞானதீபர்:—அந்தப் பிரகாரமே, உனக்கு மறுபடியும் மனதிற் படும்படி கூறுகின்றேன். இதற்கு முன்னே ஸ்ரீஹரதத்த சிவாசாரியார் பழுக்கப் பழுக்க நெருப்பிலே காய்ந்த இருப்பு முக்காலியிலே வீற்றிருந்து திருவாய்மலர்ந்தருளிய சிவபாரம்ய நிரூபணசுலோக பஞ்சகம் படனமாயிற்றா?

ஆன்மநாதர்:—திருவுளப்பிரகாரம், படன மாயிற்று. கட்டளையளித்தாற் சொல்லுகின்றேன்.

(சற்குணவழுதி, சுந்தரியார் வேடன் இவர்கள் விளித்தல்.)

ஞானதீபர்:—அதிருக்கட்டும். யாரோ வாசலில்வந்து சாமி! சாமி! என்று கூப்பிடுகிறது போலத் தோன்றுகின்றது. அதென்னவென்றுபோய்ப்பார்த்துவா.

(ஆன்மநாதர்வெளியேபோய்வருதல்.)

ஆன்மநாதர்:—யாரோ இருவர், ஸ்திரீபுமான்கள், வெய்யிலாற் களைத்தவர், செவ்விய மேனியர், சிறந்த நோக்கினர், வாடிய முகத்தினர், அழுத கண்ணினர், வந்துளர். அவர்கள் சமீபத்தில் ஒருவேடனும் நிற்கின்றான்.

ஞானதீபர்:—அவ்விருவரும் ஒருவேளை நமது ஆசிரமத்தில் தங்கலாம் என்று வந்தார்கள் போலும்! நீ போய் அவர்களை யிங்கே யிட்டுக்

கொண்டு வந்து விட்டு விட்டு அவர்களுக்கு ஏதேனும் போஜனத்திற்கு ஏற்பாடு செய்.

ஆன்மநாதர்:—அப்படியே செய்கிறேன். (போதல்.)

(வேடனொழிய மற்று எல்லாரும் வருதல்.)

(முனிவரை யவர்கள் வணங்குதல்.)

ஞானதீபர்:—தீர்க்காயுஷ்மான் பவ!
தீர்க்க சுமங்கலா பவ!

நீங்களிருவரும் ராஜலட்சணங்களோடு கூடினவர்களா யிருக்கின்றீர்களே! உங்களுக்கு இந்தக் கதி சம்பவிப்பானேன்?

சற்குணவழுதி:—சுவாமிகாள்! அடியேன் பாண்டியதேசத் தரசனுவேன். ஆலாசிய க்ஷேத்திரவாசியா யிருந்தேன். சற்குணப் பெயரினேன். இவள் எளியேனது பாரியை யாவாள். சுந்தரிப் பெயரினள். தொண்டை நாட்டரசன் வீரமார்த்தாண்டனுடைய மகள். சோழதேசாதிபதி சூரசேனவர்மனாற் செயிக்கப்பட்டு இவ்வாரணியத்திற்குத் துஷ்ட மிருகங்களுக்கு இரையாகும்படி துரத்தப்பட்டோம். வழியிலொரு வேடனைச் சந்தித்தோம். அவனது உதவியால் தேவரீரது ஆசிரமத்திற்கு வந்துசேர்ந்தோம்.

ஞானதீபர்:—இச்செய்தி உமது மாமனாகிய தொண்டைநாட்டரசனுக்குத் தெரியாதோ?

சற்குணவழுதி:—தெரியாது. வெட்கம்பற்றி அவரிடம் உதவி கேட்கவில்லை. யானே போர்க்களஞ் சென்று யுத்தத்திற் றொலைவுண்டேன்.

ஞானதீபர்:—இப்போது இக்கதி அதனினும் வெட்கக் கேடாயிற்றே? இப்படி யிருக்கலாமா?

சற்குணவழுதி:—ஆம்! என்ன செய்வது?

ஞானதீபர்:—இப்போது உமக்குத் தொண்டை நாட்டிற்குப்போய் வதிய இஷ்டமா? அல்லது சோழநாட்டிற்குப்போய் வதிய இஷ்டமா? எனக்குத் தற்காலத்தில் ராஜரீகஞ் செய்து வருகின்ற வீரேந்திர சோழனைத் தெரியும்.

சற்குணவழுதி:—தேவரீரது இஷ்ட மெப்படியோ அப்படியே நடக்கக் காத்திருக்கின்றேன்.

ஞானதீபர்:—ஆனால் உங்களிருவரையும் சோழநாட்டிற்கு அனுப்புவதாய் யுத்தேசித்திருக்கின்றேன். அந்தப் பிரகாரமே செய்வீர்களென்று நம்புகின்றேன்.

சற்குணவழுதி:—ஆ! அப்படியே யாகட்டும்.

ஞானதீபர்:—அப்பா! ஆன்மநாதா!

ஆன்மநாதர்:—இதோ! வந்துவிட்டேன்.

ஞானதீபர்:—இவர்களிருவரும் தங்கி யிருப்பதற்கு வசதியான ஓரிடம்பார்த்து இவர்களுக்குக் கொடு. இவர்களுக்குப் போஜனமுதலானவைகளும் செய்துவை.

ஆன்மநாதர்:—ஆக்ஞாப் பிரகாரஞ் செய்கிறேன்.

(ஆன்மநாதர், வழுதி, சுந்தரியார் போதல்.)

நான்காங் களம்.

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்—காலை.

நடர்:—சூரசேனவர்மனும், சுசீலனும்.

சூரசேனவர்மன்:—நாம் இந்தப் பாண்டியநாட்டைக் கவர்ந்து மதுரையம்பதியை நமது இராசதானியாக்கிக்கொண்டு நவரத்தினங்களாலிழைக்கப்பெற்ற பொற்பீடத்தின் மீது வீற்றிருந்து நாமே அரசபுரிவது இத்தேசத்தார் யாவர்க்குஞ்சந்தோஷந்தானே! என்? சுசீலரே! கூறும் கேட்போம்.

சுசீலன்:—தாங்கள் சற்குண பாண்டியனைச் செயித்த மகாராஜா! தங்கள் இராஜரீகத்துக்குக் குறைசொல்லுவாரு முளரோ? இந்நகருளார் யாவரும் தாங்கள் இந்த மதுராபுரியையே தலைநகராகக் கொண்டோமென்று பறையறைவித்த அன்றையதினம் அடைந்த ஆனந்தத்திற்கோ ரளவுமுண்டோ?

சூரசேனவர்மன்:—என்ன! இன்னும் பாண்டியனையும் அவன் மனைவியையுங் காட்டில் துரத்திவிட்டு வரும்படி போன சேவகர்கள் வரவில்லை.

சுசீலன்:—சேவகர்கள் வருகிற சமயந்தான். இதோ வந்துவிடுவார்கள்.

சூரசேனவர்மன்:—நாம் அவர்களைக் காட்டில் துரத்திவிட்டு வரும்படி யுத்தரவு கொடுத்த சமாசாரம் ஊராருக்குத் தெரியுமோ?

சுசீலன்:—தெரியும்போலத்தான் தோன்றுகின்றது.

சூரசேனவர்மன்:—அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கக்கூடும்?

சுசீலன்:—எப்படித் தெரிந்ததோ? நமக்கென்ன? பயமா? அதொன்று மில்லையே?

சூரசேனவர்மன்:—நாம் பயத்திற்காகக் கேட்கவில்லை. தெரியக் கூடிய வழியெப்படியோ வென்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்.

சுசீலன்:—ஜனங்கள் ஏழைக்குடிகள்! அவர்கள்மேலும் நல்லவர்கள்.

சூரசேனவர்மன்:—சரி. அதற்கென்ன இப்போது? நயவசனரெங்கே? இதுவரையிலுங் காணோம்.

சுசீலன்:—இதோ வந்துவிட்டாரே! பாருங்கள். (நயவசனர் வருதல்.)

சூரசேனவர்மன்:—ஓ! நயவசனரே! உமக்கு வயது நூறு! நாங்கள் நினைக்கவும் நீரும் வந்தீரே!

நயவசனர்:—மகாராஜா அவர்கள் சமுகத்திற்கு அடியேன் வந்தனம்.

சூரசேனவர்மன்:—ரொம்ப சந்தோஷம். இப்படி யுட்காரும்.

நயவசனர்:—ஆக்ஞைப்படியே!

சூரசேனவர்மன்:—நாம் தோற்கடித்தோமே, இந்தப் பாண்டியன் அவன் புத்திரன்—அவன்பேரென்ன? சுந்தரானந்தன், ஆம் சுந்தரானந்தன். அவனுக்குத் தோழராகவும், வெளியிலே போகும்போது காவலாளராகவும், இரண்டு பேரை நியமித்தோமே அவர்களில் ஒருத்தன் உமது குமாரன் - மற்றொருவன் - சுசீலர்வகையோ? சரிதான், சரிதான். என்னத்திற்காகக் கேட்டேனென்றால் தெரியாதவர்களாயிருந்தால் ஒருவேளை அவனுக்கு உடன்பாடாயிருந்து ஏதேனும் விபரீதஞ்செய்யக்கூடும். அதற்காகத்தான்.

நயவசனர்:—(தனக்குள்) எவ்வளவு வஞ்சகன்! படன்! சூதுக்காரன்! கொலைபாதகன்!

சுசீலன்:—அதெல்லாம் கவனமாயிருப்பது நியாயந்தானே.

சூரசேனவர்மன்:—என் ஐயா சுசீலரே! உம்முடைய வகை மனுஷன் பெயரென்ன?

சுசீலன்:—எவனைச் சொல்லுகின்றீர்கள்?

சூரசேனவர்மன்:—அவன்தான் சிறைச்சாலையிலேகிடக்கின்றானே! அவன் தோழன்.

சுசீலன்:—என்னுடைய தமக்கை பிள்ளைதான்; அவன் பெயர் சுகுமாரன்.

சூரசேனவர்மன்:—இந்த ஊரிலே நல்ல தமிழ் வித்துவான்கள் இருக்கின்றார்களா?

சுசீலன்:—ஏன் அதற்கென்ன? சமஸ்தானகவியும் மகா வித்துவானுமாகிய வித்தியாசாகரப்புலவர் இருக்கின்றார்.

சூரசேனவர்மன்:—நாம் பாண்டியனோடு புரிந்த யுத்தத்தில் அடைந்த வெற்றியைப் பற்றிக் கவிபாடும்படி அவர்க்கு உத்தரவு கொடுக்க வேண்டும். அப்படியல்லாவிட்டால் நம்முடைய கருவூர்ச்சமஸ்தான வித்வான் வல்லணக்கிளந்தியப்புலவருக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்.

சுசீலன்:—ஆகட்டும். அந்தப்படியே வித்தியாசாகரப் புலவரிடந் தங்களுடைய உத்தரவினைத் தெரிவிக்கின்றேன்.

(சேவகன் வருதல்.)

சேவகன்:—மகாராஜா அவர்கள் சமுகத்திற்கு ஆயிரங்கோடி வந்தனம்.

சூரசேனவர்மன்:—ஏ! சேவகா! ஏன் இவ்வளவு தாமஸம்?

சேவகன்:—மகாராசா! அவர்களைக்கூட்டி வெகு தொலை போய், வந்த வழி தெரியாமே, நடுக்காட்டிலே, வெய்யிலு கொளுத்தக் கொளுத்தக் கொண்டு விட்டு விட்டு வந்தேன். அது தான் நேரமாயிற்று.

சூரசேனவர்மன்:—நேற்றே போனாயேடா?

சேவகன்:—ஆமாம். மகாராசா! நான்திரும்பி வருகிற போது இருட்டிப் போய்விட்டது. அதுதான் இப்போது வந்தேன். இல்லாவிட்டால் அப்போதே வந்திருப்பேன்.

சூரசேனவர்மன்:—நீ அவர்களைக் காட்டிலே தூரத்திவிட்டு வருகிறபோது அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள்? உள்ளதைச் சொல்ல வேண்டும். இல்லாவிடில் உன் தலையை யிந்த வாளினால் துண்டித்துப் போடுவேன். (வாளையோச்சுதல்.)

சேவகன்:—மகாராசாவே! நான் அவர்களைக் காட்டிலே விட்டவுடனே அவர்கள் கோவென்று வாய்விட்டுக் கதறினார்கள். அந்தச்சமயத்தில் புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் வந்து திரியும்போலத்தோன்றிற்று. காடோ வெகு பயங்கரமாயிருந்தது. ஆகையினாலே, எங்கே புலி என்னையும் அடித்துக்கொண்டு போய்விடுமோ என்ற அச்சத்தினாலே நான் என்னாலியன்றமட்டும் வெகு வேகமாய் ஓடி வந்துவிட்டேன்.

சூரசேனவர்மன்:—அவர்கள் என்னேடா பேசிக்கொண்டார்கள் என்று கேட்டால் இவற்றையெல்லாம் உன்னை யார் சொல்லச்சொன்னார்கள்? எடா! அவர்கள் பேசிக் கொண்டதைச் சொல்லுகின்றாயா என்ன? இப்போது.

சேவகன்:—மகாராசாவே! நீங்கள் என்னைக் கொன்றாலுஞ்சரி விட்டாலுஞ்சரி. நான் உள்ளதைத்தான் சொல்லுகிறேன். பொய்சொல்லவில்லை, அவர்கள் விம்மி விம்மி யழுதார்களேயொழிய வேறொன்றும் பேசவில்லை.

சூரசேனவர்மன்:—நிஜந்தானா?

சேவகன்:—ஆமாம். மகாராசா! நிசந்தான்.

சுசீலன்:—மகாராஜா அவர்களுக்கன்றோ நான்சொல்லுவது?

சூரசேனவர்மன்:—என்னசொல்லுகிறீர்? சுசீலரே! சொல்லுங்கேட்போம்.

சுசீலன்:—அவர்கள் நடுக்காட்டிற் போன உடனே அவர்களுக்கு அழத் தோன்றுமே தவிர வேறொன்றும் பேசத் தோன்றாது. அவர்கள் தாங்கள் அடைந்த துன்பங்களை நினைக்கும்போதெல்லாம் தங்களை

அறியாமலே அழுவார்கள். அழுகை, அதி யோய்ந்த பிறகுதான் ஏதாவது பேசுகிறதற்கும், யோசனை செய்வதற்கும் தோன்றும். அதற்கு முன்னே யொன்றும் முடியாது. இந்த விஷயங்களையெல்லாம் கொஞ்சம் மானசதத்துவலட்சணம் யோசித்தவர்கள் எளிதிலுணர்வார்கள். மேலும் தங்களுக்கு இந்தமாதிரியான துர்ப்பாக்கியங்களை அனுபவிக்கும்படி நேரிடவும் இல்லை. ஆகையினால்தான் தங்களுக்கு இது புதிதாகத்தோன்றுகின்றது.

சூரசேனவர்மன்:—நமக்கேன் இந்த மாதிரியான கஷ்டங்களெல்லாம் வரும்? நாம்தாம் எப்பொழுதும் எவன் யுத்தத்திற்கு வந்தபோதிலும் சன்னத்தரா யிருக்கிறோமே! நமக்கென்ன?

சுசீலன்:—தங்களுக் கேதாவது வருமென்று சொல்லவில்லை. தாங்கள் இதை யனுபவித்தே யறியீர்களென்றுதான் சொன்னேன்.

சூரசேனவர்மன்:—ஆம். சுசீலரே! நாம் அனுபவித்ததே இல்லை.

சுசீலன்:—நான் இந்த விஷயத்தைச் சொன்னது என்னத்திற்காக வென்றால் நம்முடைய சேவகன் சொல்லுகின்றனவெல்லாம் வாஸ்தவந்தான் என்று காட்டும் பொருட்டுத்தான். மேலு மிவன் பொய்கள் சொல்லுகிறவன் அல்லன்.

சூரசேனவர்மன்:—ஏ! சேவகா! போடா சரிதான்.

(சேவகன் போதல்.)

சூரசேனவர்மன்:—சுசீலரே! நம்முடைய எண்ணஞ் சரியாய் முடிந்துவிட்டதன்றோ? இனி நாம் போகலாமா? என்ன? நயவசனரே! மௌனமா யிருக்கின்றீர்!

நயவசனர்:—சகலமும் சரிதான். மகாராஜா அவர்கள் செய்யுங் காரியங்களுக்குக் கேட்பானேன்!

சுசீலன்:—சரி. எழுந்தருளலாமே! அவ்விடத்து உத்தரவு எப்படியோ?

சூரசேனவர்மன்:—ஏன்? போகலாம்போகலாம்.

(எல்லாரும் போதல்.)

ஐந்தாங் களம்.

இடம்:—நயவசனர்வீடு. காலம்—பிற்பகல்.

நடர்;—நயவசனரும், சிலகளவாளர்களும்.

முதற்களவாளன்:—ஏன்? ஐயா! நயவசனரே! நாம் இதுவரையிலும் இந்தச் சூரசேனவர்மனை நீதிமானு யிருப்பானென்று எண்ணி இருந்ததற்கு நேர் விரோதமாக நம்முடைய பூர்வராஜா சற்குணவழுதியையும், அவர் மனைவியையும் சிறைச்சாலையில் தான் அடைத்திருக்கிறான் என்றறிந்தோம்! இன்றைக்கு நான் விசாரித்த போது வேறுவிதமாக

மந்திரி சுசீலர்வீட்டு வேலைக்காரர்கள் பேசிக் கொண்டார்களாம்; அதைக் கேட்டு என்னுடைய வேலைக்காரன் இன்று என்னிடஞ் சொன்னான். அது என்ன நிஜமாயிருக்குமா?

இரண்டாங்களவாளன்:—என்ன ஐயா! நீர் என்னவோ சொல்லுகிறீர்? நாம் நாளைக்கே தகுந்த ஏற்பாடுகள் செய்து இந்த மகாபாவியை ஊரை விட்டுத் துரத்திவிட்டு வழுதியாரைக் கூப்பிடுவோம். நீர் மாத்திரந் தைரியமாயிரும். ஒருகை பார்ப்போம்!

நயவசனர்:—ஆம். அதெல்லா மிருக்கட்டும். நீங்கள் உங்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் இந்த மாதிரி கண்டபடி பேசுவதிற் பிரயோசனமில்லை. சூரசேனவர்மனோ, போர் வீரரோடு இப்போ திங்கிருக்கின்றான். அந்தப் போர்வீரர்களை வேறு எங்கேயாவது அனுப்புவதற்குத் தகுந்த யுக்திகள் செய்து அவர்கள் போன பிறகு நீங்கள் கலகமோ கிலகமோ ஏதோ செய்து ராஜாவை—தீர்த்து விட்டீர்களானால் அப்புறம் எல்லாம் சரியாய்ப்போம்.

மூன்றாங்களவாளன்:—போம், ஐயா! போம். கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து அது உருகி அப்புறம் கொக்குப் பிடிக்கிற திருக்கட்டும்! நீங்கள் மாத்திரம் பேசாதிருங்கள். நான் தைரியமாய் ராஜ வீதியிற் பவனிவரும்போது இவ்வீட்டியிற் குத்தி—போடுகிறேன். அப்புறம் மேல்நடக்கிறதைப் பார்த்துக்கொள்வோம். என்னை வேண்டுமென்றாற் கொல்லுவார்கள். நான்போனாற் போகின்றேன்!

முதற்களவாளன்:—எல்லாவற்றிற்கும் நாம் அவசரப்படக்கூடாது. நயவசனர் கூறுவதையுங்கேட்டு நன்றாய் ஆலோசனை பண்ணி அப்புறம் நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். பதறாத காரியம் சிதறாது! ஆமாம்! பார்த்துக்கொள்ளும்.

இரண்டாங்களவாளன்:—அவருடைய தாற்பரியம் என்னவென்றால்:—நா மசஞ் செய்வோமானால் ஒருவேளை அரசனுக்குத்தெரிந்து அவன் மிகவும் சாக்கிரதையாயிருந்துவிடுவானாகில் தாம் நினைத்த எண்ணம் நிறைவேறாது போய்விடுமேயென்பதுதான், வேறொன்றுமில்லை.

முதற்களவாளன்:—இவ்வளவும் அரசனுக்குத் தெரிந்தால் தானே காரியம் நிறைவேறாது போகும்?

இரண்டாங்களவாளன்:—என்னவோ? யார் யாரை நம்பலாம்? எவனெப்படியோ? அரசனுடைய பிரீதி சம்பாதிக்கிறதற்காக எந்த வஞ்சகனுவது இந்த யோசனையைப் போய் அந்தப் பாதகனிடஞ் சொல்லி வைக்கட்டும். அதைவிட வேறுவினை வேண்டாம். நமக்குத்தான் கேடென்று நினைக்கவேண்டாம். நயவசனருக்குங் கெடுதல்; ஊர் முழுவதுஞ் சுட்டுப்பொசுக்கிச் சாம்பலாக்கிப்போடுவான்.

நயவசனர்—ஆமாம். அதற்காக இப்போது என்னசெய்யவேண்டுமென்கிறீர்?

மூன்றாம்மனவாள்:—அதுதான் நான் அப்போதே பிடித்துச் சொல்லுகின்றேனே! அவனை—சாய்க்க நாளாயிற்று என்றேனே!

நயவசனர்:—எல்லாவற்றிற்கும் நானொன்று சொல்லுகின்றேன், கேளுங்கள். இன்றைக்கு இந்த சமாசாரத்தை, உங்களுடைய யோசனையை, நம்முடைய இளவரசன் சந்தரானந்தனுக்கு என்னுடைய குமாரன் சந்திரமுகன் மூலமாகச் சொல்லி யனுப்புவோம். சகலத்திற்கும் அவன் என்ன சொல்லுகின்றானோ அதையுங் கேட்டு நடப்போம். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? உங்களுக்கு எல்லாம் இப்படிச் செய்யச் சம்மதந்தானா?

எல்லாரும்:—பரமசம்மதம்! அப்படியேசெய்வோம்.

நயவசனர்:—ஆனாற் சந்திரமுகனுடைய என்னுடைய குமாரனிடஞ் சொல்லி யனுப்பிச் சந்தரானந்தனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு உங்களுக்கு யான நாளைக்குச் சொல்லுகிறேன். இந்த விஷயம் இரகசியமா யிருக்கட்டும். வெளிப்படுத்திவிட்டீர்களானால் பத்திரம்! பத்திரம்!

எல்லாரும்:—அந்தப்படியே மிகவுஞ் சாக்கிரதையாயிருக்கிறோம். அதைப் பற்றி நீங்கள் யோசிக்கவேண்டாம்.

நயவசனர்:—ஆனால் நாம் பிரியலாமே.

எல்லாரும்:—சரி, போவோம் வாருங்கள்.

(எல்லாரும்போதல்.)

முதலங்கம்முற்றிற்று.

அங்கம்-II.

முதற்களம்.

இடம்:—மூற்கூறிய பூஞ்சோலை. காலம்—மாலை.

நடி:—நபாவதி.

நபாவதி:—மலர் கொய்யப்போன அம்புஜாட்சியுங் கனகமாலையும் இவ்வளவு நேரமாயும் ஏன் வரவில்லை?

"மின்னிகரா மாதே விரைச்சார் தடம்புனர்ந்து
நின்னிகரா மாதவிக்க னின்றருணி—நன்னிகராஞ்
செந்தி வரமலருஞ் செங்கழுநீர்ப் போதுடனே,
யிந்தி வரங்கொணர்வோம் யாம்."

என்று கூறிய தங்கள் வார்த்தையை மறந்து விட்டார்களோ?—(மௌனம்) அவ்விடத்தில் ஒரு மயில்கலாபம் விரித்து ஆடுகின்றது. அதைச் சென்றுபோய்ப் பார்ப்பேன். அதற்குள் இவர்களும் வரட்டும்.

(எழுந்து சிறிதுதூரம் போதல்.)

இதென்ன புதுமை! இவ்விடத்தை மிதித்த உடனே என்னுடைய தேகம் புளகிக்கின்றதே! அந்தோ! இதுவன்றோ சந்தரானந்தன் சேர்ந்து இருந்த இடம்? இங்குதானே அவன் மூர்ச்சித்து விழுந்தது?—என்னுடைய தகப்பனாரும் இத்தனைகொடியவரோ?—அவனுடைய ரூபம் என் கண்ணுக்கு எதிரே சித்திரத்திற் போலத் தோன்றுகின்றதே! ஏ! சந்தரானந்தனே! நேற்று முதல் நான் தரிசித்ததுமுதல் உன்னை ஸ்பரிசிப்பது எக்காலமோ எக்காலமோ என்று ஏங்கி ஏங்கி வருந்துகின்றேன்! நேற்றிராத்திரிமுழுவதும் [illegible] வரவில்லை! எழுந்து நிலாமுற்றத்தில் உலாவினேனே. ஐயோ! கொஞ்சமேனுங் கருணையென்பதில்லாமற் சந்திரன் என்னைக் காமாக்கினியினால் தபிப்பிக்கிறான்! என்ன செய்வேன்? மீட்டும் படுத்துக்கொள்வேன்! எழுந்திருப்பேன்! உலாவுவேன்! இப்படி ராத்திரியைக் கழித்தேன். இன்று என்னசெய்வேனோ?—என்னுடைய ஆசைக்கண்ணாளன் சந்தரானந்தன் ஒருவேளை இன்றைக்கும் வருவானோ? வந்தால் யான் அவனை இன்றொருதரமாவது தரிசனம் பண்ணி யாறுவேன்!

தேனைமா மயில்கா ளென்னைச் சந்தரா னந்தன் வந்தாற்
கோகிலங் காள்சகங்கா ளுயிர் [illegible] செய்தே

(மௌனம்.)

என்னுடைய தோழிமார் ஒருவேளை இதைக்கேட்டுக்கொண்டு வருவார்களோ? ஐயோ! என்னுடைய இந்தச் செய்கையெல்லாம் என்

தகப்பனருக்குத் தெரிந்துவிட்டால் என்னசெய்வேன்? நாணமடைவதேயன்றி என் அருமைச் சுந்தரானந்தனுக்கும் கேடு விளையுமே! அம்மா! ஓ! கொடுமை! கொடுமை!—அதோ அம்புஜாட்சியவருகின்றாள். இனிமேல் நான் இதைக்குறித்துப்பேசப்படாது.—

(அம்புஜாட்சி வருதல்)

அம்புஜாட்சி! என் இவ்வளவு தாமஸம்?

அம்புஜாட்சி:—என்னவோ? அம்மா! கனகமாலையும் நானும் இரண்டுபேருமாய்ப்போனோம். அவளை யெங்கேயோ காணேன். இதுவரைக்கும் வருவாள் வருவாளென்று காத்துக்கொண்டிருந்தேன். இன்னும் வரவில்லை. ஒருவேளை எனக்கு முந்தியே இங்கே வந்துவிட்டாளோ என்று நினைத்து வந்தேன். அவள் இங்கேவந்தாளோ?

(கனகமாலைவருதல்.)

ரூபாவதி:—நீ அப்படித் திரும்பிப்பார் யாரென்று?

அம்புஜாட்சி:—என்னேடி அம்மா! கனகமாலை! இதுவரைக்கும் எங்கேபோயிருந்தாய்? உனக்காக எவ்வளவுநாழிகை காத்துக்கொண்டிருக்கிறது? ரூபாவதி தனியாயிருக்கிறாளே என்று வந்துவிட்டேன். என்பேரிலே ஏதாவது கோபமோடி அம்மா?

கனகமாலை:—இதற்குக் கோபமென்னகோபம்? நீ என்னபெரிய தலைபோறகாரியஞ் செய்துவிட்டாய்? அழகு நான் உன்னை கோபித்துக் கொள்ள! என்னவோ! இப்படியே போனேன். அங்கே யோரிடத்தில் இரண்டுமான்கள் துள்ளிவிளையாடின! அந்தவேடிக்கையைப் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டேன். அதுதான் கொஞ்சம் தாமஸமாய்விட்டது. நம்முடைய ரூபாவதியை வெகுநாழிகை காக்கும்படிச்செய்து விட்டோமே என்று வருத்தப்படுகிறேன்.

ரூபாவதி:—இந்த அற்பகாரியத்திற்காக நீ வருத்தப்படுவானேன்? நானும் அங்கே யொரு மயில் அழகாய்த் தோகை விரித்தாடிற்று! அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அம்புஜாட்சி:—ஏன்! ரூபாவதி! நான் ஒன்று கேட்கிறேன், கோபித்துக் கொள்ளாதிருந்தால் சொல்லுகிறேன்.

ரூபாவதி:—கோபித்துக் கொள்ளுகிறதென்ன? சொல்லேடி சொல்லேன்.

அம்புஜாட்சி:—அப்படி யொன்றுமில்லை. வேடிக்கையாய்த்தான் கேட்போமென்று நினைத்தேன்.

ரூபாவதி:—அதைத்தான் இன்னதென்று சொல்லேன் பார்ப்போம்! சீக்கிரம் சொல்லு.

கனகமாலை:—அவள் எப்பொழுதும் இப்படித்தான் கொஞ்சம் வீண்பிகுச்செல்லாம் பண்ணுவாள்.

அம்புஜாட்சி:—அப்படி எத்தனை நாள் அம்மா! உன்னிடத்தில் நான் பிகுக்குப் பண்ணியிருக்கிறேன்?

ரூபாவதி:—வெகு நன்றாயிருக்கிறது! அதென்ன? நீயும் ஆரம்பித்து விட்டாய்! அவள்தான் சொன்னாற் சொல்லட்டுமே! அவளுக்கு உன்னைச் சொல்லப் பாத்தியமில்லையா? என்ன?

அம்புஜாட்சி:—சொன்னால் சொல்லுகிறாள். அதற்கொன்றுமில்லை. நான் சொல்லவந்ததென்னவென்று கேட்டால் உன் முகம் என்னவோ கொஞ்சம் வாட்டம் அடைந்ததுபோலக் காணப்படுகின்றதே! அது என்னத்தினாலே என்று கேட்கத்தான் வாயெடுத்தேன். அதற்குள்ளே கனகமாலை நான் பிகுக்குப் பண்ணுவதாக நினைத்துக்கொண்டாள்.

ரூபாவதி:—அது தான் அவள் விளையாட்டாய்ச் சொன்னாள், நீ யேன் அதை மறுபடியும் மறுபடியும் தூண்டித் தூண்டிச் சொல்லுகிறாய்? என்னவோ! விட்டு வேறே யேதாவது பேசு.

கனகமாலை:—அம்புஜாட்சி! நான் உன்னைத்தெரியாதே சொல்லிப்போட்டேன் அம்மா? இவ்வளவுதூரஞ் சொல்லுவாயென்று தெரிந்திருந்தால் நான் பேசியிருக்கவே மாட்டேன்.

ரூபாவதி:—சரி, நீங்கள்தாம் வாதிப் பிரதிவாதிகளாம். நான்தான் நியாயஞ் சொல்லவேணும். எங்கே இரண்டு பேரும் உங்கள் வழக்கைச்சொல்லுங்கள்! கேட்டுத் தீர்மானம் சொல்லுவோம்!

அம்புஜாட்சி:—என்னேடியம்மா! நீ கேலி பண்ணுகிறாயே யொழிய நான் கேட்டதை விட்டு விட்டாயே.

ரூபாவதி:—நீ அப்படி என்ன கேட்டாய்? எனக்கொன்றும் ஞாபகம் இல்லையே!

அம்புஜாட்சி:—ஞாபகமில்லையா? சரிதான், நீ எங்களுக்கெல்லாம் சொல்லுவாயா அம்மா?

ரூபாவதி:—நீ கேட்டதே யின்னதென்று தெரிந்தாலன்றோ நான் சொல்லக்கூடும் அம்மா? வீண்பேரிற் கோபித்துக் கொள்ளுகிறதிற் பயனில்லை.

அம்புஜாட்சி:—இதோ சொல்லுகிறேன் இன்றைக்குநாம். கவனமாய்க்கேளு. உன் முகத்தில் என்றும் இருக்கிற சந்தோஷக்களையைப் பின்னைக்கு என்னவோ காணோம்! அதின் காரணமென்ன? சொல்லு.

ரூபாவதி:—அதின் காரணமோ—(மௌனம்.)

கனகமாலை:—என்ன யோசிக்கிறாய்? சொல்லு.

அம்புஜாட்சி:—என்ன இது? அழுகிறாயா? என்ன? ஏன் அம்மா! நாங்கள் இருவரும் உன்பக்கத்தில் உனக்குத்துணையா யிருக்கிறபோது நீ யழ

வேண்டிய காரணமென்ன? உன்னை நாங்கள் யாரும் என்னவாவது சொன்னோமா? இல்லாமற் போனால் நாங்கள் இவ்வளவு நாழிகையாயுன்னைத் தனியாய் விட்டுவிட்டுப் போய்விட்டோமென்று விசனப்படுகிறாயா? அப்படி இல்லாவிட்டால் ஏதாவது மிருகங்களைக் கண்டு நீ பயந்திருக்கலாமென்று சொல்ல ஏதுவுமில்லையே. என்னருமைத் தங்கையே! ரூபாவதி! நீயிவ்வாறு வருத்தப்படுவதை நாங்கள் பார்த்துக்கொண்டிருப்போமோ? உன் மனத்திலிருக்கிற துன்பத்தை நீயெங்களிடத்திற் சொல்லத் தகாதோ?

ரூபாவதி:—எனக்கு அதைச் சொல்ல நாக்கெழவில்லை—(மௌனம்)

(கண்ணீர்விடுத்தல்.)

அம்புஜாட்சி:—ஏ! கனகமாலை! நம் ரூபாவதி மெய்யாகவே அழுகின்றாள்! நீ மற்றைத் தோழிமாரையும் கூப்பிடுகிறாயா?

(இரங்கிப்பாடுதல்.)

கரும்பிழி சாறொக்குங் கனிமொழி யோடு
முருக்கினை மானு முறுவலும் பூத்து
வருந்தா திருந்தவ ளின்றே வருந்தி
யிருந்தா ளிருந்தவா காணீரே யெழிலுடை யீர்வந்து காணீரே.

பண்கனி கூர்ந்தினி பாடுங் குழலினள்
விஞ்சொ ளமுதமு மெவு மதரத்
தென்பு கொளவரு நந்தம்ரூ பாவதி
கண்க ளிருந்தவா காணீரே காரிகை யீர்வந்து காணீரே.

கனகமாலை:—அம்புஜாட்சி! இந்தச் சோலையிலே ஒரு வனதேவதையுண்டென்று சொல்லக் கேட்டிருக்கிறோமே! எங்கே அதுதானொருவேளை யிவள் தனியாயிருக்கும்போது வந்து பயமுறுத்திவிட்டுப் போயிற்றோ? என்னவோ?

அம்புஜாட்சி:—எனக்கு அப்படி யிருக்குமென்று தோன்றவில்லை. அப்படியாயின் இப்படிச் சொல்லமாட்டாள். எல்லாவற்றிற்கும் என் ரூபாவதி! உள்ள காரணத்தை எங்களுக்கு வெளியிடக் கூடாதா? நாங்கள் உன் தோழிகளல்லவோ?

ரூபாவதி:—(கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அது ஒன்றும் அவ்வளவு விசேஷமில்லை. நாம்போக வேண்டாமா? நமக்கு நேரமாக வில்லையா? (சுந்தரானந்தன் வந்து ஒளிந்து நிற்றல்.)

கனகமாலை:—நேற்று வந்தார்களே! அந்தப் பிள்ளைகள் இன்றைக்கும் ஒருவேளை வந்தாலும் வருவார்கள். சற்றே இருந்து வேண்டுமென்றாற் பார்த்துவிட்டுப் போவோம். ஏதாவது விசனப்பட்டுப்பேசுவார்கள். கேட்போம்.

ரூபாவதி:—அவர்களைப் பார்வை என்ன? கொம்பு முளைத்திருக்கிறதோ?

அம்புஜாட்சி:—கனகமாலைதான் சொல்லுகிறாளே. இருந்துதான் பார்த்துவிட்டுப்போவமே. என்னவோ? அப்பாவி! சுந்தரானந்தன், அவனை நினைக்கிற போதெல்லாம் எனக்கு விசனமாயிருக்கிறது. அவன் தலையிலே பிரமா இப்படிக் கஷ்டப்படும்படி எழுதிவிட்டான்!

ரூபாவதி:—(விசனத்தை அடக்கிக்கொண்டு) நேற்று அழுது மூர்ச்சைபோட்டு விழுந்தானே! அந்தப் பிள்ளையா?

கனகமாலை:—ஆமாம்! அவன்தான்! அழகாய் இன்னொருத்தன் மடியிலே சாய்ந்து கொண்டிருந்தவன்!

ரூபாவதி:—அடி! கனகமாலை! நீ இப்போது சொன்னாயே இந்தச் சுந்தரானந்தன், அம்புஜாட்சி அத்தைபிள்ளை சுகுமாரன் இவர்கள் இரண்டு பேர்களிலும் யார் அதிக அழகுள்ளவர்?

கனகமாலை:—சுந்தரானந்தன் தான். சொல்லுகிறதற்குக் கேட்பானேன்?
(சுகுமாரனும் சுந்தரானந்தன் இருக்குமிடம்வந்து ஒளிந்து நிற்றல்.)

சுந்தரானந்தன்:—(மறைவில்) கொஞ்சம் பேசாதிரு!

ரூபாவதி:—இராஜா பிள்ளை என்று சொல்லுகிறாயோ?

கனகமாலை:—எனக்கென்னடி அம்மா! ராஜ ராஜாபிள்ளையாயிருந்தால் இப்போதென்ன அதற்கு?

ரூபாவதி:—அப்புறம், அம்புஜாட்சி சண்டைக்கு வரப்போகிறாள்! சுகுமாரனுக்குச் சுந்தரானந்தனுடைய அழகில்லை என்று சொல்லுகிறாயே!

கனகமாலை:—ஏதம்மா! நீயே சண்டையிழுத்துவிடுவாய் போலிருக்கிறதே!

அம்புஜாட்சி:—என்ன! ரூபாவதி! இப்படிக் கேலிபண்ணுகிறாய்?

ரூபாவதி:—சரி. இதெல்லா மிருக்கட்டும். கனகமாலை! நான் ஒன்று கேட்கிறேன். சொல்லுவாயா?

கனகமாலை:—என்ன? கேளு! சொல்லக்கூடியதாயிருந்தாற் சொல்லுகின்றேன்.

ரூபாவதி:—அம்புஜாட்சிதான் அவள் அத்தைபிள்ளை சுகுமாரனுக்கு வாழ்க்கைப்படப்போகின்றாள். நீ யாருக்கு வாழ்க்கைப்படப்போகிறாய்? சுந்தரானந்தன்தான் வெகு அழகாயிருக்கின்றானே! நீ ஏன் அவனைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது?

அம்புஜாட்சி:—அப்படிச்சொல்லப்போனால் ரூபாவதி! உனக்கும் அவனுக்குந்தான் சரி சரியாயிருக்கிறது. உன்னுடைய அழகுக்கு ஏற்றவன்தான் அவனும்! அவனுடைய அழகுக்கு ஏற்றவள்தான் நீயும்!

ரூபாவதி:—கனகமாலையும் என்ன? அழகிற்குறைந்தவளோ? அவளும் அவனுக்கு ஏற்றவள்தான்! ஒருவேளை அவன் இப்போது சிறைச்சாலையிலிருக்கின்றானே என்று எண்ணுவளோ என்னவோ?

கனகமாலை:—அதெல்லாம் வீண்பேச்சு என்னத்திற்கு? ரூபாவதி! உனக்கு இஷ்டமிருந்தால் அவனுக்கு வாழ்க்கைப்படு!

ரூபாவதி:—சரி. அம்புஜாட்சி! கனகமாலைகூட வீண்பேச்சு என்று சொல்லுகின்றாள்! நேரமாகிறது. வீட்டிற்குப்போகவேண்டும்.

அம்புஜாட்சி:—ரூபாவதி! நீ ஒரு பாட்டுப்பாடுவாய் என்று நினைக்கிறேன்.

கனகமாலை:—எங்கே! ரூபாவதி பாடு பார்ப்போம்.

ரூபாவதி:—(பாடுதல்)

பெருமான்வந் தானென்று பேசுவாய் கிளியே
பேரு மொழிந்திடப் பேசுவாய் கிளியே
மருமலர் வீசிடப் பேசுவாய் கிளியே
வந்தது தென்றலும் பேசுவாய் கிளியே.

போதன்வந் தானென்று பேசுவாய் கிளியே
புன்கண்மை போகவே பேசுவாய் கிளியே
நாதன்வந் தானென்று பேசுவாய் கிளியே
நாளும் மகிழ்ந்திடப் பேசுவாய் கிளியே.

ம[illegible]ளிகூடிட வாடுவாய் மயிலே
மாட்சியன் வந்தானென் றாடுவாய் மயிலே
யழகினன் வந்தானென் றாடுவாய் மயிலே
யாவர்ந்தம் வந்ததென் றாடுவாய் மயிலே.

வள்ளலும் வந்தானென் றாடுவாய் மயிலே
மதன்வாதை நீங்கிற்றென் றாடுவாய் மயிலே
விள்ள மலர்மண மாடுவாய் மயிலே
வீசும் பொழிலகத் தாடுவாய் மயிலே.

தலைவன்வந் தானென்று கூவுவாய் குயிலே
தன்னை மறந்திடக் கூவுவாய் குயிலே
கலைஞன்வந் தானென்று கூவுவாய் குயிலே
களிமிகுந் தாடிடக் கூவுவாய் குயிலே.

இறைவன்வந் தானென்று கூவுவாய் குயிலே
யென்னை யணைந்திடக் கூவுவாய் குயிலே
சிறையினை நீங்கியே கூவுவாய் குயிலே
சேர மனத்தெண்ணிக் கூவுவாய் குயிலே.

அம்புஜாட்சி:—பாட்டு வெகு ஸ்வாரஸ்யமா யிருக்கிறது. இது பாடினவர் யார்? தெரியவில்லையே.

ரூபாவதி:—நான்பாடுகிற பாட்டுக்களெல்லாம் எங்கள் கருவூரிலிருக்கும் வித்துவான் ஸ்ரீவாக்கனகசிவப்புலவர் செய்த பாட்டுக்கள்.

கனகமாலை:—இன்றைக்கு நாம்வந்து வெகு நாழிகையாய்விட்டது. ஆகையினாலே நாம் சீக்கிரம் போகவேண்டும் அம்மா!

ரூபாவதி:—சரி. என் அம்புஜம்! போவமே!

அம்புஜாட்சி:—குறைப்பெயராய்க் கூப்பிட்டாயானால் உனக்குக் குறைப்பிள்ளைதான் பிறக்கும்! பார்த்துக்கொள்.

ரூபாவதி:—அப்படியே பிறந்தாலும் ஒன்றுதானே யப்படிப்பிறக்கும். போகட்டும் மற்றைப்பிள்ளைகளாவது நன்றாய்ப்பிறக்குமே யில்லையோ? அது போதும்.

அம்புஜாட்சி:—ஏன்? தாமஸம் என்ன? போகலாமே.

ரூபாவதி:—தாமஸமொன்று மில்லை. போகலாம் போகலாம். அம்புஜாட்சி! நீ யின்றிராத்திரிமாத்திரம் எங்கள் அரண்மனையிலே யிருந்து என்னோடிருந்துவிட்டு விடியற்காலம் நீ உன் வீட்டிற்குப்போகலாமே.

அம்புஜாட்சி:—அப்படியானால் நானிப்போன வீட்டிற்குப்போய் என் தகப்பனாரிடம் அநுமதி பெற்றுக் கொண்டுவந்து விடுகிறேன்.

(ரூபாவதி, அம்புஜாட்சி, கனகமாலை யிவர்கள்போதல்.)

(சுந்தரானந்தனுஞ் சுகுமாரனும் வருதல்.)

சுகுமாரன்:—நீ வந்து வெகு நாழிகையாய் விட்டதோ? என் சுந்தரானந்தா! இப்பொழுது பேசிக் கொண்டிருந்தார்களே யிந்த மூன்றுபெண்களும் இன்னார் என்று உனக்குத் தெரியுமா?

சுந்தரானந்தன்:—மந்திரி சுசீலர் பெண் ஒருத்தி; அவள்தான் உன் மாமா பெண். அது நிச்சயமாய்த்தெரிகின்றது. மற்றையிரண்டுபேரும் யாரோ? நன்றாய்த் தெரியவில்லை.

சுகுமாரன்:—பாட்டுப் பாடினவள்தான் என்னுடைய மாமாபெண். அவள் பெயர் அம்புஜாக்ஷி—

சுந்தரானந்தன்:—அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து அவள்பெயர் இன்னதென்று நான் தெரிந்து கொண்டேனே! அவள்பெயரை நீ யொருதரஞ் சொல்லுவானேன்? சரிதான். அந்தப் பெயரை யுச்சரிப்பதில் உனக்குக் கொஞ்சம் சந்தோஷம் போலும்?

சுகுமாரன்:—அப்பா! என்னவோ? பேர்சொல்லுவதிலே என்ன சந்தோஷம்? ஒருவேளை யுனக்குத்தெரியாதோ வென்று நினைத்துச் சொன்னேன், வேறென்ன?

சுந்தரானந்தன்:—சரி, மற்றை யிரண்டு பேர்களும்யார்? சொல்லுவாய் சுகுமாரனே!

சுகுமாரன்:—மற்ற இரண்டு பேர்களிலும் அதிக அழகுள்ளவளாயிருந்தாளே அவள்தான் உன்னை யிக்கோலமாக்கிய சூரசேனவர்மன் புத்திரி அவளுக்கு அவளுடைய அழகுக்குத் தக்கபடி 'ரூபாவதி' யென்று பெயரிட்டிருக்கிறார்கள். மற்றவள் கனகமாலை யென்னும் பெயருடையவள். அதைத்தவிர வேறொன்று மவளைப்பற்றி எனக்குத் தெரியாது.

சுந்தரானந்தன்:—என்ன! சந்திரமுகன் இன்று இதுவரையிலும்வரவில்லை. ஏதாவது அவன் வீட்டிலின்றைக்கு விசேஷமுண்டோ? அவன் ஒருநாளும் இவ்வளவு தாமஸம் செய்யமாட்டானே!

சுகுமாரன்:—அதற்கென்ன இப்போது? அவன் மெள்ளத்தான் வரட்டுமே.

சுந்தரானந்தன்:—அதைப்பற்றி யொன்றுமில்லை. அவன் சீக்கிரம் வருபவனாயிற்றே என்று சொன்னேன்.

சுகுமாரன்:—ஏ! சுந்தரானந்தா! நீ யின்று காலைப்பொழுதை யெவ்வாறு கழித்தாய்? ஏதேனும் படித்தாயோ?

சுந்தரானந்தன்:—படித்திலேன் ஆயினும் எம் ஆலவாய்ப்பெருமானை வாயாரப் பாடித்துதித்தேன். அதுவே யென்மனத்திற் சிறிது சாந்தத்தை யுண்டுபண்ணியது. அதைத் தவிர்த்து வேறொன்றுஞ் செய்திலேன்.

சுகுமாரன்:—நீ பாடித்துதித்ததை நான்கேட்கலாமோ? கேட்கலாமெனில் அதைச்சொல்லுவாய்.

சுந்தரானந்தன்:—(பாடுதல்)

செம்மை யுள்ள சிதானந்த னேயுன்ற
னன்மை யான நவிலருந் தன்மையிற்
கிம்மை யில்லடி யேமிச் சிறையினி
லிம்ம வோவென் றரற்றுத லாகுமோ.

வைய மேத்துறு மாமது ராபுரித்
துய்ய னேமதி சூடிய சுந்தரா
செய்ய நின்னருட் செப்பருந் தன்மையிற்
கைய கோவென் றலறுத லீதியோ.

ஆனேறுகந் தேறியெனை யாளும்மது ரேசா
தேனேயெனு மொழியாளுமை திகழும்மிடப் பாகா
கானேய்சூழற் கங்காதர னின்போரு ளிருக்கே
யானேயென்று சிறைச்சாலையி லிருந்தேயழ லாமோ.

சம்போ சாம்பசிவா சக மெல்லாம் படைத்தவனே
வம்பார் பூம்பொழில்சூழ் மது ராபுரி வாழ்பவனே

யம்பா ஆக்கவி கொரு போற்றி யளிக்குமவனே
அம்பா வீரக்க வினி யேனும் புரிகிற்பனே.

மேவார் பொன்னவனே ஞான வாரிய மூர்த்தியனே
கோவே கோமளனே குளிர் சந்திர சேகரனே
காவாத் பாவிகளும் நலமுள்ள மனநாரீசா
தேவா கருணை யினி தேனும் புரிந்திடுவே.

சுகுமாரன்:—ஏ! சுந்தரானந்தா! நீ பாடிய பாட்டுக்கள் மிக [illegible]க்கின்றன. இவையெல்லாம் பூர்வஜன்ம புண்ணியம் [illegible]

சுந்தரானந்தன்:—(கண்ணீர்ததும்ப) ஜன்மாந்தரத்தில் யான் என்ன செய்தேனோ? அப்பா! சுகுமாரா! நீ அறியாய் [illegible] யான் பூர்வஜன்மத்திற் புண்ணியஞ் செய்திருப்பேனா? இல்லாவிடில் இத்தகைய துன்பமெல்லாம் அநுபவிக்கவேண்டுமா? தோல்வாய் என்னுடைய ஜன்மாந்தர பாவத்தின் [illegible] கின்றது.

சுகுமாரன்:—சரி. இந்த எண்ணத்தை விட்டு, இப்பொழுது இடங்கொடுத்தே ஏதேனும் [illegible]மோ சேற்றைப் போல ஏதேனும் விடயம் [illegible] அப்புறம் மிக்க துன்பத்தில் வந்து [illegible]யத்தைக் குறித்துப் பேசுவோம்.

சுந்தரானந்தன்:—இன்றைக்கு ஏதாவது விசேஷம் இருக்கவேண்டும். இல்லாவிடில் சந்திரமுகன் இவ்வளவு தாமசம் செய்யமாட்டான்.

சுகுமாரன்:—அதிருக்கட்டும் சுந்தரானந்தா! [illegible] அந்த மூன்று பெண்களும் பேசிக் கொண்டிருந்தது என் மனத்தில் ஒன்று படுகின்றது.

சுந்தரானந்தன்:—அதென்ன? எனக்கொன்றுந் தோன்றவில்லையே! அது இன்னதென்று சொல்லு. கேட்போம்.

சுகுமாரன்:—அதுவா? சொல்லுகின்றேன் கேள். அரசன்புத்திரி ரூபாவதிக்கு உன் பேரிற் கொஞ்சம் பிரிய மிருக்கிறது போலக் காணப்படுகின்றது.

சுந்தரானந்தன்:—அதெப்படிக் கண்டாய்? வெகு நன்றாயிருக்கின்றதே!

சுகுமாரன்:—அவர்கள் பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையிலிருந்து நான் அநுமானித்துக் கொண்டேன்.

சுந்தரானந்தன்:—அப்படியானால் எனக்கேன் தோன்றவில்லை?

சுகுமாரன்:—அதென்னவோ? அப்பா! எனக்குத்தெரியாது. என் மனத்தில் தோன்றியதைச் சொன்னேன், அதைத் தவிர வேறில்லை.

சுந்தரானந்தன்:—ஆனுறுச்சிரிமான். ஒவ்வொருவருடைய மனத்திலும் ... என்று ... நினைத்துக்கொள்ளலாம். ஆயினும் ... அந்த மூன்று பெண்களும் நாம் ... சங்கதிகளை யொளித்துக் கேட்டிருப் ... என்று ... தோன்றுகின்றது. ஏனென்றால் என்னைக்கு... "...மூர்ச்சை போட்டு விழுந்தானே. அவனு?" ... டாள்.

...ல் வெகு நல்லதாயிற்றே!

...தன்:—அதெப்படி யப்பா?

...ன்:—உன் ... பேரில் இரக்கங்கொண்டு ஒருவேளை தன் தகப்பனுரைக் ... கூடும். அதினுல் சிறைச்சாலையினின்றும் விட்டுவிடச் சொல்லக் ... லதான் நல்லதென்றேன்.

சுந்தரானந்தன்:—...தான் அவள் செய்வாளென்பதென்ன? ஒருவேளை யென்னுடைய ... சங்கதிகளை யெல்லாம் தன் தகப்பனுரிடஞ் சொல்லி யென்னை ... னும் அதிகமான கஷ்டங்களுக்கு என் உட்படுத்தமாட்டாள்? அப்... ச் செய்தாலுஞ் செய்யக்கூடுமே!

சுகுமாரன்:—என், அவளைப்பற்றிக் கேள்விப்பட்ட மட்டில் அவள் நல்லவளென்றேதான் தோன்றுகின்றது. ஆகையால் நீ நினைக்கிறபடி அவ்விதஞ் செய்யமாட்டாள் என்பதிற்கு ஆக்ஷேபணையே யில்லை.

சுந்தரானந்தன்:—அப்படியானுல் என் ஆலவாய்த்தேவனை யான் பாடித் துதித்தது பலித்துவிட்டதென்றுஞ் சொல்லலாம். அப்பா! அதோ! அங்கே வருகின்றுன் சந்திரமுகன். {சந்திரமுகன்வரு ...ல்.}

சுகுமாரன்:—எங்கே?

சந்திரமுகன்:—வந்தனம் சுந்தரானந்தனே!

சுகுமாரன்:—என், சந்திரமுகா! உனக்காக எவ்வளவுகாலம் எதிர்பார்த்துக் கொண்டிருப்போ மென்று நினைத்தாய்?

சந்திரமுகன்:—நான் உன் வீட்டிற்குப்போய் உன்னைத்தேடினேன். அவ்விடத்திலே நீயில்லாமையினுலே யிங்கேதான் வந்திருப்பாயென்று நினைத்துவந்தேன். அதுதான் நாழிகையாய்விட்டது. என்னை மன்னிப்பீர்களென்று நினைக்கின்றேன்.

சுந்தரானந்தன்:—நீயேதாவது தவறு செய்தாலன்றோ மன்னிக்கக்கூடும்? தாமதித்ததுந் தவருகுமோ?

சந்திரமுகன்:—மேலும் நான் தாமதித்து வந்ததற்கு வேறுகாரணமும் உண்டு, அதென்னவென்றுல்:—என்னுடைய தந்தையார் என்னை யழைத்து இரகசிய சமாசாரமொன்று சொல்லி, அதைப்பற்றி யுன்னிடத்தில் தெரிவிக்கும்படி ஆக்ஞாபித்தனுப்பினுர்.

சுந்தரானந்தன்:—அதென்ன அப்பா! அப்படி யிரகசியமான சமாசாரம்?

சுகுமாரன்:—ஏ! சுந்தரானந்தா! நீ யெண்ணியபடி, சந்திரமுகனும் ஏதோ விசேஷ சமாசாரம் கொண்டுவந்திருக்கின்றுனே!

சுந்தரானந்தன்:—அப்படி யில்லாவிட்டால் அவன் காலதாமதஞ்செய்யக் காரணமில்லையே! சரி, சந்திரமுகா! சமாசார மென்னவென்று சொல்லு. கேட்போம்.

சந்திரமுகன்:—இன்று என்னுடைய வீட்டில் இரண்டு மூன்று தனவான்கள் வந்து என்னுடைய தந்தையாரோடு சிலவற்றைக்குறித்துப் பேசினுர்களாம். அவையென்னவென்றுல், உன்னையிச்சூரசேனவர்மன் சிறையிலடைத்திருப்பதும், உன்பெற்றேரை வல்லியம் பலதிரிவனத்துத் துரத்தியதும், நியாயமல்ல வென்பதும் இவ்வித அநியாயத்தை நிறுத்துவதற்குத் தக்க யுக்திகள் யாவையோ அவற்றின்படி முயற்சி செய்யவேண்டு மென்பதுமேயாம். இதுவிஷயத்தில் உன் யோசனை யென்னவென்று என்தந்தையார் கேட்டுவரும்படி யென்னிடஞ் சொன்னுர்.

சுந்தரானந்தன்:—அத்தனவான்கள் எண்ணிய யோசனைகளெல்லாம் நல்லவேயாம். ஆயினும் சூரசேனவர்மன் என்னையும் என்பெற்றேரையும் கொலைக்களம் படுக்காது விட்டிருத்தலே பேருதவியாம். ஆகவே யித்தன்மையான உபகாரிக்கு விரோதமாக ஏதேனுஞ்செய்ய முயலுதல் செய்ந்நன்றி கோறலாம்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்று திருவள்ளுவநாயனுர் கூறியிருத்தலைப் பலமுறையும் நமது ஆசிரியர் வித்தியாசாகரப்புலவர் எடுத்துரைத்திருக்கின்றனரே! அதை யுணர்ந்திருக்கும் நீ யிவ்வாறு கூறுதல் நீதியாகுமோ?

சுகுமாரன்:—அப்பா! சுந்தரானந்தா! நீ கூறுவது மிகவும் நன்று! நன்று! இந்த மகாவஞ்சகன் சூரசேனவர்மன் விஷயத்தில் ...யென்பதே பார்த்தவொண்ணுது. திருவள்ளுவநாயனுர் கூறுவனவெல்லாம் நல்லொழுக்க முடையவர்கட்கேயாம். தீயொழுக்கமுடையவர்கட்கு நீதியேது? நியாயமேது? தருமமேது?

சுந்தரானந்தன்:—ஏ! சுகுமாரா! நான் சொல்லியதை மறந்துவிட்டு நீ யிவ்வாறு கூறலாமோ? சூரசேனவர்மன் தருமசிந்தையுடையவன் என்பதற்கு ஆக்ஷேபணையுமுண்டோ? என்னைக் கொல்லாது விட்டிருப்பதே அவனுடைய நல்லமனத்திற்குத் தக்கசான்று பகரும்.

சுகுமாரன்:—கொல்லுவது பாவம், ஆகவே கொல்லாமை பாவமில்லையே யன்றி யது புண்ணியமாகுமோ? இங்ஙனங் கொல்லாதிருத்தலோடு

ஒருவன் எவ்வளவு [illegible] ருக்கின்றானோ அதற்கு உதவியும் நன்மையுஞ் செய்வானானால் அது புண்ணியமாம். மற்றைப்படி கொல்லாதிருத்தல் ஒருகாலும் புண்ணியமாகாது.

சுந்தரானந்தன்:—ஏ! சுகுமாரா! இன்னுங்கேட்பாய்! என்னைக் கொல்லாதிருத்தலேயன்றி யென்னைச் சிறைச்சாலையினின்றும் வெளியே போயுலாவுதற்கும் எனது அருமை நண்பர்களாகிய உங்களுடன் பேசிக்களிப்பதற்கும் உத்தரவு கொடுத்திருத்தல் உனக்குத் தெரியாதோ?

சந்திரமுகன்:—(தனக்குள்) [illegible] சொல்லக்கூடாது!

சுகுமாரன்:—இன்னொருவிஷயம் உனக்குத்தெரியாதே! இந்தக் கொலையாளர்கள் உன்னைச் சிறைச்சாலையினின்று போட்டுக்கொண்டு [illegible] வெளியேபோக விடக்கூடாதென்றும், சொல்லித்தான் முதல்முதலில் உத்தரவு செய்தாரும், பிறகு [illegible] மாமனார் அரசனைநோக்கி "நீர் அப்படிச் செய்வீரானால் ஜனங்கள் உம்மைக் கொடியவரென்று நினைக்கக்கூடும்" என்றுசொன்னதைக் கேட்டபிறகு தான் இப்படிக் கட்டளையிட்டானாம்.

சுந்தரானந்தன்:—இருக்கட்டும். அவ்வளவும் [illegible] சந்திரமுகனை முற்றிலும் கேட்போம். ஏன்! சந்திரமுகா! அரசனை கொலையை [illegible] அக்கரையினிடம் [illegible] செய் திருக்கிறார்களா மோ?

சந்திரமுகன்:—ஆம். அப்படித்தான் சொன்னார். அதென்னவென்றால்:— ஒருகாவலாளன் அரசன் வீதியில் உலாவும்போது அவனைக் குத்தி ———————— போவேனாகச் சொன்னானாம். மற்றுங் காவலாளர்களும், அது சரியென்று அனுமோதித்தார்களாம். ஆனால், என் தந்தையார் மாத்திரம் பதறக்கூடாதென்றும், இதைக்குறித்து இன்னும் யோசனை செய்யவேண்டுமென்றும் சொன்னாராம். இதை யொருவர் ஒத்துக்கொண்டாராம், மற்றை யிருவரும் ஒத்துக்கொள்ள வில்லையாம். அதின்பேரில் இதைக்குறித்து உன்னிடத்தில் தெரியப்படுத்தி, இதற்கு நீயென்ன சொல்லுகின்றாயோ அதன்படி நடப்பதாக எல்லாரும் தீர்மானித்தார்களாம். அவ்வளவுதான். நீ யென்ன சொல்லச்சொல்லுகின்றாயோ அதையே யென் தந்தையாரிடஞ் சொல்லுகின்றேன்.

சுந்தரானந்தன்:—அப்பா! வெகு வேடிக்கையா யிருக்கின்றதே! ஒன்றும் பயன்படும் யுக்தியாகக் காணப்படவில்லையே! இதைக்குறித்துச் சொல்லுவதற்கு எனக்கொன்றுந் தோன்றவில்லை. ஆகையால் உன் தந்தையார் [illegible] என் வந்தனங்களைச்சொல்லி அவர் இஷ்டம் எப்படியோ அப்படியே நடக்கும்படி சொன்னேன் என்று சொல்லுவாய், சந்திரமுகா!

சுகுமாரன்:—சரி. அப்புறம் சந்திரமுகா! உனக்குத்தெரியாதே யொருசங்கதி! நேற்றுச் சுந்தரானந்தன் மூர்ச்சைபோட்டு விழுந்தது முதல் நாம் பேசிக்கொண்ட சமாசாரமெல்லாவற்றையும் அரசன்புத்திரி, ரூபாவதி, என்மாமாபெண் அம்புஜாட்சி, கனகமாலை யிந்தமூன்று பேரும் ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார்கள். நாம் அதைப் பார்க்கவில்லை. இன்றைக்கு நானும் சுந்தரானந்தனும் அவர்கள் பேசிக்கொண்டதை யொளிந்திருந்து கேட்டோம். அதுதான் எங்களுக்குத்தெரியும்.

சந்திரமுகன்:—அப்படியா! அதென்னவாய்க் கேட்டார்களப்பா! ஆச்சரியமாயிருக்கின்றதே!

சுகுமாரன்:—அதென்னவோ! தெரியாதப்பா! வேடிக்கைதான்!

சுந்தரானந்தன்:—ஏன் சந்திரமுகா! அவர்கள் கேட்டதினாலே ஏதாவது கெடுதல் வருமோ? நான் அரசனைக் கொஞ்சம் வருத்தத்தினால் ஏசவேதேனே!

சுகுமாரன்:—நான்தான் சொன்னேனே! நல்லதேயொழியக் கெடுதலில்லை. ரூபாவதி அதிக இரக்கமுள்ளவளாயிற்றே!

சந்திரமுகன்:—ஆமாம்! எனக்கும் அப்படித்தான் தோன்றுகின்றது. அவள் அழகுக்கெல்லாம் அன்புக்காகாரமுமாயினளே!

சுந்தரானந்தன்:—அப்படியாயின் நல்லதுதான். நீங்கள் சொல்லுகிறதும், நான்சொல்லுகிறது மெல்லாம் இனிமேல் தெரியும்.

சுகுமாரன்:—இது நாற்பிலொருபேச்சு! பார்ப்பமே!

சுந்தரானந்தன்:—சரி. பார்ப்போம். நாம் போக நேரமாக வில்லையோ?

சந்திரமுகன்:—ஆமாம். போவோம். ஏன்! சுகுமாரா! எழுந்திரு, போகலாம்.

(எல்லாரும்போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:—ஞானதீபராச்சிரமம். காலம்:—முற்பகல்.

நடர்:—சந்தனவழுதியுஞ் சுந்தரியாரும்.

சந்தனவழுதி:—ஏ! பிராணசுந்தரீ! சாக்ஷாத் மீனாட்சி சுந்தரேசுவரர் கிருபை நம்பேரில் பரிபூரணமாயிருக்கின்ற தென்பதற்குச் சந்தேகமேயில்லை. பார்! நம்முடைய ஜன்மாந்தரபாவத்தினால் நாம் அநுபவிக்கும்படி நேரிட்ட துன்பங்களை யெல்லாம் நீக்குவதற்குப் பரமபதியாகிய சிவபெருமானார், நீ மூர்ச்சித்து விழுந்துபோன ஒருவேடனைக்கொணர்ந்து விட்டார்! பிறகு தங்குவதற்கு மிகவும் வசதியான ஒரு முனிபுங்கவருடைய ஆசிரமத்தைக் கொணர்ந்து விட்டார்! நாம் இத்தனைநாளாக இராஜ்ய பரிபாலனம் பண்ணியும், இந்த முனிசிரேஷ்

டா இதுவரைக்கும் இந்த நகரத்தில் இருப்பது நமக்குத்தெரியா திருந்ததே! இந்த ஞானதீபருடைய ஆசிர்வாதமும் நமக்குக் கிடைக் கும்படியும் அந்தச்சந்திரசேகரரே செய்திருக்கின்றார். திருவருட்கற் பக தெய்வசிகாமணீ!

என்னே! நின்கருணை! யென்னே! நின்கருணை!

சுந்தரியார்:—அதற்கும் ஐயமுண்டோ? கடம்பவனேசர்கருணை யினுற் சகலமும் நன்மையாய்மாறக் கடவன. முனிவரு டைய சிஷ்யர் வருகின்றார்! பாருங்கள். (ஆத்மநாதர்வருதல்)

ஆன்மநாதர்:—ஆசிர்வாதம்.

சற்குணவழுதியும் சுந்தரியாரும்:—நமஸ்காரம்.

ஆன்மநாதர்:—எம்முடைய ஆசாரியார் உங்களிருவரையும், சோளராஜன் நகரத்திற்குப் போவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு தம் மிடம் வரும்படி சொல்லச்சொன்னார்.

சற்குணவழுதி:—முனிவர் சொல்லியபடியே நாங்களும் புறப்படுவதற்குச் சன்னத்தமா யிருக்கின்றோம். நாங்களு மிதோ புறப்பட்டு வருகி ன்றோம்.

சுந்தரியார்:—இதோ, முனிவரும் வருகின்றாரே! (ஞானதீபர்வருதல்.)

ஆன்மநாதர்:—எங்கே?

ஞானதீபர்:—அப்பா! ஆன்மநாதா! என்ன? அவர்கள் புறப்படுவதற்கு நீசெ ய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டாயா?

ஆன்மநாதர்:—இன்று அருணோதயத்திற்கு முந்தியே எல்லாவற்றையுஞ் செய்துவைத்திருக்கின்றேன். அவர்களும் புறப்படச் சன்னத்தமாயி ருக்கின்றார்கள்.

ஞானதீபர்:—ஆனால், சரி. என்? சற்குணபாண்டியனே புறப்படலாமோ?

சற்குணவழுதியும், சுந்தரியாரும்:—நமஸ்காரம். இதோ புறப்பட்டு விட் டோம்.

ஞானதீபர்:—ஆசிர்வாதம். ஏ! ஆத்மநாதா! நீயும் இவர்களுடன் கூடப்போ ய்ச் சோளராஜன் வீரேந்திரனிடம் இவர்களிருவரையும் வெகு சா வதானமாய்க் காப்பாற்றும்படியும் அவர்களுக்குவேண்டிய உபகார ஞ் செய்யும்படியுஞ் நான் சொன்னதாகச்சொல்லி, இவர்களை அர ண்வசம் ஒப்புவித்துவிட்டுச் சீக்கிரமாய் வா. ஏ! பாண்டிய ராஜ னே! நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம். அநாதிமுத்த சித்ரூப சதானந்த சாக்ஷாத்கார சதாசிவகிருபை உன்மேலிற் பரிபூர்ணமாயி ருக்கின்றது. விசனப்படாமற் போய்ச் சேர்வாயாக.

சற்குணவழுதியும், சுந்தரியாரும்:—அப்படியே! போய்வருகின்றோம்.

ஞானதீபர்:—சரி. போய்வாருங்கள். ஏ! பாண்டியனே! இந்த ருத்ராக்ஷ கண்டிகையை தாரணஞ்செய்துகொள்! இனிமேலுனக்குக் கஷ்டம் என்பதே நேரிடாது.

(ருத்ராக்ஷந்தரித்தல்.)

சற்குணவழுதியும் சுந்தரியாரும்:—நமஸ்காரம்.

ஞானதீபர்:—சரி. சரி. தாமதஞ் செய்யாமற் போய் வாருங்கள்.

(எல்லாரும்போதல்)

மூன்றாங்களம்.

இடம்:—ராஜபுத்திரியின் அந்தப்புரம். காலம்:—நள்ளிரவு.

(அம்புஜாக்ஷி யொருபுறம் படுத்துறங்குதல்.)

நடி:—ரூபாவதி.

ரூபாவதி:—அழகும் இன்பமும் அன்பும் நிறைந்த சுந்தரானந்தனே! சுந்த ரானந்தனே! இக்குணங்க ளுன்னிடத்திலிருப்பதை யறிந்தே தாரோ உன்னை யுன்பெற்றோர்கள் "சுந்தரானந்தன்" என்று அழைத்தார்க ள்? ஐயோ! உன்னுடைய மலர்ந்த வதனத்தையும் மதுரவசனத்தை யுங் கண்டுங் கேட்டும் ஆனந்தப்படுவது என்றைக்கோ என்னாக் கோ என்று நான் உன்னை நினைத்து ஏங்குவதை நீ யறியாயோ? என் தகப்பனார் உன்னைச் சிறையிலிட்டிருப்பதினால் வருந்துகின்றா யோ? என் தகப்பனார் கொடியவராயிருத்தல் பற்றி நானுங் கொடி யவளா யிருப்பேனென்று எண்ணுவாயோ? அந்தோ! வேசமரத் தைப் பிடித்த சனியன் அதன்கண் அமர்ந்த பிள்ளையாரையும் பிடி த்ததாமென்று உலகோர் கூறும் வசனம் போல அவர் கொடுமை தானென்னிடத்து மிருக்குமென்று சந்தேகிப்பாயோ? உன்னை முதல் முதலிற்கண்டது தொட்டு என்மனம் என்னிடத்திலேயே யிராமல் உன் முகாரவிந்தத்தையே பார்த்துத் தன்னையும் என்னையும் மறந்து மயங்கி நிற்கின்றது கண்டிலையோ? அந்தோ! சுந்தரனே! ஆனந்த னே! சுந்தரானந்தனே! உன் முகமதியின் அமிர்தத்தையுண்டு உயிர் தரிப்ப தெந்நாளோ?—(மௌனம்.) ஓ! சாதகமே! சகோரமே! நீவி ரெல்லாம் சந்திர கிரணங்களைக் களிப்புடனுண்டு செருக்கித் திரிகி ன்றீர்களே! உமக்குள் என்னைப் போல ஆற்றாது ஏங்கி யிரங்குவாரி ல்லையோ? அம்மவோ! மன்மதன் குயிற்காள மூதுகின்றானே! இனி யென்ன மோடி யொளிப்பேன்? இந்தப்பாவி மன்மதன் உருவிலி யாயிருக்கும்போதே பரிவையர்களை யிப்பாடு படுத்துகின்றானே! உருவோடு கூடியிருப்பானாயின் என்போலியர் பிழைத்தலுங் கூடு மோ? அப்பவோ! இன்னமலை யென்னுயிர்க்கிலை யாகிய சுந்தரானந் தனைத்திலையத் தரிசிக்கும் என்னைத்தேடு போயினேனே! அப்படி ப்போயும் எனதருமைத் தலைவனை மறுபடியுங் காணாடக்கில்லாது

போயிற்றே! போயிற்றே! இனியென்ன செய்வேன்? எவ்விதமாறு வேன்? நான் பூங்காவனத்திலிருந்தபோது என்னுடைய தோழிய ரேனும் இன்னுந் திரு அதிக நேரங் கழித்து வந்தாரில்லையே! —(மௌனம்.) ஓ! மாதவிமரமே! நீசெய்த புண்ணியம் நான்செய்தி லேனே! நீ புன்னடியில் என் பிரியநாயகனை வைத்திருந்தனையே! யான் அவனை யிப்போது காணப் பெறுவேனேல் அவனை என்தலை யில் வைத்துக்கொண்டன்றோ களிக்கூத்தாடுவேன்? —(மௌனம்) ஓ! கண்காள் நீவிரோரு மொருமுறை யெனது தலைவனைத் தரிசித் தீர்! செவிகாள்! நீவிர் ஒருதரம் அவன் பேசக் கேட்டீர்! ஆதலின் நீவிர் பாக்கியவான்களே யாவீர்! உங்கள்பாக்கியம் எனது மற்றைப் பொறிகளுக்குக் கிடைக்க வில்லையே! அவை தம்மாட்டுப் பொ றாமையாற் புழுங்கி யேங்குகின்றனவே! யானே யிவ்வாறு வருந்தா நிற்க, அவற்றை யாற்றுவார் யாவர்? ஐயவோ! கருணையில்லாக் கா மனும் இருள்யானை முன்னேவித் தென்றலெனுந் தேரேறிப் போர்க் களத்துப் புக்கனனே!

மனது காதலனை யிவ்விடத்து வாராயோ
மன்றலே யென்துயர மாற்றாயோ—குன்றனைய
தோளை யுடையானே சுந்தரா னந்தனெனுங்
காளையே யென்னிலைமைக் கண்டு.

மாரன் மலர்க்கணை மார்பினிற் பாய்ந்து மயங்கியிந்த
கோ முலையேங் கினைந்துநொந் தேனென் னிகரில்கொங்கைப்
பாவி பொறுத்தில னென்செய்வ லென் னைப்பண் பாயணைவாய்
பூரண வன்புறு சுந்தரா னந்தப் புரவலனே. —(மௌனம்)

அம்புஜாட்சி:—(கண்விழித்துக்கொண்டு) என்ன? அம்மா! ரூபாவதி! நீயி ங்கே நிலாமுற்றத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?

ரூபாவதி:—அம்புஜாட்சி! நீ யென்ன படுத்துக் கொண்டவுடனே யுறங்கி விட்டாயே! எனக்கு இதுவரைக்குந் தூக்கமே வரவில்லை. நான் தூக்கம் வருகிறதற்காக எவ்வளவோ முயற்சிசெய்து பார்த்தும்வர வில்லை. அதிருக்கட்டும்.

(அம்புஜாட்சி யெழுந்து வருதல்.)

அம்புஜாட்சி! அதோ! பார்த்தாயா? வையை யாற்றின்கண் வெள் ளம் போகின்றது!

அம்புஜாட்சி:—ஆமாம். நாம் பொழுதுவிடிந்ததும் புதுப்புனலாடக் கனக மாலையையுங் கூட்டிக்கொண்டு மற்றைத் தோழிப்பெண்களோடு போவோம்.

ரூபாவதி:—புதுப்புனலாடுதலிருக்கட்டும். மற்றைப்படி நீயந்த நதியைப் பார்! சந்திர கிரணங்கள் தண்ணீரிற் படிவதினாலே அது பூர பள

வென்று மின்னுகின்றது! எங்கே! அம்புஜாட்சி! நீ வித்தியாசாகர ப்புலவர் செய்தனவென்று சில ஆற்றுவரிப்பாட்டுக்கள்பாடுவாயே! அதிலொன்று பாடு. கேட்போம்.

அம்புஜாட்சி:—(பாடுதல்)

இன்ப வளப்பு மிகவுடையா ரினிது செங்கோ லதுவோச்சத்
துன்ப மொழித் துண்டு கொலோ சொல்லாய் வாழி வையையே
துன்ப மொழித் துண்டு கொலோ சொல்லா தொழிந் தடியிடையா
யன்பி லர்மை யென்றன்றோ வறிவேன் வாழி வையையே.

ரூபாவதி! உனக்கு ஏதாவது வேறு வரிப்பாட்டுக்கள் தெரிந்தாற்சொ ல்லு. கேட்போம்.

ரூபாவதி:—எம்முடைய கனகமாலை, இந்த வித்தியாசாகரப் புலவர் பாட் டுக்களொன்றுதான் சொல்லி முரிவரியிலொன்றும் சாயல்வரியிலொ ன்றும் நிலைவரியிலொன்றும் எழுதிக்கொடுத்தாள். அவற்றைப்பா டுகின்றேன். கேள். (பாடுதல்.)

ஒழுகுறு நிரையுடைய வொருதனி வேலவனு
முழுமதி புரைமுகனு முகமலர் வுடனிருப்பப்
பழுதறு தமிழ்மொழியா லழகனை பரிவுமினை
யெழிலுறு மினியவனே யெவனிடர் செய்தனையே.

சோலை தன்னிற் றனியுற் றேங்கி
மாலை வருந்திச் சென்றொருவன்
மாலை வருந்திச் சென்றானவனென்
மாறு மனம்விட் டகல்வா னல்லன்.

வளப்புடையா னின்புடையான் வழுதியர்தங் கோமான்
மனத்திலிலே கோயில்கொண்டான் மாரனே காணீர்
மாரனே காணீர் வளமதுரை வீற்றென்றுந்
தேரினையே நீக்கித் திரிகின்ற காவலனே.

ஆ! தோ! படுக்கையறையை விட்டுவந்து வெகுநேரமாய்விட்டதே! அம்புஜாட்சி! செவிலித்தாய் வந்து நம்படுக்கை வெறுமையாயிருப்ப தைப் பார்த்தால் என்ன சொல்வாளோ? இனி யிவ்விடத்திலிருக்க ப்படாது.

(ரூபாவதியும் அம்புஜாட்சியும் போதல்.)

நான்காங்களம்.

இடம்:—சிறைச்சாலை. காலம்:—நள்ளிரவு.

நடன்:—சுந்தரானந்தன்.

சுந்தரானந்தன்:—என்னுடைய தந்தையுந் தாயும் இந்நேரம் எங்கிருக்கின்றார்களோ? இப்போதிரவாயிற்றே! இரவில் துஷ்ட மிருகங்கள் வந்து திரியலாவுமே! அவற்றினின்றும் அவர்கள் எவ்வாறு தப்பினரோ? அவர்கள் உயிரோடிருந்தாலன்றோ சகலமும் இனிமையா முடியும்? இல்லையாயின் இன்பமென்பதேது? சுகமென்பதேது?—(மௌனம்.) இன்று நயவசனர் ஸ்ரீமது புத்திரன் சந்திரமுகன் மூலமாய்ச் சொல்லியனுப்பிய விஷயம் மிகப்பயங்கரமாயிருக்கின்றதே! நயவசனர் வெகுநாள் அநுபோகமுள்ளவராதலின் அவ்விஷயத்தில் அவரது இஷ்டப்படியே அவர்செய்யட்டும்! யான் இந்தக் காரியங்களி லெல்லாந் தலையிடுதல் மதியீனமேயாம்.—எல்லாவற்றிற்கும் நாளைப் பூஞ்சோலைக்கண்—பூஞ்சோலை யென்றவுடன் என்மனம் பூரிக்கின்றதே! உடல் சிலிர்க்கின்றதே! ஆ! ரூபாவதி! ரூபாவதி! உன்னைப் பார்த்தது முதல் யான் புதுமையான ஒருமனோவிகாரத்தை யடைந்தேன்! அதை யென்னென்று எடுத்துரைப்பேன்? நீ அழகினுக்கு எல்லையாயுள்ளாளை யென்பதுபற்றி 'ரூபாவதி' என்று நினக்குப் பெயரிட்டார்கள்போலும்! ஓ! நல்லெழில் பெற்ற நங்கை நாயகமே! அறிவு, நிறை, ஓர்ப்புக், கடைப்பிடியென்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஆடவர்குணம் நான்கும் புனலோவெழிப் புற்சாய்ந்தாற்போல நின்னைக் கண்டவுடன் சாய்ந்துவிட்டன! நின்னைக் கண்டாலும் காமுற்றேன்! அது முதல் யான் நின்னை யின்றியமையாதவனாயினேன்! அங்ஙனம் உன்னை யின்றியமையாதுநின்ற வேட்கையானது எனது எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நான்வழிக் காகபோலவும், நீர்வழி மிதவைபோலவும் என்னை யிழுக்காநின்றது! நீயு மென்மீது காதல் கொண்டிருக்கின்றாயென்று நம்புவதற்குச் சிறிது இடமுளது. ஆயினும் அதனை யான் எவ்வாறு நிச்சயமாய் நம்புவேனோ? நீயுன் பாங்கிமாருடன் பேசிக்கொண்டிருந்ததும் உனக்கு என் மீதிற் சிறிது இயற்கையன்புளதென்று கண்டுகொண்டேன். அதுபற்றி யான் உன்னிடத்தில் எவ்வாறு காதல்கூறுவேன்? ஐயோ! யான் உன்னை யென்னுயிர்த் துணையாய்ப்பெற நினைப்பது முடவன் கொம்புத்தேனை யிச்சித்து அதனை யவன்பெற நினைப்பதுபோலும்! உன்தந்தையோ என்னை எப்பொழுது கொலைக்களம் படுக்கலாமென்று யோசியாநிற்கின்றான்! யானோ உன்னைக் கைப்பிடித்து எனது தலைவியாய்க் கொள்வது எப்படியோ என்று யோசியாநிற்கின்றேன்! யான் உன்னை யெனது பிராண நாயகியாய்ப் பெறவேண்டு மென்

றுச் சுந்தரமூர்த்திநாயனார் பரவைநாச்சியாரைப்பெற்றது போலத் தான் பெற வேண்டும்! வேறுவகையில்லை. தெய்வந்தானுதவிசெய்ய வேண்டும் இவ்விஷயத்தில். (மௌனம்)

(பாடுதல்.)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னையே நாயகி யாயுற லாகுமோ
உத்தம மானரூ பாவதித் தையலே.

சரணங்கள்.

பன்னரு மின்னலைப் பரவையி லேகனி
துன்னியே யிருந்தியான் துணைதலுங் கூடுமோ (உன்னை)

ஆனந்த வல்லியே யன்புட னென்கண்
மானென்ற காளினில் வாவுமென் மதியிலே (உன்னை)

சுந்தர நாரியே தாயினி னன்ன
சந்திர காந்தியே லென்மன மலரவே (உன்னை)

காந்தளே மானுநின் கையினைப் பற்றியே
மாந்தளிர் மேனியாய் மகிழ்வுறுங் காலமோ (உன்னை)

ஓ! கண்டுள்ள பொருள்கள்யாவும் நீயாய்ப் பரிணமித்துத் தோன்றுகின்றனவே! இதோ நின்மெல்லடிச் சண்டலைவெள்ளிப் பூங்கூந்தல் தோன்றுகின்றதே! அதோ நின் கண்மணிகளும், குமிழை நிகர் நாசியுந் தோன்றுகின்றன! ஆண்டு அவன் கூர்வேலை வானை வஸ்தைடை மகரத்தைநிகர் மைமெழுதவிழிகள் காணப்படுகின்றனவே! கண்டு மாதுளம்பூவை வென்றுவாகான கொவ்வைப்பழத்தினை வெறுக்கவே வைத்த தன்னிதழ் காட்டியென்மாதுளங் கலாகின்றாள்! முத்தையு முருக்கினையு முனி கின்ற பின்னூரல் இவ்வெளியினிற் காண்பதென்னே! குயிற்பினை யோட்டிய நின் கோமளமொழி யிதோ என்செவியிற் படாநின்றதே! அந்தோ! இவையெல்லாம் பொய்த்தோற்றங்களாமே! என் செய்வேன்? உடல் வெதும்புகின்றதே! ஐயோ! சற்று வெளியேறித் தண்மதியின் குளிர்ச்சியையும், நறுந்தென்றற் குளிர்ச்சியையும் அநுபவிக்கலாமென்றாற் கதவடைத்துத் தாழிட்டிருக்கின்றதே! எங்ஙனம் எனது வெம்மை யாறுவேன்?—(மௌனம்.)

(பாடுதல்)

மந்தரகை மானே வனப்பே வடிவெடுத்து
வந்தவொரு ரூபா வதியேநின்—சந்தநிறை
பொன்முலையாங் கோலைப் புதுக்கலசை யிற்றேய்த்து

மன்மதன்றான் மார்பில் கரைந்திடுமே—நன்மையுறு
நாளொந்த நாளோதி னல்லதரத் தேன்சுவைக்கும்
வேலைவெல் வேலை விளம்பு.

பூமக ளேமலர் விட்டினை நீத்திவண் போந்தனைய
மாமக ளேவளச் சேரனா டாளும் வருமர்த்தக்கன்
கோமக ளேகின் னொழிஇரு மத்தைக் குறித்துனைத்தேர்
பாமக ளேயென்று பற்றப் பெறுவதுள் பாவிகனே.

யான் இவ்வாறே யேங்கிப் புலம்பிக்கொண்டிருப்பேனாயின் காவலாளர் விழித்துக்கொண்டு வைவார்களே! என்செய்வேன்? இதுவுமென் தலைவிதியோ! தெய்வமே! இதற்கு முன் யான் சிறைச்சாலையிலிருப்பதை யொரு பொருட்டா யெண்ணிலேன்; என்னைப் பெற்றோரது பிரிவையே நினைந்து வாடினேன். இப்பொழுதோ, சிறைச்சாலை சிறைச்சாலையேயாய்விட்டது! பெற்றோர் பிரிவையன்றி அரசன் மகள் பூங்கொடியின் ஆசையும் என்னை வருத்துகின்றதுவே!—(மௌனம்) ஓ! ஏதோ சப்தம் கேட்கின்றதே! காவலாளர் துயிலொழிந்தார்களோ? இனிமேல் இங்கேயிருப்பது தகுதியன்று.

(சுந்தரானந்தன் போதல்.)

இரண்டாம் அங்கம்

முற்றிற்று.

அங்கம்-III

முதற்களம்.

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்:—காலை.

நடிகர்:—சூரசேனவர்மனும் சுசீலரும்.

சூரசேனவர்மன்:—ஏ! சுசீலரே! நாம் அன்று பேசிக்கொண்டதற்கு நேர் விரோதமாக இன்றைக்கு ஒன்று கேள்விப்பட்டோம். அதுமுதல் என்னவோ? எமது மனம் வருந்தப்படுகின்றது.

சுசீலர்:—அப்படி மகாராஜா அவர்கள் வருந்தப்படும்படியான விஷயமொன்றும் சம்பவித்ததாகத் தோன்றவில்லையே!

சூரசேனவர்மன்:—நாம் காட்டில் தூக்கிய அவ்விருவரும் புலிமுதலிய மிருகங்கட்கு இரையாய் விரைவிலே யல்லாமற் பிழைக்கமாட்டாரென்றன்றோ நினைத்தோம்? அப்படியிருக்க இன்று நம்முடைய ஒற்றர் வந்து அவர்கள் இருவரும் சோழநாட்டி லிருப்பதாகச் சொல்லுகின்றார்கள்! அவர்கள் எப்படிப் போயிருக்கக் கூடுமோ? தெரியவில்லை. இந்த விஷயம் காதிற் பட்டது முதல் எனக்குக் கவற்சி பெரிதாகின்றது. சுசீலரே! இதற்கு என்ன செய்யலாம்? நன்றாய் ஆ[illegible]ந்து சொல்லுமின்!

சுசீலர்:—மகாராஜாஅவர்கள் இவ்வற்ப விஷயங்களுக்கெல்லாம் கவற்சியடைவானேன்? நாங்கள் யாருக்கு அஞ்சவேண்டும்? எதற்குப் பயப்படவேண்டும்? சுந்தரானந்தனும் சந்திரியாரும் பிழைத்துத் தாம் இருக்கின்றார்களோ என்பதே முதல் முதலிற் சந்தேகம். அப்படியே யவர்கள் பிழைத்திருந்தால் தான் என்ன? அன்றி யவர்கள் சோழநாட்டில் வீரேந்திரசோழனுதவிபெற்றால்தான் என்ன? நமக்குப் பயமா? நாம் எப்பொழுதும் பயப்பட வேண்டியதே யில்லை.

அரண்மனைவாயிலில்.

சேவகன்:—ஓய்! நீர் யார்?

புலவர்:—நாம் திராம் மகாவித்துவான் வித்தியாசாகரப்புலவர். அரசன்மீது கவிபாடி வந்திருக்கின்றோம். இதை யரசனிடந் தெரிவிப்பாயாக.

சேவகன்:—ஓ! புலவர்! ராஜாவுக்குத் தெரியப்படுத்தினால் நமக்கு என்ன கொடுப்பீர்?

புலவர்:—எமக்கு மகாராஜாஅவர்கள் கருணைகூர்ந்து அளியாநிற்கும் பரிசில் காலிலொன்றீகின்றோம். பெறுதி!

சேவகன்:—ஏ! புலவர்! அதென்ன? பெருதி! பருதி! விகுதி! அதெல்லாம் இங்கே நம்மிடத்திலே இலக்கணம் படிக்காதேயும்! சொல்லும் நேரே! எவ்வளவு கொடுப்பீர்?

புலவர்:—அதுதான் கவியொன்று தருவோம் என்று அப்பொழுதே சொன்னோமே! தெரியவில்லையோ?

சேவகன்:—சரி. புலவர்! மோசம் செய்யக்கூடாது. பார்த்துக்கொள்ளும். பத்திரம்!

புலவர்:—சரிதான் போ.

(சேவகன்போதல்.)

எந்தப் பெரிய மனுஷன் வீட்டிலும் இந்த மாதிரி சிற்சில சேவக நாய்களிருந்துகொண்டு எம்போலியரைக் கண்டவுடன் குரைத்து வெள்ளென்று மேலேவிழத் தலைப்படுகின்றன! சீ! இவ்வரசன் என்னவோ! மகா காவல்வைத்திருக்கின்றான்! முன்னிருந்த வள்ளல்சற் குணவழுதி யாம் எப்பொழுதும் தாராளமாய் அரண்மனைக்குட் போகலாம் என்று உத்திரவு செய்திருந்தான்!—இவனுக்கு நம்மை யின்னுந் தெரியாதே! தெரிந்தால் இவனும் அவ்வாறு உத்திரவு செய்யக்கூடும்.

சேவகன்:—மகாராஜா அவர்களுக்கு ஆயிரங்கோடி வந்தனம்.

சூரசேனவர்மன்:—அடா! சேவகா! என்ன சங்கதி? சீக்கிரமாய்ச் சொல்லேடா.

சேவகன்:—மகாராஜா அவர்களிடத்தில் மகாவித்துவான் வித்தியாசாகரப்புலவர் தாம் வந்திருப்பதாகச் சொல்லச்சொன்னார். இதுவிஷயம் சமுகத்திற்குத் தெரியப்படுத்திவிட்டேன்.

சுசீலர்:—ஏ! சேவகா! நீபோய் அவரை உள்ளேவரச்சொல்.

(சேவகன்போதல்)

தாங்கள் இதைக்குறித்து ஒன்றும் இப்பொழுது யோசனை செய்ய வேண்டுவதே யில்லை. அப்புறம் வேண்டுமென்றால் பேசிக்கொள்ளலாம்.

சேவகன்: புலவர்! போம்! வரச்சொல்லி மகாராஜா உத்தரவுசெய்தார். ...னதை மறந்திடாதேயும்! பத்திரம்!

(புலவர்போதல்.)

புலவர்:—சுகபோக சகுண மன்மதரூப மகாராஜ சூரசேனவர்மர் சமுகத்திற்கு அடியேம் சகன மூதண்ட வேதண்ட பிரமாண்ட மெங்கணுங் கனபுகழ்படைத்த ஆரேனும் இமயமுதலீழம்வரை யிவர்க்கு நிகரொருவருமில்லை யென்று சொலப்பெற்றதகையேம் கவிமதக்குஞ்சரங் கல்விக்களஞ்சியம் ஆல்பற்றி வித்தியாசாகரப் புலவரெனு மேலான

வபிதான முடையராவேம் வந்தனம் வந்தனம் வந்தனம் பெற்றேசகவே!

சூரசேனவர்மன்:—ஏ! புலவரே! என்ன மடமடவென்று உம்பாட்டிற்கு அடித்துக்கொண்டு போகிறீரே!

புலவர்:—என்ன! மகாராஜா அவர்கள் உத்தரவு தெரியவில்லையே! எமது பாட்டிற்காக எம்மை யடிக்கிறதா? தெரியாது வந்துவிட்டேன்! மகாராஜாவே! மன்னிக்கவேண்டும்! மன்னிக்கவேண்டும்!

சுசீலர்:—ஐய்! கத்தாதேயும்! சும்மா இரும்!— இவர் நல்லவித்துவான்! சமுகத்திலே பேசியது தெரியவில்லை. அதினாலேதான் இப்படிப்பேசினார்! வேறொன்றுமில்லை.

சூரசேனவர்மன்:—எங்கே நாம் பாண்டியனோடு செய்த யுத்தத்தில் அடைந்த வெற்றியைப் பற்றிப் பாடிய கவியைச் சொல்லச் சொல்லும். சுசீலரே! கேட்போம்.

சுசீலர்:—ஏ! புலவரே! பதறுமல் பயப்படாமல் தைரியமாய் வேகமாய்ச் சொல்லாமல் நிறுத்திச்சொல்லும், நீர் மகாராஜா அவர்கள் பேரிற் செய்த கவியை.

புலவர்:—கொஞ்சம் கண்பார்த்துக் கொள்ளவேண்டும்!

சுசீலர்:—அதெல்லாம் யோசியாதேயும்! கனகாபிஷேகஞ்செய்யச் சொல்லுகின்றேன். கவியைச் சொல்லும்.

புலவர்:—பளபளா! பிரகலியந்தனம்!

சுசீலர்:—இதுதானே எமக்குக் கோபம் வருகின்றது! சொல்லுமென்றால் உடனே சொல்ல வேண்டாமா?

புலவர்:—இதோ சொல்லுகின்றோம். கேளும்!

திருச்சிற்றம்பலம்.

நிம்பமலர் மாலையை யிலைச்சசற் குணவழுதி
நிகரற்ற பாண்டி ராஜ
னின்மகிமை யோராது மதிகெட் டெதிர்க்கவவ
னியிடத்தி னிற்றெரு லையவே
தும்பைமலர் வேய்ந்துயுத் தஞ்செய்து வென்றுசக்
தோஷமுடன் வாரை மலருஞ்
சூடிநற் பாணர்நா டொறும்வந்து பாடிடத்
தோகையர்கள் வாழ்த்தெ டுப்பச்
சம்பகங் கமழ்குழலி னர்போக முற்றெளிரு
சந்தவடி வுள்ள சதுரா
சகமெலாக் தனதாரு கைக்குட் படுத்திய
தனக்குவமை யெவரு மில்லாய்

[illegible]

தாங்களென்ன இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? அப்படியே யிருந்தாலுந்தான் என்ன? எப்பொழுதும் யாம் யுத்தசன்னத்தராகவே யிருக்கின்றோமே! நமக்கென்ன?

சூரசேனவர்மன்:—நமக்கொன்றுமில்லை யாயினும் எம்முடைய மனம் ஏனோ சாந்தப்படுகின்றதில்லை, யாம் ஆனிலேயே சாக்கிரதையாயிருந்திருக்கவேண்டும்.

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மந்திரியார் சசிலரவர்களைக் கூட்டிப்போகும்படி யவர்கள் வீட்டினின்றும் ஆள் வந்திருக்கின்றான். இதுவிஷயம் சமுகத்தில் தெரியப்படுத்தினேன்.

சூரசேனவர்மன்:—என்! சசிலரே! உமது வீட்டிலேதேனும் நீர் செய்ய வேண்டிய காரியமுண்டோ? நீர் போக வேண்டியது அவசியந்தானோ?

சசிலர்:—ஆம்! போகவேண்டும்.

சூரசேனவர்மன்:—ஆனாற் போய்வாரும். (சசிலர்போதல்.)

சோழன் வீரேந்திரனென்பவன் அதிகமான சேனைபலமுடையவனோ? இந்தச்சற்குணவழுதியின்பேச்சைக்கேட்டு நம்மீது படையெடுத்து வருவானோ? நாம் ஆதியாரம்பமுதல் இதுவரை செய்தனவெல்லாம் பிசகேயாம். இன்றுங் கொஞ்சம் யோசனைசெய்யாமற் போனோம், இவ்வளவு மதிகேடராயிருப்போமென்று எண்ணவேயில்லை, எமது மனம் ஒருநாளும் இவ்வாறு பதறினதில்லையே! இவ்வாறு பதறுவதைப் பார்த்தால் ஏதோ கேடு வரும்போலத் தோன்றுகின்றதே!—(மௌனம்) இருக்கட்டும். பாதகமில்லை. அப்படியே வீரேந்திரசோழன் சற்குணவழுதிக்காகப் படையெடுத்து வருவானாயின், நாம் வழுதிமகன் சிறையிலிருப்பவனைத் தொலைத்துப் போடுவோம். அப்புறம் மேல் நடக்கப்போகிறதைப் பார்த்துக்கொள்வோம், காலமுமாயிற்று. இனி நாம் போகவேண்டும்.

(சூரசேனவர்மன்போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:—ராஜபுத்திரியினந்தப்புரம். காலம்:—நள்ளிரவு.

நடி:—நயாவதி.

நயாவதி:—ஐயோ! இன்று என் தகப்பனார் எனது தாயாரோடு பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டதுமுதல் என் மனம் சகிக்கவில்லையே!—என் தகப்பனார் செயல்களுக்கு வீரேந்திரசோழனும் படையெடுப்பான். இன்னொருசோழனும் படையெடுப்பான்.—(மௌனம்)

"முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்"

என்றவன் வாக்கியம் பொய்த்துப்போகுமோ?—இவற்றையெல்லாம் கொஞ்சங்கூட யோசியாமல் என் தகப்பனார் கொடுமையின் மேற்

கொடுமையாய்ச் செய்ய நினைப்பது மடமையிலும் மடமையாம். அந்தோ! இவ்வநியாயமென்ன செய்வேன்?—முன் செய்த கொடுவினைக்கே யான் முழுதும் அவஸ்தைப் படுகின்றதே! அப்படியிருக்க இவ்வளவும் அத்தன்மையான செயல் செய்ய யோசித்தால் நான் சாகுமளவும் துடித்தல் போதும்!—வைரவர் பழிப்பதை யிவர் கேட்டிருப்பாரோ?—கேட்டிருந்தால் இப்படி யோசனை செய்வாரோ?—அவர்க்கு இவ்வூரார் பழிப்பது தெரியாமல் தானிருக்கவேண்டும்!—ஐயோ! இதைக்குறித்து என் தகப்பனாருக்கு எவ்வாறு தெரிவிப்பேன்?—எனது தாயார் மூலமாய்த் தெரிவிக்கலாமென்றாலும் சிறிதுமதே. என் தகப்பனார் சொல்வதை யெல்லாம் மறுத்துரையாமற் சரி சரி என்று கூறுபவளாயிற்றே!—யாரிடஞ்சொல்லி யென்தகப்பனாருக்குத் தெரிவிப்பேன்?—அவ்வாறு அவர்க்குத் தெரிவிப்பது முடியாது போயின் என்னசெய்வேன்?—ஓ!—சுந்தரனைக் கதலே!—என்னுயிர்த் தலைவனே!—பாண்டியர் குலதிலகனே! பைந்தமிழ் வல்ல பாவலனே! உனக்கு என்மீது பரிபூரண நேசமிருக்கிறதென்பதை யுணர்ந்து கொண்டேன்! ஆகையால் உன்னை மணந்து களிப்பது எக்காலமோ கூடுமென்று எண்ணி யிதுவரைக்குங் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருந்தேன்!—இனியான்பிழைத்திரேன்! பிழைத்திரேன்!—உன்னுயிர்க்குக் கேடு சூழ்கின்ற என்தகப்பனாரைத் துறப்பேன்! இன்று முதல் யான் அவர்க்கு மகளல்லேன்!

"கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே"

என்ற பாண்டியன் வாய்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டேன். ஓ! எனது பிராணகாந்தனே! நீ பிழைத்திருந்தாலன்றோ யானும் பிழைப்பேன்? உன்னையின்றி, யான் பிழைத்திருத்தல் முயற்கொம்பு பெறுதல்போலாம். ஆதலின் என் தகப்பனார் இனிச் செய்யப்போகும் கொடுந்தொழிற்கு நீ பிலையாகாது உன்னைத் தப்புவித்தற்குரிய உபாயமொன்று செய்வேன்.—ஐயோ! இக்கொலை பாதகத்தை உனக்கு எவ்வாறு தெரிவிப்பேன்? யாரிடஞ் சொல்லி யனுப்புவேன்?—நீ யிருக்குஞ் சிறைச்சாலையினின்றும் வெளியே போவதற்கு ஒரு இரகசியவழி யுண்டென்று கேள்விப்பட்டு அவ்வழியை யடைத்துவிடுங் கருவியைத் திறப்பதற்குரிய திறவுகோலை யென் தகப்பனார் படுக்கையறையிலிருந்து எடுத்துக்கொண்டேன். அந்தோ! இத்திறவுகோலை யுனக்கு அனுப்புவதெப்படியோ?—என் தகப்பனார் செய்ய நினைத்திருக்கும் பாதகச்செயலைப்பற்றி யொரு கடிதத்தில் என் கையெழுத்தின்றி யெழுதி அக்கடிதத்தோடு இத்திறவுகோலையுஞ் சேர்த்து நின் சிறைச்சாலைக்குப் போடுவேன்.—ஐயோ! காவலாளர் கடிதத்தைப் பார்த்துவிட்டா லென்னசெய்வேன்?—அவர்களுக்குத் தெரியாதிருக்கவேண்டுமே!—அப்படியே

காவலாளர் பாரா திருந்து எனது ருமை நாயகன் மாத்திரம் கடிதங் கண்டு திறவுகோற் பெற்று என்னைக் காமியாய்த் தவிக்கும்படி யிங்கேயே விட்டு விட்டு அம்மார்க்கமாகப் போய்விட்டா லென்ன செய்வேன்?—யான் இவ்வளவு பிரயாசப்பட்டும் எனது எண்ணம் முடியாது போகுமே!—ஆகையால் என்னுடைய உடன்போக்கு எண்ணத்தையும் பற்றி ஒருவாறு அக்கடிதத்திற் குறிப்பாய் எழுதுவேன்!—அந்தோ! அவ்வாறு யான் கூடமாய்க் குறித்ததை இன்னதுதானென்று அவனறியானாயின் என்செய்வேன்? உயிர்த்துணைக்கவே வேண்டும்! ஆகையால் அவனன்னிலை கண்டு காணும்படி எழுதுவேன்..........இனி பொழுதையோனுந் தாமதியேன்! இப்பொழுதே கடிதமெழுதுவேன்!

(ரூபாவதி எழுந்துபோய் எழுதுகருவிகள்
முதலியன கொண்டுவருதல்.)

ஐயோ! நான் இது வரைக்கும் ஆடவரெவர்க்குங் கடித மெழுதியேனே! ஆகையால் அவர்க்கு எழுதும் ஒழுங்கும் இன்னதென வுணர்ந்திலேனே! என்னசெய்வேன்?—

(கடிதம் வரைதல்.)

ஓ! இது சரியாயில்லை; வேறு கடிதந்தான் எழுதவேண்டும்.

(கடிதத்தைக் கிழித்தெறிதல்.)

(வேறுகடிதம் வரைதல்.)

ஓ! இதென்ன? இதிலுந் தப்பிதம் விழுந்து விட்டதே! என்னசெய்கிறது?

(கிழித்தெறிதல்)

சரி. இன்னும் வேறொரு கடித மெழுதுவேன்!

(இன்னொரு கடிதம்வரைதல்.)

இது கொஞ்சம் சரியாயிருக்கின்றது. இதைத்தான் அனுப்பவேண்டும்.—திறவுகோலை யெங்கே? கண்டேன்!—ஓகோ! எழுதுகருவிகளை யெடுக்கப்போனவிடத்தில் வைத்துவிட்டேனே போலிருக்கிறது. அவ்விடம்போய்த் திறவுகோலை யெடுத்துக்கொண்டு வருவேன்.—கடிதத்தை இங்கே வைத்தால் காற்றடித்து எங்கேயாவது போய் விழுந்துவிடு மாகையால் கையிலேயே கொண்டுபோவேன்—([illegible])

(ரூபாவதி எழுந்துபோய்த் திறவுகோலை
யெடுத்துக்கொண்டு வருதல்.)

இத்திறவுகோலை யிந்தக் கடிதத்தின்கண் வைத்துத் திறவுகோல் இருப்பது தெரியாமற் சுருட்டுவேன்!—இனி இந்தக் கடிதச் சுருளை யெனது காதலனிருக்குஞ் சிறைச்சாலையின் சாளரத்தின் வழியாய் எறிந்துவிட்டு வருவேன்.

(ரூபாவதி போதல்.)

மூன்றாங் களம்.

இடம்:—சிறைச்சாலை. காலம்:—நள்ளிரவு.

நடிகர்:—கந்தரானந்தன்.

கந்தரானந்தன்:—இன்று என்னவோ? தூக்கமென்பது சிறிதேனும் வரவில்லை. உடம்போ வியர் வியர்க்கின்றது! மனமோ சஞ்சலப்படுகின்றது! என்னுடைய தாய் தந்தையரிருவரும் சோழநாட்டிற் சென்று கவலையாயிருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டும் என்மனஞ் சந்தோஷப்படாமலிருப்பதேனோ?—ஐயோ! ரூபாவதி! நீயே யிதற்குக் காரணம்!—உன்னையே யுயிர்க்காதலியாய்ப் பெற்று உள்ளம் பூரிப்பதும் உண்டோ?—ஏதோ என்னவோ? உயரத்திலிருந்து விழுந்த சப்தம் கேட்டதே! இரும்பு விழுந்த சப்தம் போலத் தோன்றிற்றே! இந்த நடுராத்திரியில் இவ்விடத்தில் அந்தன்மையான சப்தங் கேட்கக் காரணமில்லையே!—எவ்வாறாயினும் என்னவென்று எழுந்து போய்ப் பார்ப்பேன்.— (எழுந்து போய்ப் பார்த்தல்.) இந்தச் சாளரத்தின் வழியாகத்தான் சப்தம் கேட்டது. ஓ! அதோ என்னவோ? வட்டமாய்க் கிடக்கின்றதே! என்ன? கடிதச்சுருளோ? ஆம்.—அதனோடு ஒரு திறவுகோலு மிருக்கின்றதே!-இதென்ன ஆச்சரியம்!—இதை யென்னவென்று விளக்கேற்றிப் பார்ப்பேன்.—சிவபெருமானே! இதுவும் நின் திருவிளையாட்டோ? நின்னருட் பெருமையை யென்னென்றுரைப்பேன்! ஓகோ! யாரோ கடித மெழுதியிருக்கின்றார்கள்? இவ்விடத்திலேயே யிருந்து கடிதத்தைப் படிப்பேன். அவ்விடம் போனால் காவலாளர் வெளிச்சமுணர்ந்து விழித்துக் கொள்வார்கள். (விளக்கேற்றிப் பார்த்தல்)

(கடிதம்படித்தல்)

எனது பிரியமுள்ள கந்தரானந்த!

உன் நிலைமை பரிதாபமாயிருக்கின்றது.—உன்னோடு அநுதாபப்படுகின்றேன்.—இந்த அரசன் உனக்கு யமனாய் வந்திருக்கின்றான்.-சாக்கிரதையாயிரு.—இவ்விடத்திலிருந்தால் நீ பிழைக்கமாட்டாய். சீக்கிரமாய் இக்கடிதத்தோடிருக்கும் திறவுகோலின் உதவியினால் நீ இரகசியவழியாய் ஓடிப்போய்விடு.—நாளை யிராத்திரி புறப்பட்டு ஓடிவிடச் சன்னத்தமாயிரு.—உன் அந்தரங்க நேசர்களு மிதை அறியப்படாது.—நீ யென்னைக் காணவிரும்பினால் நாளையிராத்திரி யிரகசியவழியாய் வந்து என்னைப்பார்த்துப் பேசலாம்.—கடிதம் பத்திரம்.—

இப்படிக்கு,
உன் பிரியமுள்ள
நன்மைநாடி.

எழுதும் முழுவதும் படித்துவிட்டேன்.—இப்பொழுதுதான் இந்தக் கடிதச்சுருள் விழுந்தது.—இந்தக்கடிதம் படித்ததுமுதல் மனங்கலங்குகின்றதே!—உடல்வியர்க்கின்றதே!—என்ன செய்வேன்? இதையெவர் எழுதி யிருக்கக்கூடும்? என்னுடைய நண்பர்களில் எவரேனும் எழுதி யிருக்கலாமோ?— இல்லை, அப்படியானால் "உன் அந்தரங்கநேசர்களும் இதையறியப்படாது" என்று எழுதார்களே. மேலும் அவர்கள் இன்று புருசோலைக்குப் போயிருந்தார்களே! அப்போது இந்த மாதிரி யேதாவதிருந்தால் அவர்கள் என்னிடம் குறிப்பாய்ச் சொல்லுவார்களே! இன்னுமவர்கள் இந்நள்ளிரவில் வெளியேறமாட்டார்களே! இது இரகசியமாயு மிருக்கின்றதே! பின்னை யார்தாம் எழுதி யிருக்கக்கூடும்?—சில நாளைக்குமுன் சந்திரமுகன் சில காவலர்கள் தன் வீட்டிற்கு வந்து ஏதோ பேசிக்கொண்டதாகச் சொன்னானே! அந்தக் காவலர்களில் எவரேனு மெழுதியிருப்பாரோ?—இருக்காது. ஏனென்றால் அரசனது படுக்கை யறையிலுள்ள இத்திறவுகோல் அவர்கள் கைக்குப் போவது அசாத்தியம். ஒருவேளை யிந்தச்சமாசாரத்தைச் சிலர் உணர்ந்து கடிதத்தில் எழுதித் தம்முடைய வேலையாளிடம் கொடுத்து இச்சாளரத்தின்வழி யெறியச் சொல்லி யிருப்பாரோ?—அப்படியுந் தோன்றவில்லை. எழுத்தைப் பார்த்தால் யாரோ எழுத்தறிந்தவர் எழுதியதுபோலத் தோன்றுகின்றது. மேலுமவர்கள் [illegible] தலைவருக் கிலியா[illegible] எவ்வரசனுக்கும் விரோதமாய் எழுதுவார்களா? ஒருவேளை சசிலேகர் மகள், அம்புஜாட்சி, ரூபாவதியின் மூலமாய்த் தெரிந்துகொண்டு எழுதியிருப்பாளோ?-அதுவுமிராது. அவள் இந்தப் பாதிராத்திரியில் வெளியிலே வரவும்மாட்டாள். அவளுக்கு இத்திறவுகோல் எப்படிக் கிடைத்திருக்கும்? மேலும் சசிலேகர்வீடு வெகு தூரத்திலன்றோ [illegible]ளது? இச்சிறைச்சாலை அரசனது அரண்மனையைச் சார்ந்ததாயிற்றே! மேலுங் காவலோடிருக்கின்றதே! இந்நேரம் அசாரவாசல் அடைத்திருக்குமே! ஆகையால் வெளியிலிருப்பவர்கள் இதைப்போட்டிருக்க முடியாது. அரண்மனையைச் சேர்ந்தவர் யாரோதாம் இந்தக் காரியஞ் செய்திருக்கவேண்டும். அரண்மனையைச் சேர்ந்தவர்களில் ஒருவரும் என்மேல் இரக்கமுற்று இவ்வளவு இரகசியமாய்க் கடிதமெழுதி, எவரும் போகிறதற்கு முடியாத அரசனது சயனக்கிருகத்திலிருந்து திறவுகோலையெடுத்து எறிந்து இத்தன்மையான உதவிசெய்யத் தகுந்தவரில்லையே.—(மௌனம்) ஓகோ! என்னருமைத் தலைவி ரூபாவதி யெழுதினாள்போலும்! இந்த இரகசிய சமாசாரம் அவளுக்குத் தெரியக் காரணமு முண்டு. எழுத்தைப் பார்த்தாலும் ஸ்திரீக ளெழுத்தாகவே காணப்படுகின்றது. ஏ! ரூபாவதீ! ரூபாவதீ! உன் இரக்கத்தை யென்னென்று சொல்லுவேன்? ஆம், உனக்குத்தான் இந்தத் திறவுகோலை யெடுக்கக்கூடும். ஆ! இந்த நள்ளிரவில் இவ்விடம் எவ்வாறு வந்தனையோ? இதுவரையும் விழித்திருந்

தாயோ? ஏழையேன் மீதும் உனக்கு இவ்வளவு அன்புளதோ? உளதெனிற் பிழைத்தேன்! ஈடேறினேன்! தன்யனாயினேன்! உன்னன்புடைய எனக்கு இனிமேல் என்ன குறையோ? என்றவ்வி யெழுதிய கடிதத்தை மீட்டும் படித்துக் களிகூறுவேன். (கடிதம்மீட்டும்படித்தல்) ஐயோ! என்னுடைய நன்மைநாடி யென்று கையெழுத்திட்ட நாயகியே! நன்மைநாடி யென்றபெயர் உனக்கே தகும்! என்மீதுள்ள காதலினால் உன் தகப்பனாரையும் யமனெனக் கூறுகின்ற உத்தமியே! உன்னை நானே யான் சேரிற் சாவேன். கண்டு என் துன்பமெல்லாஞ் சொல்லி யாறுவேன்.—ஆகா! நின் லௌகிக விஷய ஞானத்தின் முதிர்ச்சியை யென்னென்று சொல்லுவேன்! மாதர்கட்குரிய மென்மைத்தன்மை வழுவாது, ஆண்மக்களுக்குரிய முறைப்படி யெழுதிய மோகனமுத்தே! நீசொல்லியபடியே யிந்தக் கடிதத்தைப் பத்திரமாய் வைப்பேன். இந்தத் திறவுகோலையும் சாவதானமாய் ஒளித்து வைப்பேன். ஆ! அதோ அங்கே பேச்சுக்குரற் கேட்கின்றதே! இதோ விளக்கை யவிப்பேன்! (விளக்கவித்தல்) இனி யிவ்விடத்தி லிருக்கப்படாது. ஆகையால் என் படுக்கையறைக்குட் செல்லுவேன்.

(சுந்தரானந்தன் போதல்.)

நான்காங் களம்.

இடம்:—இராஜகன்னிகையி னந்தப்புரம். காலம்—பிற்பகல்.

நடிகர்:—சூரசேனவர்மனும், ரூபாவதியும்.

சூரசேனவர்மன்:—குழந்தாய்! ரூபாவதி! என்னசெய்துகொண்டிருக்கின்றாய்? இந்த ஊருனக் கெப்படி யிருக்கிறது?—அழகாயிருக்கிறதா?

ரூபாவதி:—எனக்கு இந்தவூருக் கென்ன குறைவு? நன்றாய்த்தானிருக்கிறது. நம்முடைய ஊரைப்பார்க்கிலும் இது மிக அழகாய்த்தானிருக்கிறது. அரண்மனையும், அரண்மனையைச்சுற்றிக் கோட்டையும், கோட்டையைச் சுற்றி அகழியும், அகழியைச் சுற்றிப் பூஞ்சோலையும், பூஞ்சோலைக்குப் பக்கத்தில் வையை யாறும் வெகு சீர்த்தியான காட்சிகளாய்த்தா னிருக்கின்றன. [illegible] மீனாட்சி [illegible] கோயிலொன்றேபோதுமே நம் ஊரைப்பார்க்கிலும் இவ்வூர் மேலான தென்று சொல்லுகிறதற்கு.

சூரசேனவர்மன்:—ஆனால் உனக்கு இவ்விடத்திலேயே யிருக்கிறதற்கு இஷ்டம்போலும்!

ரூபாவதி:—அதென்ன? அப்படிச் சொல்லுகிறீர்கள். யாருக்கும் [illegible] ருக்கிற ஊரிலே யிருப்பதற்கு இஷ்டமாய்த்தானிருக்கும்.

சூரசேனவர்மன்:—அப்படியானால் எவனாவதொருவன் அழகாயிருந்தால் அவன்பேரிலும் நீ இஷ்டங்கொள்ளுவாய்போலும்!

ரூபாவதி:—நீங்கள் சொல்லுகிறது வெகு நன்றாயிருக்கின்றதே! காதல் கொள்ளுகிறதற்கு மிதற்கு மென்ன சம்பந்தம்? காதல் கொள்ளுமிடத்துக் குணமும் கல்வியும் குற்றமில்லாத அறிவும் அன்பும் ஆகிய இவைகளே அமைந்திருந்தால் பயனே யல்லாமல், வெறும் அழகு மாத்திர மிருந்தாற் பயனில்லை.

(கோமளவல்லியுங் கனகமாலையும் வருதல்.)

சூரசேனவர்மன்:—சரி, உன் தாயார் உன் தோழிகளை யழைத்துக்கொண்டு அதோ வருகின்றாள். நீ அவர்களுடன் பேசிக் கொண்டிரு. நான் பட்டி மண்டபத்திற்குப் போய் விட்டு வருகின்றேன்.

(சூரசேனவர்மன்போதல்.)

கனகமாலை:—ரூபாவதி! நீ நேற்றைக்கும் இன்றைக்கும் புறப்புனலாட வரவில்லையே! அது எவ்வளவோ வேடிக்கையும் விநோதமுமா யிருந்ததே!

ரூபாவதி:—நீங்கள் யார் யார் போனீர்கள்?

கோமளவல்லி:—என், ரூபாவதி! அதென்ன? நீ யென்னவோ ஒருவிதமாயிருக்கிறாயே! உனக்கு உடம்பு என்ன? அம்மா! சொல்லு.

ரூபாவதி:—எனக்கு உடம்பு ஒன்றுமில்லையே! கனகமாலையை வேண்டுமென்று கேட்டேன். நேற்றைக்கு நான், கனகமாலை, அம்புஜாட்சி யெல்லாரும் பூஞ்சோலைக்குப் போய்விட்டு வந்தோமே!

கனகமாலை:—ஆமாமாம். எனக்குந் தெரியும். ரூபாவதிக்கென்ன! உடம்பெல்லாம் சரியாய்த்தானே இருக்கிறாள்.

கோமளவல்லி:—சரியாய்த்தான் இருக்கிறாள். இருந்தாலும் நாம் எவ்வளவுக் கெவ்வளவு சாக்கிரதையாயிருக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது தானே!

கனகமாலை:—ஆமாமாம், நல்லதுதான்.

கோமளவல்லி:—ஏது! பெண்ணே! கனகமாலை! உனக்குக் கலியாணம் ஆய்விட்டதா?

கனகமாலை:—உங்கள் பெண் ரூபாவதியைத் தானே கேளுங்கள். அவளுக்குத் தெரியும்.

கோமளவல்லி:—என்? ரூபாவதி அதென்ன? அவள் உன்னைக் கேட்கச் சொல்லுகிறாள்!

ரூபாவதி:—என்? நான் சொல்லுகிறதென்ன? நீதான் சொல்லேன்.

கோமளவல்லி:—என்னேடியென்ன? சொல்லுகிற தென்றுஞ் சொல்லு.

கனகமாலை:—எனக்கு இன்னுங் கலியாணம் ஆகவில்லை.

ரூபாவதி:—என்? சொல்லேன்.—உனக்கு வெட்கமாயிருந்தால் நான் சொல்லட்டுமோ?

கனகமாலை:—உன் இஷ்டம்.

ரூபாவதி:—நம்முடைய அரண்மனைக்கு அப்பாலிடத்திலே வரத்துப் போக்காயிருக்கிறாரே! நயவசனர் என்று ஒருத்தர்; அவர் பிள்ளை, வடி! சந்திரமுகன்தானே அவன்பெயர்? அவனுக்கு இவளை நிச்சயம் பண்ணி யிருக்கிறார்கள். இன்னும் பத்து நாளுக்குள்ளே, கலியாணமாய்விடும்.

கோமளவல்லி:—என்னேடி? கலியாணவேலை யெல்லாம் வீட்டிலே நடக்கிறதா?

கனகமாலை:—நடக்கிறது.

ரூபாவதி:—கனகமாலை! அம்புஜாட்சி யெங்கே வரக்காணேன்?

கனகமாலை:—நான் அவள் அகத்திற்குப் போய்விட்டுத் தான் வந்தேன். அவள் என்னவோ? தன் அத்தையகத்திற்குப் போயிருக்கிறாளாம். அவளுடைய தாயார் சொன்னார். ஆகையால் ஒருவேளை அதிக நாழிகை யாகுமோ என்னவோ என்று நினைத்துக் காத்துக்கொண்டிராமல் நான் முந்தி வந்து விட்டேன். அவள் இன்றைக்கு வருவளோ என்னவோ? அதுவுஞ் சந்தேகம்.

கோமளவல்லி:—அவளுடைய அத்தை யார்?

ரூபாவதி:—அவள்தான் மந்திரி சுசீலர் தமக்கைக சுதர்மை.

கோமளவல்லி:—அதென்ன? சுதர்மை யிங்கே நம் அரண்மனைக்கு ஒரு நாட்கூட வரவில்லை. நாமும் வந்து ஏறக்குறைய இரண்டு மாசமாமாயினவே!

கனகமாலை:—சுதர்மையினுடைய அகமுடையான் இறந்துபோய் இன்னும் வருஷமாகவில்லை. வருஷமாகிறதற்கு முன் கைம்பெண்களெல்லாம் வெளியில்வரக்கூடாது என்பது எங்களுக்குள் ஓர் ஏற்பாடு. ஆகையினாலேதான் வரவில்லை போலிருக்கிறது. இல்லாமற் போனால் ஒரு நிமிஷமாவது வாராதிருக்கமாட்டாள்.

ரூபாவதி:—என், கனகமாலை! அம்புஜாட்சிக்கு அவளுடைய அத்தை வீட்டிலென்னவேலை? உனக்கு ஏதாவது தெரியுமா?

கனகமாலை:—அதென்னவோ? அம்மா! எனக்குத் தெரியாது.

(அம்புஜாட்சி வருதல்.)

கோமளவல்லி:—அதோ அம்புஜாட்சியும் வந்து விட்டாள். அவள் வரக்காணேன், வரக்காணேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே!

ரூபாவதி:—அம்புஜாட்சி! வா, இங்கே, யிப்படி யுட்காரு. என்? இவ்வளவு நேரம்?

அம்புஜாட்சி:—அது தான் கனகமாலை சொல்லியிருப்பளே!

ரூபாவதி:—அவளுக்கு உன் சங்கதிகளெல்லாம் எப்படித் தெரியும்?

அம்புஜாட்சி:—அவள் தான் எங்கள் அகத்திற்கு வந்து, நான் எங்கேபோனேனென்று விசாரித்துக்கொண்டு, இங்கேபோகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தாளாமே! எனக்குத்தன் தாயார் சொன்னாரே!

கோமளவல்லி:—சரி, அதெல்லாமிருக்கட்டும். கனகமாலை நீயுன் அத்தை வீட்டிற்குப் போனதாய்ச் சொன்னாள். அங்கே யேதாவது விசேஷமுண்டோ?

ரூபாவதி:—அவையெல்லாம் நாம் கேட்கலாமோ? அவள் தன்புருஷன் சுகுமாரனைப் பார்க்கப் போயிருப்பாள்! இல்லாவிடில் அவள் என்னத்திற்கு அங்கே போகிறாள்?

கனகமாலை:—அப்படியிருந்தாலு மிருக்கும்!

அம்புஜாட்சி:—உங்களுக்கென்ன? எப்போதும் இப்படியே என்னைக் கேலி பண்ணத்தான் தெரியும்.

கனகமாலை:—அதென்னேடி? அம்மா! நான் என்ன? உன்னைத் தினம் இப்படிக் கேலி பண்ணிக்கொண்டே தான் இருக்கிறேனா? என்னவோ இன்றைக்கு ருபாவதி வேடிக்கையாய்ச்சொன்னாளேயென்று நானும் சொன்னேன். வேறென்ன? இதற்கெல்லாம் நீ கோபித்துக் கொள்ளப்படாதம்மா!

ரூபாவதி:—அவையெல்லாம் என்ன? இவ்வாதனை யொன்றும் உண்டாக்காதே! அவள் இவற்றிற்கெல்லாம் கோபித்துக் கொள்ளுகிறவளா என்ன?

கோமளவல்லி:—அவையெல்லாம் என்ன வீணவம்பு? ஏடி! அம்புஜாட்சி நீயுன் அத்தைவீட்டிற்கு என்னவேலையாய்ப்போனாய்? சொல்லு.

அம்புஜாட்சி:—அப்படியொன்றும் விசேஷமில்லை. யாரோ என் அத்தைக்கு இளையமாமியாராம்! அவள் வந்திருக்கிறாள். அவள் என்னைப் பார்க்கவேண்டுமென்று என் அத்தையிடஞ் சொன்னாளாம். அவள் ஓர் ஆளையனுப்பி என்னை வரும்படி யென்தகப்பனாரிடஞ் சொல்லச்சொன்னாளாம். உடனே என்தகப்பனாரும் போய்விட்டுவரும்படிசொன்னார். அதுதான் போய்விட்டுக் கொஞ்சம் அவர்களோடு பேசிக்கொண்டிருந்த பிற்பாடு, அகத்திற்குப் போய்விட்டு அங்கிருந்து நேரே யப்படியே யிங்கே வந்துவிட்டேன். அவ்வளவுதான். வேறொன்றுமில்லை.

கோமளவல்லி:—சரி, உன் அத்தைக்கு இளைய மாமியார் என்று சொன்னாயே! அந்த அம்மாளுக்கு இருப்பு எந்த ஊராம்? உனக்கு ஏதாவது தெரியுமா?

அம்புஜாட்சி—என்னவோ? தாராபுரமாம்! சொல்லிக்கொண்டார்கள்.

கோமளவல்லி:—அப்படியானால் நம்முடைய ராஜ்யத்தைச் சேர்ந்தவனாயிற்றே! நாமும் அடிக்கடி பார்த்துக்கொள்ளலாமே!

ரூபாவதி:—கனகமாலைக்குக் கலியாணம் நிச்சயமான சங்கதி யுனக்குத் தெரியுமா? என்? அம்புஜாட்சி!

அம்புஜாட்சி:—ஆமாம்! நானுங் கேள்விப்பட்டேன். நயவசனர்பிள்ளை சந்திரமுகன், நாம் எல்லாம் அன்றைக்கு———அவனுக்குக் கொடுக்கிறதாகச் சொன்னார்கள்.

(சேவிலிவருதல்.)

சேவிலி:—என்ன? அம்மா! ரூபாவதி! இப்படி யுட்கார்ந்துகொண்டிருக்கிறாய்? சாப்பிடவேண்டாமா? சீக்கிரமாய் எழுந்திருந்து வா.

கனகமாலை:—அப்போது முதல் இன்னும் சாப்பிடாமலா உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? நீ சாப்பிட்டாயிருக்கு மென்றன்றோ நினைத்தேன்! நன்றாய் இதுவரையிலும் உட்கார்ந்து கொண்டிருந்தாய், எழுந்திரு! எழுந்திரு! சீக்கிரமாய்ப்போய்ச் சாப்பிட்டுவிட்டுவா.

அம்புஜாட்சி:—சீக்கிரம் வந்தாயானால் இன்றைக்குப் பூஞ்சோலைக்குப் போய்விட்டு வரலாம்.

கோமளவல்லி:—இல்லை, இல்லை. இன்றைக்கு அவள் வரமாட்டாள். அவளுக்கு தெம்பு செவ்வையில்லை.

ரூபாவதி:—நீங்கள் எல்லாவற்றிற்கும் இங்கேதானே யிருங்கள். நான் போய்ச் சீக்கிரமாய்ச் சாப்பிட்டுவிட்டு வருகின்றேன்.

(ரூபாவதி கோமளவல்லி சேவிலி யிவர்கள்போதல்.)

அம்புஜாட்சி:—அடி! கனகமாலை! உனக்குத் தெரியுமா ஒருசங்கதி? நம்முடைய, முந்தியிருந்தாரே அந்தராஜா சற்குணவழுதியும் ராஜாத்தி சுந்தரியும் சோழராஜ்யத்திலே யிருக்கிறார்களாமே!

கனகமாலை:—ஆமாம். என்காதிலும் அப்படித்தான் பட்டது.

(எழுந்திருத்தல்.)

அம்புஜாட்சி:—எங்கே? எழுந்திருக்கிறாய்.

கனகமாலை:—இப்படித்தான், அந்தப்பக்கம் போய்க் கொஞ்சம் சுற்றிப் பார்ப்பமே! என்றுதான்.

அம்புஜாட்சி:—ஆனால் நானும் வருகிறேன்.

(எல்லாரும்போதல்.)

ஐந்தாங்களம்.

இடம்:—நகர்ப்புறத்து ஒருவெளியிடம். காலம்—நள்ளிரவு.

நடன்:—சுந்தரானந்தன்.

சுந்தரானந்தன்:—கடிதமெழுதியகாதலி, ஏனோ இன்னும் வரவில்லை? ஒருவேளை தான் எழுதியதை மறந்துவிட்டாளோ? சீ! அப்படி ஒருநாளும் இருக்கவே மாட்டாள். இல்லாமற் போனால் அவள் கடித மெழுதின சங்கதி பிறருக்குத் தெரிந்து அதினால் வரத் தடைப்பட்டதோ?—ஓ! ரூபாவதி! என்னை யோடிவிடும்படி யெழுதினாயே!

{ரூபாவதி ஆண்வேடம் பூண்டு பின்னே வந்து நிற்றல்.}

(பாடுதல்.)

இராகம்-நாதநாமக்கிரியை. தாளம்—ஆதி.

பல்லவி.

கோமள மாதேயா ரோடேனோ சலஞ்செய்குறாய்.

அநுபல்லவி.

வாமமார் தையலே கண்மணியே மானும் (கோமள)

சரணங்கள்.

சேமமார் மாதேயா ரோடனிதிய தாழ்வோ
தூயபைங்கிளியே ரூபாவதியே யென் (கோமள)

வாருகுத் கூந்தல்யா ரோடென் மாட்சிமை யோசொல்
சீருறு செல்வியே ரூபாவதியே யென் (கோமள)

யான் ஓடி யொளித்தால் உன்னைப் பிரியவேண்டுமே! உன்னைப் பிரியவேண்டுமே! உன்னைப் பிரிந்தபிறகும் பிழைத்திருப்பேனோ? நின்னைப் பிரிந்து காணுதலின்றி ஆற்றுது உயிர் துறப்பதைக் காட்டிலும், நின்னைப் பூஞ்சோலைக்கண்ணாவது தினமும் கண்டு ஆற்றி உன் தந்தையார் வாளிற்கு இரையாவது மேலானதேயாம். ஆதலால் இனியொரு கிலேசமேனும் தாமதியாமல் மறுபடியும் சிறைச்சாலைக்கே போவேன்.

(ரூபாவதி முன்னே வருதல்.)

ரூபாவதி:—என் ஆசைக் காதலனே! சற்று நின்று என்மீது கருணை புரிவாய்!

சுந்தரானந்தன்:—பூவுலகிற் போந்ததொரு புத்தமுதே! என்னுயிர் காக்க வந்த இளங்குயிலே! ரூபாவதி! இதோ! நின்றேன்! நின்றேன்!

ரூபாவதி:—யான் வந்து உனக்காக நிற்கும்போது, நீயேன் மறுபடியும் சிறைச்சாலைக்குப் போகவேண்டும்? உன்னை நேரிற்கண்டு பேசதற்கில்லாமல் இதுவரைக்கும் யான் அடைந்த வருத்தத்தை யுன்னி

டத்திலேயே சொல்லத் தகும். இதைக் குறித்து யான் என் தோழியரிடத்தும் பேசவில்லை.

சுந்தரானந்தன்:—அறிவு நிரம்பிய ஆருயிர்க் காதலி! என்னைக் கண்டு பேசுவதற்கு நீ வரும்போது யாரேனும் பார்த்து விடுவார்களோ என்ற சந்தேகத்தினால் ஆண் வேஷம் பூண்டு இவ்விடம் வந்தாயோ?

ருபாவதி:—எனது பிராணேஸ்வரா! யான் இவ்வேஷம் பூண்டதிற்குக் காரணம் நீ யினிமேலுணர்வாய். நின்னை முதல் முதலிற் பூஞ்சோலையிற் கண்டேன்! வேட்கை யுற்றேன்! அது முதல் நின்னை யிடைவிடாது சிந்தியாநின்றேன்! உடம்பு வாடி மெலிகின்றேன்! ஒவ்வோரிரவும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றுகின்றது! யான் நின்மீது காதல் கொண்டதைப் பிறரிடம் வெளிப்படுத்தாமல் என் மனத்திலேயே வைத்துப் புழுங்கினேன்! யான் என்தோழியரோடு பேசிக்கொண்டிருக்கும் போதே யுன் நினைவு வந்துவிடும். உடனே வாய்குழறும்! உடல்வியர்க்கும்! பிறகு அவர்களை யனுப்பிவிட்டு வாய் விட்டுப் புலம்பி யழுவேன்! விளையாட்டை யெல்லாம் மறப்பேன்! மயங்குவேன்! செயலற்றிருப்பேன்! எழுவேன்! ஏங்குவேன்! எங்ஙனம் பிழைப்பதென்பேன்!

சுந்தரானந்தன்:—ஏ! பிராணேஸ்வரி! ஒருநாள் நீ நின் தோழியரோடு பூஞ்சோலையில் எளியேன் நிலைமையைக் குறித்து இரக்கமுற்றுப் பேசிக்கொண்டிருந்தாய். அதை நான் ஒளித்து நின்று கேட்டேன். அப்போது உனக்கு என்மீது அன்புளது என்று உணர்ந்தேன்! உணர்ந்த அந்த நிமிஷத்திலேயே நின்மீது காதல்கொண்டு நினைந்து நினைந்து உருகி வெதும்பி வாடிக் கலக்கமுற்றேன்! உடனே சிறைச்சாலைக்குச் சென்றேன்! அவ்விடத்து எங்கே பார்த்தாலும் நின் ரூபத்தையே கண்டேன்! அந்தோ! இஃது உருவெளியாகிய பொய்த்தோற்றமாயிற்றே என்று ஏக்கமுற்று நைந்தேன்! இவ்வாறு உன்மீதுள்ள இனிய நேசம் நாளுக்குநாள் அதிகரித்து அதிமோக சாகரத்துள் ஆழ்த்திவிட்டது! என்செய வல்லேன்? செய்திறன் அறியாது கையற்றுப் புள்ளொடும் மாவொடும் புலம்பினேன்!

ருபாவதி:—எனது பிரிய நேசனே! இனிமேல் நாம் இருவரும் ஒருவரையொருவர் பிரிந்திருந்து புலம்பாதிருப்பதற் கேற்ற உபாயங்களை நாடவேண்டும்.

சுந்தரானந்தன்:—என்னுயிர்த் துணைவி! ருபாவதி! யானோ சிறைச்சாலைக்கண் இருக்கின்றேன்! நீயோ அரசன் மாளிகையின் அந்தப்புரத்திலிருக்கின்றாய்! நீயும் நானும் பிரியாது ஒருமித்து வாழ்வது எப்படியோ?

ருபாவதி:—"நன்னெறி யுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே"
என்று பெரியோர் சொல்லுவது நினக்குத் தெரியாததோ? ஆகையால் நாம் கூடி வாழ்வதற்கு ஏற்க உபாய மறிந்து செய்யவேண்டும்.

சுந்தரானந்தன்:—ஞானமே மேனியாய் வந்த நாயகி! நீ சொல்லியனவெல்லாம் உண்மையேயாம். ஆயினும் யான் என் செய்வது? நீயும் நானும் இரவிற் கூடிப் பகலிற் பிரிந்து வாழ்ந்திருந்தால் என்ன?

ருபாவதி:—இன்றிரவு பிழைத்திருக்கும் நீ, நாளையிரவு இவ்விடமிருப்பையாயிற் பிழைத்திருக்க மாட்டாயென்பது நிச்சயம். ஆகையால் நீ உனக்குத் தோன்றியபடி செய்க.

சுந்தரானந்தன்:—யான் இவ்விடமிருப்பேனேற் பிழைக்கமாட்டேன் என்பது நிச்சயமென்றாயே! அதெப்படி யுனக்குத் தெரியும்?

ருபாவதி:—ஐயோ! நினக்கு என் தகப்பனாருடைய கொடிய அவ்வெண்ணத்தை வெளியிட்டுரைக்கவும் வேண்டுமோ? என் தகப்பனார் நின்பெற்றோர் சோழநாட்டிலிருப்பது கேட்டு, சோழன் உதவிபெற்றுப் படையெடுத்துத் தம்மீது நின்தகப்பனார் வந்தால் நின்னைக் கொலைக்களம் படுப்பதாக ஆலோசனை செய்திருப்பதை என்தாயிடம் சொன்னார். அது என்காதில் உருக்கைக் காய்ச்சி யூற்றியது போலிருந்தது! உடனே யது நினக்குக் கூடமாய்க் குறிப்பிக்கப்பட்டது.

சுந்தரானந்தன்:—ஐயோ! ருபாவதி! இதுவரை யுன்னை யன்புடன் வளர்த்து வந்த தந்தைக்குக் கேடு சூழ்வது உனக்கு அழகாகுமோ?

ருபாவதி:—கொலைபாதகத் தகப்பனாரோடிருப்பதைக் காட்டிலும் இறந்தொழிதல் மேலானதேயாம். அப்படியிருக்க—

சுந்தரானந்தன்:—அப்படியாயின் யான் இவ்விடத்தைவிட்டு ஓடி யொளிப்பேனேல் நீயென்னைச் சேர்வ தெப்படிக் கூடும்?

ருபாவதி:—ஐயோ! எனதருமைத்தலைவனே! நீ கூறுவது என்ன ஆச்சரியம்! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கலைவாருமுளரோ? யான் ஆண்வேஷம் பூண்டு வந்ததின் பயனை யறியாயோ?

சுந்தரானந்தன்:—ஓ! இன்னென்ன முணர்ந்தேன். நீ கூறுவது மேலான உபாயமேயாயினும், நீ யென்னோடு கூட நடக்கமாட்டுவாயோ? மேலும் நிழலும் நீரும் இல்லாத அழல்வெங்காட்டிற் போவதையெவ்வாறு சகிப்பாயோ?

ருபாவதி:—என்பெருமானே! எப்பேர்ப்பட்ட வெங்கானமாயினும் நின்னோடு வரவே அது இனியதாய் மாறிவிடும்! நீயில்லாதவிடம் தென்

நல் வீசும் தேவமாளிகையாயினும் அது எனக்குக் காடேயாம்! நீயிருக்கு மிடம் தீப்பொறி பறக்கும் வனமே யாயினும் அதுவே யெனக்கு மிகவும் ரமணீயமான மலர்மாளிகையாம்!

சுந்தரானந்தன்:—அப்படியாயின் நான் சிறைச்சாலைக்குப் போய் இதோ வந்துவிடுகின்றேன்.

ரூபாவதி:—என்னருமைக் காதலனே! நீயிருந்த சிறைச்சாலையை யாரும் வந்து பார்க்கப்படாதோ?

சுந்தரானந்தன்:—பார்க்கலாம். ஆயினும் அந்தக் காவலாளர் ஒருவேளை விழித்துக் கொண்டால் என்னசெய்கிறது?

ரூபாவதி:—யான் சற்றுத் தூரத்தில் ஒளித்து நின்று பார்ப்பேன்.

சுந்தரானந்தன்:—நல்லது, போகலாம்வா.

(எல்லாரும்போதல்.)

ஆறாங் களம்.

இடம்:—நகர்ப்புறத்தொரு வெளியிடம். காலம்—நள்ளிரவு.

நடர்:—சுந்தரானந்தனும் ரூபாவதியும்.

சுந்தரானந்தன்:—ஏ! என் காதற்கிளியே! ரூபாவதி! நீயும் நானும் இந்த மாதிரி ஓடிப் போவது எனக்குச் சரியானதாகத் தோன்றவில்லை. நம்முடைய தமிழ் அகப்பொருளிலக்கணங்களில் தலைவி தலைவனுடன் தாய்தந்தையரை விட்டுவிட்டுப்போய்விடுதல் நியாயமென்று சொல்லப்பட்டிருந்தாலும் என்மனம் அதை ஒப்பவில்லை.

ரூபாவதி:—ஐயோ! என்னுயிர்த் தலைவனே! நீ இவ்விட மிருப்பையாயின் நீயுமென்னைக் காணப்போகின்றதில்லை! நீ என் தகப்பனார் வாளிற்கு இரையாய்விடுவாய்! இது காதிற் பட்ட கின்பெற்றோரும் மனம் புழுங்கி யிறப்பார்கள்! யானும் உயிர் துறப்பேன்! இவ்வளவு துன்பங்களுக்கும் நீயே மூலகாரணமாவாய்!

சுந்தரானந்தன்:—அன்புரு வெடுத்த வாருயிர்த் தலைவியே! நீ சொல்லுவன வெல்லாம் முணர்ந்தேன். அவையும் நியாயமேயாம். இத்தருணத்தில் செய்வது இன்னதென்று தோன்றவில்லையே! தெய்வமே! என் செய்வேன்? சோமசுந்தரமூர்த்தியே! இவ்வாறு என தருமைக்காதலி ரூபாவதியின் மூலமாய் என்னைத் துன்புறுத்தும் நின்னருட் செயலே யன்றோ?

ரூபாவதி:—அதற்குமோர் ஐயமுண்டோ?—ஐயோ! பிராணநாதா! நேரமாகின்றதே! சிறிது போதிற்கு முன் உடன்போக நினைத்த மனத்தை மாற்றிவிட்டாயே! தெய்வமே! இது நினக்கு ஏற்குமோ?

சுந்தரானந்தன்:—ஏ பிராணேஸ்வரி! நீ மனவருத்தப்படுதல் ஒழிவாயாக. இதோ யான் நின்னுடன் போக ஒருப்பட்டேன்! புறப்பட்டேன்! வருவாயாக. ஓ சொக்கலிங்கவள்ளலே! அங்கயற்கண்ணம்மையே! எம்மைக் காத்தருளுவீர்! (பாடுதல்.)

இன்பமே யியற்கை யுருவமாய்க் கொண்ட
ஈசனே சோமசுந் தரனே
யன்பொரு வடிவாய்ப் போந்தனை யென்ற
னாருயிர்த் தலைவியும் யானுந்
துன்பமொன் றேனு முற்றிடா தெமக்குத்
துணைவரு விருந்தருள் கடவுள்
மன்பரா னந்த வள்ளலே மகிழ்ந்து
மதுரையில் வாழ்பர சிவமே.

சுந்தரபாண் டியனுமெங் குலத்துதித் தோன்றிச்
சொக்கலிங்கப் பெருமானே யெமையாட் கொண்ட
சிந்தையினை யாதவிரு வித்தகனே
மேவியெமக் குதவினையார் வருதல் வேண்டும்
நந்துதவழ் பொற்றமரை வாவிச் சூழ
வந்தமர்ந்த நாயகனே நந்தன் கோவே
செந்திசைத் தித்திக்குந் தேனே வேதச்
செம்பொருளே மெய்ஞ்ஞான தேவ தேவே.

இராகம்-பூரிகல்யாணி. தாளம்-சாப்பு.

பல்லவி.

வாமனே சுந்தரேச வள்ளலே—காத்தருளாய்

அநுபல்லவி.

சேமமார் மதுரைவாழ் சிவபரஞ் சோதியே
யாமுமில் வஞ்செல வெமக்குநீ துணைசெய்வாய். (வா)

சரணம்.

நித்தநின் மலர்ப்பாதம் பத்தியாய்ப் பணிகின்றேம்
அத்தனே யெம்மீது சித்தமி ரங்கிடுவாய்
சுந்தரா னந்தன்யானுஞ் சுந்தரு பாவதியும்
அந்தமில் லாவுன்னைச் சந்ததந் தொழும்பணிவோம்.
காத்தி யாரதி காரி தகவனே
காத்தி யெமதுயிர் காத்தி யிவ்வேளை
கால ஹரணமே காக்க விதியேதும்
கால முணர்ந்திதி காது வழியில்லை
கால்கன் மலரமலர் காட்டு மாதனை
காதல் வெவ்வ நீ (வாமனே)

ரூபாவதி:—என்னருமைத் தாயே! கோமளவல்லிப் பூங்கொடியே! செவிலித் தாயே! எனது அந்தப்புரமே! யான் உங்களையெல்லாம் விட்டுப் போகின்றேன். மறுபடியும் உங்களைக் காண்பது எக்காலமோ?

சுந்தரானந்தன்:—(பாடுதல்)

மேகமே நீவிலகாய் மேலான சந்திரன்று
ணைகையோடு தன்னுடைய வொளியினால் வழிகாட்ட,
பட்சமுடன் மேகமே பறந்தொருபக் கம்போவாய்
நட்சத் திரக்கூட்டம் நல்லொளித்தீ பங்காட்ட.
காஞ்சியிலே பார்க்கின்ற கன்னிகைகள் பாவதியின்
பூஞ்சோலை யிதுகண்டாய் பொற்புடைய மாதரசே,
பூஞ்சோலைக் கண்ணமரும் புள்ளினமே போகின்றேம்,
மாஞ்சோலைக் கண்ணமரும் மானினமே போகின்றேம்.
வையையே போகின்றேம் மதுரையே போகின்றேம்
அப்பனே மீனாட்சி சுந்தரனே போகின்றேம்.
என்னருமை நேசர்கள் என்றும்மைக் காண்பேமோ
இன்னிரவி லும்மிடத்துச் சொல்லாது போகின்றேம்.
தென்றலே போகின்றேம் இங்கனே போகின்றேம்
அன்றிலே போகின்றேம் அரும்புறவே போகின்றேம்,
கூகையே குழுதே கொடியன்னம் போகின்றேம்
மோகமே கேகயமே கோகிலமே போகின்றேம்.
இராப்பாடிப் புள்ளேயா மின்பமுறப் பாடாயோ
விராய்ப்போக மனமுண்டேல் ஷேமமாய் வாராயோ.
விண்ணிடத்துச் செல்கின்ற மேன்மையுறு சாதகமே
மண்ணிடக்கு மெங்களுக்குச் சாதகமாய் வாராயோ.

ரூபாவதி:—என்னுடைய தோழியரே யென்றும்மைக் காண்பேனோ
என்னுடைய கிள்ளையே யெனைத்தேடித் திகைப்பாயோ.
ஆவலொடென் பாங்கியரோ டனுதினமும் விளையாடும்
வாவியே யென்றனில வந்திகையே போகின்றேன்.
மாருகக் கூவுகின்ற மாங்குயிலே போகின்றேன்
மாருக வாடுகின்ற மாமயிலே போகின்றேன்.
சுந்தரானந்தனொடு சுகமாக வாழ்ந்திருப்பேன்
சுந்தரனைத் தொழுமதனை நாயகியே போகின்றேன்.
அங்கயற்கண் ணம்மையே யன்புடைய நிலவுறேடு
மங்களமாய் நான்றினமும் வாழ்வே யருள்புரிவாய்.

இருவரும்:—மதுரைநகரே! யாங்கள் போகின்றேம்! நீ வாழ்வாயாக.

(இருவரும் போத

ஏழாங் களம்.

இடம்:—முனிவராச்சிரமம். காலம்:—வைகறை.

நடர்:—ஞானதீபரும் ஆன்மநாதரும்

ஞானதீபர்:—(கடவுளைத் துதித்துப்பாடுதல்.)

அதுலசித் யானந்த ஐயநாத பவரகித
சுகுணாதிர் மலசுகி லப்ர பால
அத்புத சலக்ஷண மநோஹர சுகந்தமய
ப்ரம்மாதி தேவவந் திதசித் பத
மதுரம்ருது வசநகவி தாப்ரசங் கப்ரிய
மகாமேரு கைலாஸ சைலா லய
மங்களா கரபரம சித்தசாந் தமயசிவ
மகிபால குருஸ்ரேஷ்ட வரபாகி மாம்.

(ஆன்மநாதர் வருதல்.)

ஆன்மநாதர்:—அடியேன் ஆன்மநாதன் நமஸ்காரம்.

ஞானதீபர்:—அப்பா! ஆன்மநாதா! நீ சீக்கிரமாய்ப் போய் ஸ்நானஞ்செய்து விட்டுவா. இன்றைக்கு, சுதினமா யிருக்கின்றது. ஆகையினாலே உனக்குக் குருகீதாபடனம் ஆரம்பிக்கலாமென்று ஆலோசனை பண்ணியிருக்கின்றேன். தாமஸம் பண்ணாமல் வந்துசேரு. ராகுகாலத்திற்குமுன் தொடங்கவேண்டும்.

ஆன்மநாதர்:—ஆகட்டும். இதோ ஸ்நானம் பண்ணிவிட்டு வந்துவிடுகிறேன். (தனக்குள்) குருகீதை நல்ல கிரந்தம்! (ஆன்மநாதர் போதல்.)

ஆச்சிரமவாசல்.

(சுந்தரானந்தனும் ரூபாவதியும்வருதல்.)

சுந்தரானந்தன்:—யார் ஐயா! போகிறவர்? இங்கே யிப்படிக் கொஞ்சம் திரும்ப வேண்டும்.

ஆன்மநாதர்:—நம்மைப் போகிறபோது கூப்பிடுகிறவன் யார்?—என்ன சமாசாரம்? ஐயா! நீங்களிரண்டுபேரும் யார்? எங்கேவந்தீர்கள்? உங்களுக் கென்னவேண்டும்? சீக்கிரஞ் சொல்லுங்கள். நான் போக வேண்டும்.

சுந்தரானந்தன்:—ஐயா! நாங்கள் இருவரும் மதுராபுரியிலிருப்பவர். எங்களுடைய பழைய ராஜாவைத் துரத்திவிட்டு, இப்போது சூர்சேன வர்மன் என்ற சோராஜா வந்திருக்கின்றான். அவன் செய்யுங் கொடுமையினைப் பொறுக்கமாட்டாமல் இரவில் ஒருவருக்குந்தெரியாமல் நாங்களிரண்டுபேரும் ஓடி வந்துவிட்டோம். இராத்திரி முழுவதும் கண்விழித்துத் தூங்காமல்வழிநடந்ததினால் மிகவும்களைத்திருக்கின்

றோம். நாங்கள் இருவரும் படுத்து இளைப்பாறுவதற்குச் சற்று இடங்கொடுப்பீரேல், அதிக நன்றியுள்ளவர்களா யிருப்போம்.

ஆன்மநாதர்:—அதற்சரி. கொஞ்சமிருங்கள். இதோ வருகின்றேன்.

(ஆன்மநாதர் உள்ளேபோதல்.)

சுந்தரானந்தன்:—என்கண்ணே! ரூபாவதி! உன்றகப்பனாரைக் குறித்து இப்படி யான் சொல்லியதற்கு வருத்தப்படுகின்றாயோ?

ரூபாவதி:—என்து நாயகனே! நீ யென்ன வார்த்தை சொன்ன போதிலும் அவை யெல்லாம் எனக்கு மதுரவசனமேயாம். ஆகையால் இதற்கு நான் வருந்துவானேன்?

சுந்தரானந்தன்:—இவ்வளவு அறிவுள்ள உன்னையே யான் என்னுயிர்த் துணைவியாய்ப் பெறுவதற்கு என்ன புண்ணியஞ் செய்தேனோ?

ரூபாவதி:—சரி, அதிருக்கட்டும். இப்போது என் பெயரென்ன வென்று கேட்டால் நான் என்னபெயர் சொல்லலாம்?

சுந்தரானந்தன்:—ஏதாவது "சுரூபன்" என்று சொல்லேன். என் பெயர் கேட்டால் நானுமேதாவது "சுந்தரன்" என்று சொல்லுகின்றேன்.

(ஆன்மநாதர்வருதல்)

ஆன்மநாதர்:—நீங்களிரண்டு பேரும் உள்ளேவரலாமென்று ஆசாரியரவர்களுடைய உத்தரவாயிருக்கின்றது. வாருங்கள்.

(எல்லாரும் உள்ளேபோதல்.)

ஞானதீபர்:—தீர்க்காயுஷ்மான்பவ!

(இருவரும்வணங்குதல்.)

உங்களைப் பற்றிய சமாசாரமெல்லாம் நம்முடைய சிஷ்யன் மூலமாய்த் தெரிந்துகொண்டோம்.—மற்றைப்படி உங்களுடைய நாமதேயங்களென்ன?

சுந்தரானந்தன்:—என்பெயர் சுந்தரன்; அவன்பெயர் சுரூபன்.

ஞானதீபர்:—சரி, உங்களுடைய நாமதேயங்களும் அழகாகவேயிருக்கின்றன! அதிருக்க. இப்போதிருக்கிற ராஜன் என்ன அவ்வளவு பாவியா? இதற்கு முன்னே யுங்களுடைய ராஜாவும் ராஜாத்தியும் நம்முடைய ஆசிரமத்தில் ஏகராத்திரந் தங்கி மறுநாட் சோளதேசத்திற்கு நம்முடைய அனுமதிப்பிரகாரம் போனார்கள். அவர்களைத் துரத்திய பிற்பாடும் இந்தச் சூரசேனவர்மனுடைய க்ரோம் குறையவில்லையா?

சுந்தரன்:—சுவாமிகாள்! அவன்செய்யும் அநீதங்களைக் குறித்துயான்சொல்லுவது அவ்வளவு சரியானதன்று. ஏனென்றால் யான் பூர்வராஜாவிற்கு வேண்டியவன். இப்போது என்னுடன் வந்திருக்கிற சுரூபனோ தற்காலத்துள்ள சூரசேனவர்மனுக்கு வேண்டியவன். அவனிடம் வேண்டுமென்றாற் கேளுங்கள்.

சுரூபன்:—சுவாமிகளே! எங்கள்ராஜா சூரசேனவர்மர் எவ்வளவோ நியாயமாய் எங்கள் சோழதேசத்தில் அரசாண்டுவந்தார். அப்படியிருந்தவர் பாண்டியதேசத்தைச் செயித்தவுடனே குணம் மாறி அநியாயஞ் செய்யத் தொடங்கி விட்டார். முதல் முதலில் முந்தியிருந்தராஜா சற்குணவழுதியையும் அவர் மனைவியையும் சிறைச்சாலையிலே வைத்தார்! அப்புறம் அந்தராஜா சற்குணவழுதியின் மகனை அவனுடைய தாயார் தகப்பனாரோடு வைக்காமல் வேறு சிறைச்சாலையில் வைத்தார்! பிறகு சற்குணவழுதியையும் அவர்மனைவியையும் காட்டில் துரத்திவிட்டார். அதன்பிற்பாடு அவர்மகன் சிறைச்சாலையிலிருப்பவனையுங் கொல்லத் தலைப்பட்டார்!—

ஞானதீபர்:—ஆகா கா கா! மகாபாபம்! பரமசண்டாளன்! பதிதன்!—(மௌனம்) இவற்றிற்கெல்லாம் நாம் என்னபண்ணலாம்? சிவசிவ சிவசிவா!—அந்தப்பாதகனைப்பற்றி யொன்றும் நாம் இனிமேற் பேசவேண்டாம்.—சரி. இருக்கட்டும். நீங்கள் இருவரும் இப்படி நித்திரை கூட இல்லாமல் ராத்திரி காலத்திலே யொருவருக்குந் தெரியாமல் ஓடி வருவானேன்?

சுந்தரன்:—பொழுது விடிந்தால் எங்க ளிருவரையுங் கொல்லப்போகிறதாக அரசன் சொல்லிய சங்கதி யெங்கள் காதிற்பட்டது. உடனே யாங்கள் ஒருவரோடுஞ் சொல்லாமற் புறப்பட்டு வந்துவிட்டோம். நீங்களே யெங்களுக்கு அடைக்கலம். ஆகையால் எங்களைக்காத்து ரக்ஷிப்பது தங்களைப் பொறுத்தது.

ஞானதீபர்:—அதற்கு நீங்கள் யோசனை செய்யவேண்டுவதில்லை. நம்முடைய சிஷ்யன் ஆன்மநாதன் வந்ததும் உங்கள் இரண்டுபேரையும் சோளதேசத்திலிருக்கும் உங்கள் ராஜா சற்குண பாண்டியனிடமே யனுப்புகின்றோம். பயப்படாதிருங்கள்!

சுரூபன்:—கருணாநிதியாகிய தங்களைச் சரணமடைந்த பிற்பாடும் எங்களுக்குப் பயமுண்டாகுமோ?

ஞானதீபர்:—அவையெல்லாம் சரிதான். நீங்கள் நேற்றிராத்திரியெல்லாம் நித்திரையில்லாமல் வழிநடந்ததினாலே யுங்களுக்கு அலுப்பாயிருக்கும். ஆகையால் நீங்களிரண்டுபேரும் நம்மோடு வாருங்கள். உங்களுக்கு ஒரு விடுதியிடந் தருகின்றோம். அவ்விடத்தில் நன்றாய் நித்திரைசெய்யுங்கள். இன்று சாயங்காலமே யுங்களிருவரையும் சோளராஜ்யத்திற்கு அனுப்புவோம்.

(எல்லாரும்போதல்.)

இருவரும்:—இதோ வருகின்றோம்.

மூன்றாம் அங்கம்

முற்றிற்று.

அங்கம்-IV.

முதற்களம்.

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்—காலை.

நடன்:—சூரசேனவர்மன்.

சூரசேனவர்மன்:—நாம் இனிமேல் தாமசமென்பதே செய்யக்கூடாது. வீரேந்திரசோழனே நம்முடைய தேசத்தின்மீது படையெடுத்து வருவதற்காகத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றானென்று கேள்விப்பட்டபிறகும் நாம் சும்மா செய்யாதிருப்பது சரியானதன்று. நாமும் தக்க ஏற்பாடுகள் செய்வதற்கு இப்பொழுதே தொடங்கவேண்டும்.—நாம் நினைத்தது போலவே அவனும் படையெடுத்து வரப்போகின்றான். ஆகையால் நாமும் நம்முடைய அந்தரங்க எண்ணத்தை இன்றைக்கே நிறைவேற்றிவிடவேண்டும். அப்புறம் மேல் நடக்கப்போகிறதைப் பார்த்துக்கொள்வோம்.

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் அனேக கோடிவந்தனம். சிறை காவற்காரர்கள் இரண்டுபேர் வாசலில் வந்திருக்கின்றார்கள். இது சங்கதி சமூகத்தில் தெரியப்படுத்திவிட்டேன்.

சூரசேனவர்மன்:—சரி. அவர்களை யிங்கே வரச்சொல்.

சேவகன்:—மகாராஜா! அப்படியே.

(சேவகன்போதல்.)

சூரசேனவர்மன்:—நாம் அவர்களுக்காகச் சொல்லியனுப்பவேண்டுமென்று எண்ணவும் அவர்களும் வந்துவிட்டார்களே!—

(காவலாளர்வருதல்.)

இப்படி, சமீபத்தில் வாருங்கள். என்ன சமாசாரம்? சொல்லுங்கள்.

முதற்காவலாளன்:—மகாராசாவே! நடந்த சங்கதியை நாங்கள் என்னென்று சொல்வோம்? எங்களுடைய காவலிலிருந்த ராசாமகன் சுந்தரானந்தன் நேற்றிராவிலே சிறையிலுள்ள மதிலேறி உடம்பெல்லாம் காயப்படுத்திக்கொண்டு வெளியே குதித்து ஓடினான். குதித்தவுடனே காதிலே சத்தம் கேட்டது. உடனே நாங்கள் வெளியே வந்துபார்த்தால் இந்தப்பயல் ஓடினான்! உடனே நாங்களும் அவனைத் தொடர்ந்துகொண்டே யோடினோம். அவனோடே நாங்களோடிக் கடைசியில் அவனை வெகுதொலையோய்ப் பிடித்தோம். உடனே அவன் கையில் என்னவோவொன்றை வைத்துக்கொண்டிருந்திருக்கிறானே இவனைக் காயப்படுத்திப் போட்டான்! உடனே எங்களுக்கும் அவனுக்கும் சண்டை நடந்து அந்தச் சண்டையில் நாங்கள்

அவனைக் கொன்றுபோட்டோம். அதற்காக மகாராசா அவர்கள் எங்களை மன்னிக்கவேண்டும்.

(பாதங்களில்விழுதல்.)

சூரசேனவர்மன்:—ஏடா! எழுந்திரு! அவனையோடிப்போக விட்டுவிட்டு இங்கே வந்து பொய்யெல்லாம் பேசுகின்றாயா?

இரண்டாங்காவலாளன்:—இல்லை, இல்லை, மகாராசா! நாங்கள் பொய் பேசவில்லை. நீங்கள் வேண்டுமென்றாலும் வந்து அந்தப் பயல் ஏறிவிழுந்த மதிலைப் பாருங்கள். அவன் உடம்பிற் காயப்பட்டு ரத்தம் சிந்தினது கூடத்தெரியும்!

சூரசேனவர்மன்:—நிஜந்தானா?

(முதற்காவலாளனெழுந்திருத்தல்.)

முதற்காவலாளன்:—ஆமாம். நிசந்தான். மகாராசா! நாங்கள் அவன்தலையைக்கூடக் கொண்டு வந்திருப்போம்.

சூரசேனவர்மன்:—ஓ, சீ! அதுகூடாது.

இரண்டாங்காவலாளன்:—அதுதான், மகாராசா! நாங்கள் எங்கே ஊராருக்குத் தெரிந்தால் என்னவாவது கலகம் கிலகமுண்டாகுமோ என்று பயந்து அங்கேதானே குழிவெட்டிப் புதைத்துப்போட்டோம்! தோண்டித் தலையைக் கொண்டுவரச்சொன்னால் கொண்டு வருகிறோம். மகாராசா!

சூரசேனவர்மன்:—அதெல்லாமிருக்கட்டும். ஏடா! இந்தச் சங்கதி யூராருக்குத்தெரியாதே!

இருவரும்:—தெரியவே தெரியாது, மகாராசா!

சூரசேனவர்மன்:—சரிதான். நீங்கள் இருவரும் இப்போதுபோங்கள். இதைக்குறித்து நாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம். மந்திரி சுசீலர் வருகிற சமயமாயிற்று.

(சிறைகாவலாளர்போதல்.)

இப்போது இவர்கள் செய்தது நமக்கு நல்லதாய்த்தான் தோன்றுகின்றது. ஆனாலும் இது ஊராருக்குத் தெரிந்துவிட்டால் என்ன செய்கிறது?—(மௌனம்) ஜனங்கள் ஏற்கனவே நம்மைக் கொடியன் கொடியனென்று சொல்லுவதாகக் கேள்விப்படுகின்றோம். இப்போது இந்தச் சங்கதியும் அவர்கள் காதிற் படுமானால் ஏதேனும் ஒருகலகம் கட்டாயமாய் நடக்கத்தான் நடக்கும். இதற்கென்ன செய்யலாம்? கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே!—(மௌனம்) நேற்றிரவு நாம் கண்ட கனவை நினைக்கும்போது உடம்பு நடுக்குகின்றதே! வீரேந்திரசோழன் நம்மைக்காலில் விலங்கிட்டுச் சற்குணவழுதியின் முன் நிறுத்தியிருப்பதாகக் கனவுகண்டோமே! அப்படியும் நேரிடக் கூடுமோ?

சேவகன்:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் சேவகன் வந்தனம். நம்முடைய ராஜ்ய ஒற்றர் தலைவன் வந்திருக்கிறான். இதுசங்கதி சமுகத்தில் தெரியப்படுத்திவிட்டேன்.

சூரசேனவர்மன்:—சரி. நீபோய் அவனை யிவ்விடம் வரச்சொல்.

(சேவகன்போதல்.)

இந்த ஒற்றர்தலைவன் என்னசமாசாரஞ் சொல்ல வந்திருக்கிறானோ? கேட்போம்.

(ஒற்றன்வருதல்.)

ஒற்றன்:—மகாராசா அவர்களுக்கு அடியேன் ஒற்றன் இருளப்பதேவன் வந்தனம்.

சூரசேனவர்மன்:—ஏ! இருளப்பா! என்ன? விசேஷம் ஏதாவதுண்டோ?

ஒற்றன்:—மகாராசா! நேற்றிராவிலே யிரண்டுபேயல்கள் கட்குடித்துப் போட்டுக் கண்டபடி வாய்க்கு வந்தனவெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். என்னசங்கதியென்று கிட்டத்திலே போய்ப்பார்த்தால் அவ்விருவரும் தாங்கள் இரண்டு மூன்று நாளைக்குமுன் சந்தேகப்பட்ட கனவான்களுடைய வேலைக்காரர்கள் தாம். அவர்கள் என்ன பேசிக் கொண்டார்க ளென்றால்!—தாங்கள் வெளியிலே எப்போதாவது வரும்போது சமயம் பார்த்துத் தங்களைக் குத்திப்போடவேண்டுமென்பதாம். இது என்காதிற் பட்டவுடனே நான் இன்னும் மூன்றுபேரைக் கூட்டிக்கொண்டு சென்று அந்த இரண்டுபேர்களையும் வேலைதீர்த்துப்போட்டேன். அதற்காக என்னை மன்னிக்க வேண்டும். மகாராசாவே!

சூரசேனவர்மன்:—நீ யதற்காகப் பயப்படவேண்டாம். நீ வெகு நல்லகாரியஞ் செய்தாய்! இதைத்தவிர வேறு ஏதாவது சமாசாரமுண்டா?

ஒற்றன்:—இதைத்தவிர வேறே யொன்றுமில்லை. மகாராசா?

சூரசேனவர்மன்:—ஆனாற்சரி. நீபோ. அப்புறம் பேசிக்கொள்வோம்.

(ஒற்றன்போதல்.)

ஓகோ! சரிதான். சனங்களுக்கு நம்பேரி லுள்ள வெறுப்பானது முற்றி விட்டதுபோலும்! நாம் வெளியிற் புறப்படும்போது நம்மைக் குத்துகிறதா! அவ்வளவு தைரியசாலி யாவனோ? பார்த்துக்கொள்வோம். இனி யொன்றுக்கும் பயப்படக்கூடாது. யாருக்கும் தாட்சணியப் படக்கூடாது. நமக்குத்தோன்றுகிறபடியேசெய்யவேண்டும்! இதைக்குறித்து மந்திரி சபிலரிடத்துந் தெரிவிக்கக்கூடாது. நடக்கிறது நடக்கட்டும். இப்போதே சென்று நாம் போர்வீரருக்குச் சன்னத்தமாயிருக்கும்படி யுத்தரவு கொடுக்கவேண்டும். இனித் தாமசம் செய்யக்கூடாது.

(போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:—இராஜபுத்திரியினந்தப்புரம். காலம்:—காலை.

நடிகர்:—கோமளவல்லியும் செவிலியும்.

கோமளவல்லி:—ஐயோ! ரூபாவதி! நேற்றிராத்திரி நான் கண்டகனா நிஜமாய்விட்டதே! என்னருமை மகளே! நீ யெவ்விடம்போனாய்? உன்னைக்காணாமல் ஒருநிமிஷமாவது என் உயிர்நிற்குமோ?—ஆ! தெய்வமே! இப்படிச்செய்வது உனக்குத்தகுமோ?—மீனாட்சி! பரதேவதே! உன் சந்நிதானத்தில் இப்படி நடப்பதுமுண்டோ?—எனக்கொரே மகளாயிருந்த ரூபாவதி! உன்னை நேற்றிராத்திரி யொரு பெரியபூதம் தூக்கிக்கொண்டு போவதாகக் கனாக்கண்டேனே! ஓ! அப்படியேதான் ஒருவேளை நடந்துவிட்டதோ?—(மௌனம்.)

(இரங்கிப்பாடுதல்.)

பொன்னனைய வெழின்மாதே புகழுறுரூ
பாவதியென் புதல்வீ சேர
மன்னவன்றன் காதலியின் முளைத்திட்டு
மகிழ்வுத்து மனம்ப ரப்பிக்
கன்னன்மொழிச் சாறொழுகுங் கனிநுவைய
கனியேயென் கண்போல் வாளே
யென்னருமை மகளாய கிளையிழந்தும்
யான்றனியே யிருப்ப தேயோ.

இலகொளிரு [illegible] தானே தெவிட்டாத
தென்னமுதே தேன்போல் வாளே
சங்கமெனுந் தனத்தானே கிளிமொழியுங்
கோவிழுந் தையால் [illegible]
தங்கமெனுந் தனத்தானே காந்தளொளுங்
[illegible] தகைசேர் மானே
செங்குமுத விதழுறு ரூபாவதியே
யெவ்விடத்துச் சென்றாய் சென்றாய்.

செவிலி:—ஐயோ! இந்த விஷயத்தை ராஜா அவர்களிடம் எப்படித் தெரிவிப்பேன்?—உடம்பு சௌக்கிய மில்லாமையினாலே நேற்று நீ புத்திசொல்லக்கூடப் போகவில்லையே!— ரூபாவதி! ரூபாவதியெங்கே போனாய்? ஓ! உன்பிடிவாதத்தை [illegible] இல்லாமையால் வெறுத்துச்சென்று போய்விட்டதே!—

கோமளவல்லி:—தெய்வமே! இந்தமாதிரி நாங்கள் புலம்பிக்கொண்டிருப்பதைக் கேட்டும் உனக்கு இரக்கமில்லையோ?—மீனாட்சிசுந்தரேசுவரா! உன்னை ஒருநாட்கூடத் தவறாமல் தரிசனம் பண்ணினதின்

பலன் இதுதானோ? இதுதானோ?—ஐயோ! அவளுடைய தோழி களைக் கூட்டிவரப் போன ஆளும் வரவில்லையே!

(இரங்கிப்பாடுதல்.)

எத்தனையோ தவம்புரிந்து மியம்பரும்பன்
ேனான்புகள்யா னெடுத்தும் பெற்ற
வுத்தமிரூ பாவதியே யொருமொழியு
முரையாதெங் கொளித்திட் டாயோ.

அஞ்சுகமே இஞ்சுகமே யன்புறுரூ
பாவதியே யருளி லார்போல்
வஞ்சமே நீபுரிந்து மறைந்துநின்று
வருத்தவெண்ம மனங்கொண் டாயோ.

சேவிலி:—தாயே! நாம் இப்படிப் புலம்புவதிற் பிரயோசனமில்லை. எல்லா வற்றிற்கும் அம்புஜாட்சியும் கனகமாலையும் வரட்டும். அவர்களை விசாரித்துக்கொண்டு அப்புறம் ராஜா அவர்களிடம் தெரியப்படுத் திக் காலதாமஸமில்லாமல் தேடச் சொல்லுவோம். அதுவரையிற் சற்று விசனப்படாமலிருக்கவேண்டும். மேலும், இப்போது ராஜா அவர்கள் வருகிற சமயமாயிற்று. அவர்கள் வரும்போது அழுது கொண்டிருப்பது சரியில்லை. ஏதேனும் அவர்கள் செய்ய நினைத்தி ருந்தால் அதற்கு இப்படி நாம் அழுவது அபசகுனம்போல் ஆகும். ஆகையால் நாம் இப்பொழுது அழப்படாது.—

கோமளவல்லி:—ஐயோ! நீ யென் விசனத்தைக் கொஞ்சங்கூட அறியா மற் சொல்லுகின்றாயே! நேற்றிராத்திரி ஒருசாமமட்டும் என்னோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு அப்புறம் படுக்கை யறைக்குப் போ னாள். அவ்வளவுதான். அதன்பிற்பாடு இப்பொழுதுதான் நீசொல்லி யபின் பார்த்தேன். அவளைக் காணேன்! என்னசெய்வேன்? என்ன செய்வேன்? (அம்புஜாட்சியுங் கனகமாலையும் வருதல்.)

சேவிலி:—அதோ அம்புஜாட்சியுங் கனகமாலையும் வருகின்றார்கள். இப் பொழுது அழவேண்டாம். கொஞ்சம் பேசாதிருந்தால் நல்லது.

அம்புஜாட்சி:—என்னை வரும்படி சொல்லி யனுப்பினீர்களாமே! என்னத் திற்கு அவ்வளவு அவசரம்? என்ன காரியம் இப்போது?

கனகமாலை:—ரூபாவதி யெங்கே காணோம்? உடம்பு சௌக்கியமா யிருக் கின்றாளோ இல்லையோ!—

கோமளவல்லி:—ஐயோ உங்களுக்கொன்றுந் தெரியாதோ!—

சேவிலி:—தாயே! கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஏடி! அம் மா! அம்புஜாட்சி! உனக்கு என்னவாவது ரூபாவதியைப் பற்றித்

தெரியுமா! நேற்றிராத்திரி யிருந்தவளை யின்று பொழுது விடிந்து பார்த்தாற் காணோமே!

அம்புஜாட்சி:—இதென்ன! ஆச்சரியமாயிருக்கின்றதே!

கோமளவல்லி:—ஓ! ரூபாவதி! உன்னை மறுபடியுங் காண்பேனோ!

கனகமாலை:—(அழுது பெருமூச்செறிந்துகொண்டு) அம்புஜாட்சி! இது என்ன! கனவிலுங் காணாத சமாசாரமா யிருக்கின்றதே!

அம்புஜாட்சி:—(பெருமூச்செறிந்து) ரூபாவதி! ரூபாவதி! யாங்கள் உன் னோடு நேசங்கொண்டு அநுபவித்த பாக்கியம் இவ்வளவு தானோ? இவ்வளவு தானோ? (இரங்கிப்பாடுதல்.)

உமையவடன் னருளாலே யுதித்திரூ பாவதியே
யிமையவரு மறியாத வின்னமுதே யெழிலுடனே
கமையவுறா நட்புசெய்தல் அதுவுமொரு கரும்பேபோ
யெமையல்லயாங் இருக்குமவண் மியற்றுதது நேரேயோ.

கனகமாலை:—(இரங்கிப்பாடுதல்.)

அன்புருகி கொண்டவளே யானந்தப் பூங்குயிலே
யின்புறுரூ பாவதியே யெங்கொளித்துச் சென்றாயோ.
கன்னிகைரூ பாவதியே காமனுவென் றிக்கொடியும்
மின்னலிரத் தேடுவோ னெங்கிருந்து தோன்றுமோ.
உருக்கியிட்ட பொற்கொடியே யொன்றுநல்ல புவிதனி
லிருக்குமிடஞ் சற்றேனு மெமக்குரைக்கக் கூடாதோ.
கோட்டமிலாக் கற்றிநின்ற கோதறுபூங் காவனமே
வாட்டமுங்க ளுன்னிட்டும் வந்திடுதே யுண்டுகொலோ.

சேவிலி:—அம்மாதிருமகள்! அதோ ராஜா அவர்கள் வருகின்றார்! நான் இந்தச்சமாசாரத்தைத் தெரிவிக்கின்றேன். அதுவரையிற் பேசாதி ருங்கள். (சூரசேனவர்மன்வருதல்.)

அரசனே! அரசனே! நடந்தசெய்தியையென்னென் றுரைப்பேன்? என்னென் றுரைப்பேன்? அறியோம் நாங்கள், அரசனே! அந்தமா யம்! மகாலட்சுமியே தங்களுடைய மகளாகவந்திருந்தாற் போன்ற நம்முடைய ரூபாவதி—

சூரசேனவர்மன்:—ஆ! ரூபாவதியா? என்னசங்கதி? உடம்பு அசௌக்கிய மோ? சொல்லுங்கள் உடனே.

சேவிலி:—ஐயோ! அரசனே! தங்களிடம் எப்படி யுரைப்பேன்? எப்படி யுரைப்பேன்?

சூரசேனவர்மன்:—என்ன சங்கதி? சீக்கிரஞ் சொல்லு. பயப்படாதே!

சேவிலி:—நேற்றிராத்திரி படுக்கை யறையிலுறங்கின நம் ரூபாவதியைப் பொழுதுவிடிந்து பார்த்தாற்காணோம்! காணோம்! அரசனே! என்ன செய்வோம்?

சூரசேனவர்மன்:—ஆ! இதென்ன? வேடிக்கையாயிருக்கின்றதே!

கோமளவல்லி:—ஐயோ! ரூபாவதி! நீயுயிரோடிருக்கிறாயோ? இல்லையோ?

சூரசேனவர்மன்:—சரி. இருக்கட்டும். நீங்கள் இந்த அரண்மனைமுழுவதுந் தேடிப் பார்த்தீர்களா?

சேவிலி:—அரசனே! பலதரந்தேடியுங் காணோம். அதன்மேல் அவளுடைய உயிர்த் தோழிகளாகிய இந்த இரண்டு பேரையும், அழைத்துக் கேட்டோம். இவர்களுக்கும் இதைக்குறித்து ஒன்றுந் தெரியவில்லை. இனி யென்ன செய்வோம்? என்னசெய்வோம்?

சூரசேனவர்மன்:—நீங்கள் சற்று அமைதியாயிருங்கள். பதறவேண்டாம். நாம் இப்பொழுதே போய்ச் சேவகர்களை நாலாபக்கமும் அனுப்பித் தேடச்சொல்வோம். மந்திரி சுசீலரையுங் கூப்பிட்டு ஆலோசிப்போம். அதுவரைக்குங் கூக்குரற் போடாதிருங்கள்.

(சூரசேனவர்மன்முதலியயாவரும்போதல்.)

மூன்றாங்களம்.

இடம்:—நயவசனர்வீடு. காலம்:—பிற்பகல்.

நடர்:—நயவசனரும் சிலகனவான்களும்.

முதற்கனவான்:—ஏன்? ஐயா! நயவசனரே! இந்தச் சூரசேனவர்மன் என்ன இப்படிக் கெட்டதொழில்கள் எல்லாஞ் செய்ய ஆரம்பித்துவிட்டான்? அவன் செய்கிற தொன்றும் நன்றாயிருக்கவில்லையே!

நயவசனர்:—ஆமாம். என்னசெய்கிறது? நாளுக்குநாள் அவன்கொடுமை யதிகப்படுகின்றதே யொழியக் குறைகிறதைக் காணோம்!

இரண்டாங்கனவான்:—இப்பொழுது மாத்திரம் எல்லாரும் "என்னசெய்கிறது என்னசெய்கிறது?" என்று சொல்லுங்கள். அப்பொழுதே நான் சொன்னபடி கேட்டிருந்தால் எல்லாஞ் சரியாய்ப் போயிருக்கும்!

மூன்றாங்கனவான்:—எல்லாருமாகச் சேர்ந்து காரியத்தைக் கெடுத்தீர்கள்! இப்பொழுது கிடந்து ஒருவரையொருவர் பார்த்துவிழியுங்கள்!—

முதற்கனவான்:—எல்லாஞ் சுந்தரானந்தனைக் கேட்டுச் செய்யலாமென்று நயவசனர் சொன்னபோது, நீங்கள் தாமே சரி சரியென்று ஒத்துக் கொண்டு பேசாதிருந்துவிட்டு இப்போது பேசவந்தீர்களே! இப்ப

டி நடக்குமென்று தெரிந்திருந்தால் அப்பொழுதே சொல்லுகிறது தானே!

இரண்டாங்கனவான்:—சுந்தரானந்தனைக் கேட்டதிலே யென்னபிசகு? அவன் தான் நயவசனர் தம்பியிஷ்டப்படி செய்யட்டுமென்று சொல்லிவிட்டானே! அவன் பேரிலே தவறொன்றுமில்லை.

மூன்றாங்கனவான்:—எல்லாம் இந்த நயவசனராலேயே வந்தன. அப்போதே என் எண்ணப்படி விட்டிருந்தால் இப்படியெல்லாம் அநியாயம் ஏன் நடக்கும்?

முதற்கனவான்:—அப்படியென்ன ஐயா! அநியாயம் நடந்துவிட்டது?

இரண்டாங்கனவான்:—நம்முடையசமுத்திரவழுதிக்காகச் சோழன் வீரேந்திரன் படையெடுத்து வரப்போகின்றானென்பது கேட்டு இந்தச் சூரசேனவர்மன் நம்முடைய சுந்தரானந்தனையுங் கொன்று போடுவதாகத் தீர்மானித்துவிட்டானாம். இதைவிட அநியாயமுங் கொடுமையும் வேறென்னவேண்டும்?

நயவசனர்:—ஐயோ! கனவான்களே! நடந்தகொடுமை அவ்வளவுதான் என்று நினையாதீர்கள். அதற்குமேலும் நடந்துவிட்டது! நடந்துவிட்டது! நம்முடைய சுந்தரானந்தனை—

மூன்றாங்கனவான்:—என்ன? என்ன? நம்முடைய இளவரசன் சுந்தரானந்தனுக்கென்ன?

நயவசனர்:—ஐயோ! உமக்கு யான் எப்படிச் சொல்லுவேன்?

இரண்டாங்கனவான்:—பாதகமில்லை. சொல்லுஞ்சொல்லும். சீக்கிரம்!

நயவசனர்:—ஐயா! இந்தப்பாவி சூரசேனவர்மன் நம்முடைய சுந்தரானந்தனைநேற்றிராத்திரி கொன்றுபோட்டான்! கொன்றுபோட்டான்!

மூன்றாங்கனவான்:—அப்படியா செய்தான்? இனிமேல் ஒருநிமிஷமானாலும் தாமதியேன்! இதோ! பாருங்கள்! அந்தப்பாதகனை நான் கொன்று விடுகின்றேன்! உங்கள் பேச்சை யினிக் கேட்கவே மாட்டேன்! இந்தச் சூரசேனவர்மனைத் தொலைத்துவிட்டுத்தான் மறுவேலைபார்ப்பேன்!

(மூன்றாங்கனவான்போதல்.)

நயவசனர்:—இப்படி யெல்லாந் தோன்றினபடி குதிப்பீர்களென்று தானே யான் உங்களிடஞ் சொல்லக் கொஞ்சம் யோசித்தேன்!

முதற்கனவான்:—இவர்க ளெப்போது மிப்படித்தானே! ஆழ்ந்து யோசனை பண்ணுகிறதில்லை! ஹா! ஹா! என்று குதிக்கத்தான் தெரியும்.

இரண்டாங்கனவான்:—சரிதான். உங்கள் பேச்சைக் கேட்டால் எல்லாக் காரியமும் வெகுசீக்கிரத்தில் முடிந்துவிடும்! நீங்களிரண்டுபேரும் இப்படியே பேசிக்கொண்டிருங்கள்! இந்தச்சமாசாரத்தைக் கேட்

டதுமுதல் எனக்கு இங்கே இருக்கத் தோன்றவில்லை! யானும்போகின்றேன்.

(இரண்டாங்கனவானும்போதல்.)

முதற்கனவான்:—இதென்ன? இவர்களிப்படி யாரம்பித்து விட்டார்கள்! ஏனையா? நயவசனரே!

நயவசனர்:—ஆமாம். அதற்கு நாமென்ன செய்யக்கூடும்? நானோ சூரசேனவர்மனுக்கு வேண்டியவன். ஆகையால் நானிந்த விஷயங்களில் தலையிடுகின்ற சங்கதி யரசனுக்குத் தெரியா திருக்க வேண்டுமே யென்று எக்கங் கொண்டிருக்கிறேன்.

முதற்கனவான்:—இவர்கள் தங்கள் எண்ணத்தைச் செய்துமுடித்தாற் சரிதான். மற்றைப்படி தவறிவிட்டா லென்னசெய்கிறது?

நயவசனர்:—பயித்தியக்காரர்கள் அவஸ்தை! நமக்கென்ன? நம்முடைய யோசனையைத் தான் கேட்கமாட்டோ மென்று போய்விட்டார்களே! அதைக்குறித்து நாம் ஏன் கவலைப்படவேண்டும்?

(மூன்றாங்கனவான்மீட்டும்வருதல்.)

முதற்கனவான்:—ஏன்? ஐயா! போனீரே! என்னசங்கதி? திரும்பிவந்தீர்!

மூன்றாங்கனவான்:—ஓ! நயவசனரே! ஓடிவாரும்! எழுந்திரும்! குதிப்போம்! வாரும்!

நயவசனர்:—ஏன்? உம்முடைய காரியம் முடிந்துவிட்டதோ? என்ன?

மூன்றாங்கனவான்:—இல்லை, இல்லை. வேறுசமாசாரம்.

முதற்கனவான்:—வேறே யென்னசமாசாரம்? என்ன?

மூன்றாங்கனவான்:—நாம் செய்யாத போதிலும், சுவாமி சுந்தரேஸ்வரரே அது செய்வாரே யன்றோ? அவருக்குங் கூடவா கண்களில்லாமற் போய்விடும்! ஹூம்! இவ்வளவும் வேண்டு மந்தக் கொலை பாதகனுக்கு!

நயவசனர்:—என்ன? சோழன் படையெடுத்து வந்து விட்டானோ?

மூன்றாங்கனவான்:—அதுவுமில்லை. வேறுசங்கதி. எழுந்திரும்! தனிக்கூடம்! அப்புறஞ் சொல்லுகின்றேன்.

முதற்கனவான்:—என்னசங்கதி? சொல்லுமே!

மூன்றாங்கனவான்:—அரசன்மகன் ரூபாவதியைக் காணவில்லையாம். எதேதோ பூதம் தூக்கிக்கொண்டு போய்விட்டதாம்! அவ்வளவுதான் சமாசாரம்.

நயவசனர்:—இதென்ன? வேடிக்கையாயிருக்கின்றதே! நிஜந்தானோ?

மூன்றாங்கனவான்:—ஆம். நிஜந்தான்! அதற்குஞ் சந்தேகமுண்டோ?

முதற்கனவான்:—இப்படி யெல்லாம் அநியாயஞ் செய்தால் தெய்வந்தான் பொறுக்குமோ?

மூன்றாங்கனவான்:—அதுதான் தெய்வமும் பொறுக்கவில்லை!.

நயவசனர்:—அப்படியாயின், நான் அரண்மனைக்குப் போய்த் தெரிந்து கொண்டு வருகின்றேன்.

முதற்கனவான்:—சரி. இப்போதெனக்கும் போகவேண்டும்.

மூன்றாங்கனவான்:—நானும் வருகின்றேன். இருவரும் போகலாம்.

நயவசனர்:—நீங்கள் எல்லாரும் இன்றைக்கிராத்திரி வாருங்கள். எல்லாம் பேசுவோம். நான்போய்ச் சகலசங்கதிகளையும் பற்றி விசாரித்துக் கொண்டு வந்துவிடுகின்றேன்.

மற்றையிருவரும்:—சரி. அப்படியே செய்வோம். (எல்லோரும்போதல்.)

நான்காங்களம்.

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்—பிற்பகல்.

நடிகர்—சூரசேனவர்மனும் சுசீலனும்.

சுசீலன்:—இதொன்றும் நாம் பதறக் கூடாது. கொஞ்சம் அமரிக்கையாயிருக்கவேண்டும்.

சூரசேனவர்மன்:—இதென்ன? நம்பக்கூடாததா யிருக்கின்றதே! இராத்திரிப் படுக்கையறையி லிருந்தவளைப் பொழுதுவிடிந்து பார்த்தாற் காணோ மென்றால் எவ்வளவு ஆச்சரியமாயிருக்கின்றது! யாரைக் கேட்டாலும் "ஆ அப்படியா?" என்று சொல்லுகின்றார்களே யொழிய வேறொன்றுஞ் சொல்லுகின்றார்களில்லை. ஏன்? சுசீலரே! இதற்கென்ன செய்யலாம்?—இந்தவூரார் விஷயத்தில் நியாயமென் [illegible]க்கப்படாது. இருக்கட்டும், எல்லாவற்றிற்குஞ் சொல்லுகின்றேன் அவர்களுக்கு!

சுசீலன்:—தேடிக்கொண்டுவரப் போன சேவகர்கள் வரட்டுமே! எல்லாச் சங்கதியுந் தானேதெரியும். பதறுவானேன்?

சூரசேனவர்மன்:—ஓ! சுசீலரே! எமக்குத் தோன்றுகிறமட்டில், இந்த வூரிலேதான் யாராவது இராத்திரியில் அவள் தூங்கும்போது அவளைத் தூக்கிக்கொண்டுபோய் எங்கேயாவது கொன்றுபுதைத்து விட்டார்களோ என்று சந்தேகமா யிருக்கின்றது. இதுமாத்திரம் உண்மையென்று தெரிந்தால், தெரிந்த அந்தவினாடியிலேயே ஊர் முழுவதையும் அக்கினிபகவானுக் கிரையாக்கி விடுவோம்.

சுசீலன்:—தாங்கள் சந்தேகப்படுகிறபடியே சில கொலைகாரப்பயல்கள் இந்தக்காரியஞ் செய்திருந்தாலும், அரசராயிருக்கிற தங்களுக்கு ஊர்முழுவதையும் பொசுக்கிவிடுவது அழகன்றே! தாங்கள் குற்றவாளிகளைத்தானே தண்டிக்கவேண்டும்?

சூரசேனவர்மன்:—எமக்குக் கொடுங்கோன் மன்னன் என்று பேர்வந்த போதிலும் பாதகமில்லை. அவர்களைக்கொல்லாமல்விடமாட்டோம். சந்தேகப்பட்டவர்களை மாத்திரஞ் சித்திரவதை செய்வோம்.

(நயவசனர்வருதல்.)

சுசீலன்:— அதோ நயவசனர் வருகின்றார்.

சூரசேனவர்மன்:—ஏ! சேவகா!

நயவசனர்:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் நயவசனன் வந்தனம்.

சேவகன்:—மகாராஜா! சித்தம்!

சூரசேனவர்மன்:—இந்த நயவசனப் பயலைப் பிடித்து அடித்துக் கட்டி விலங்கிட்டுச் சிறைச்சாலையிலே போடு. நயவசனனாம்! இவன் நய வஞ்சகன்!

சேவகன்:—நயவசனரையா?

சூரசேனவர்மன்:—ஆம்! இந்த நயவஞ்சகப்பயலைத்தான்!

(அரசன்நயவசனரையுதைத்தல்.)

சுசீலன்:—(தனக்குள்) இதென்ன? விரோதமாயிருக்கின்றதே!

நயவசனர்:—அப்படி மகாராஜா அவர்களுக்கு விரோதமாக அடியேன் ஒன்றுஞ் செய்யவில்லையே! அப்படியிருக்க என்னை வீணே தண்டிப்பானேன்?

சூரசேனவர்மன்:—என்னேடா!—சேவகா! சும்மா இருக்கின்றாய். இவன் இப்படித்தான் பேசுவான். நீ யுன் காரியத்தைப்பாரேடா!

(சேவகனையுதைத்தல்.)

சேவகன்:—இதோ! உத்தரவுப்படி செய்கின்றேன், மகாராஜா!

(நயவசனரை அடித்துவிலங்கிடுதல்.)

நயவசனர்:—ஐயோ! அடியேன் ஒருபாவமும் அறியேனே!

சுசீலன்:—இதென்ன! நிஜந்தானோ? நான் இதுவரையிலும் விளையாட்டிற் காயிதுஞ் செய்கிறீர்களென்றன்றோ நினைத்தேன்! என்ன? இப்படி அவ்விடத்திலேயே விபரீதஞ்செய்ய ஆரம்பித்தல் சரியானதாகத் தோன்றவில்லையே!

சூரசேனவர்மன்:—ஓ! சுசீலரே! நாங்கள் இந்த விஷயங்களிலெல்லாந் தலையிடாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.—கொண்டு போ சிறைச் சாலைக்கு. அப்புறம் இதைக் குறித்து விசாரித்துக் கொள்வோம்.

சுசீலன்:—(தனக்குள்) அரசனுக்குப் பெண்ணைக் காணாமையாற் பைத்தியம் பிடித்துவிட்டது போலத்தான் தோன்றுகின்றது. இப்பொழுதே யிப்படியிருந்தால் அப்புறம் சேவகர்கள் வந்து காணோமென்று

சொல்லிவிட்டால் அப்போது அரசனுடைய குணம் எப்படியிருக்குமோ? சகனே! இதுவுமுன் லீலாவிசேஷமோ?

சூரசேனவர்மன்:—சீக்கிரங் கொண்டுபோ. தாமதஞ் செய்யாதே!

(நயவசனரைச்சேவகன்சிறைக்குக்கொண்டுபோதல்.)

கேட்டீரா? சுசீலரே! உமக்கொன்றுந் தெரியாதே இந்தப் பயலுடைய வஞ்சகங்களெல்லாம்! தினந்தோறும் தன்னுடைய வீட்டில் இரண்டு மூன்று கனவான்களோடு தானுமிருந்துகொண்டு நம்மைக் கொலைசெய்வதற்கு யுக்திகளெல்லாம் யோசிக்கின்றானாம். இரண்டு மூன்றுநாளாய்க் கேள்விப்பட்டோம். அது இன்று காலமேதான் ஸ்பஷ்டமாய்த் தெரிந்தது. அதுமுதல் இவன்வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இவனே யொருவேளை யென்மகளைத் தூக்கிக்கொண்டுபோய்க் கொலை செய்திருப்பான்!

சுசீலன்:—அப்படியிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை.

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா அவர்களுக்கு ஆயிரங்கோடி வந்தனம்.

சூரசேனவர்மன்:—என்ன? அவனைக் கொண்டுபோய்ச் சிறையிலடைத்து விட்டாயா?

சேவகன்:—ஆமாம். மகாராஜா! சிறைகாவற்காரரிடம் ஒப்புவித்துவிட்டு வந்தேன்.

சூரசேனவர்மன்:—சரிதான். போ.

சேவகன்:—மகாராஜா! தேடிக்கொண்டுவரப்போன சேவகர்கள் வந்திருக்கின்றார்கள். இது விஷயஞ் சமுகத்தில் தெரியப்படுத்தினேன்.

சூரசேனவர்மன்:—எல்லாரையு முன்னே வரச் சொல்லாமல் அவர்களில் முக்கியமானவனை மாத்திரம் வரச்சொல். போ.

(சேவகன்போதல்.)

சுசீலன்:—அவன் வரட்டும். இதோ கேட்போம்.

(சேவகர்தலைவன்வருதல்.)

சேவகர்தலைவன்:—மகாராசா அவர்களுக்கு அடியேன் அநேககோடிவந்தனம்.

சூரசேனவர்மன்:—என்ன! சொல்லு, சீக்கிரம்.

சேவகர்தலைவன்:—மகாராசா! நாங்கள் எட்டுப்பேர் தேடப் புறப்பட்டோம். ஆளுக்கொருவராய்ப் போனோம். நாங்கள் எல்லாரும் இப்பொழுதுதான் வந்து கூடினோம்.

சூரசேனவர்மன்:—என்னேடா! சொல்லு. போனகதி யென்றாயிற்று!

சேவகர்தலைவன்:—மகாராசா! நாங்கள் போய்த் தேடிப் பார்த்ததில் அகப்படவில்லை. விசாரித்த [illegible] தெரியாது தெரியாது என்கிறார்கள்.

சூரசேனவர்மன்—நன்றாய்த் தேடினீர்களா?

சேவகர்தலைவன்:—ஆமாம். நன்றாய்த் தேடினோம். மகாராசா!

சூரசேனவர்மன்:—சரி. நீ போ.— (சேவகர்தலைவன்போதல்.)

(தனக்குள்) இருக்கட்டும்; சந்தேகப்பட்டவர்களைப் பிடித்து அடித்துக் கேட்டால் உண்மை தானே வெளிப்படுகின்றது.—சுசீலரே! கேட்டீரா சமாசாரத்தை?

சுசீலன்:—ஆமாம், கேட்டேன்.—எல்லாவற்றிற்கும் நம்முடைய சோழராஜ்யத்திற்கும் ஆளையனுப்பி அங்கும் விசாரித்தாலென்ன!

சூரசேனவர்மன்:—அதுதான் அவனைக் காணோமென்ற சமாசாரங்கேட்டவுடன் அனுப்பியிருக்கின்றேனே!

சுசீலன்:—அதுதான் சரிதான்.

சூரசேனவர்மன்:—உள்ளே அந்தப்புரத்திலே இவர்கள் தேடப்போனது முதல் ஆவலாயிருக்கின்றார்கள்.—அவர்களுக்கு யாம் போய் மனவருத்தப்படாதிருக்கும்படி யாதுகள் சொல்லிவிட்டு வருகின்றோம்.

சுசீலன்:—அதற்குள் யானும் வீட்டிற்குப் போய்வருகின்றேன்.

சூரசேனவர்மன்:—சரி. (சூரசேனவர்மன்போதல்.)

சுசீலன்:—யான் இச்சூரசேனவர்மனிடத்தில் மந்திரியாயிருப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கவே கூடாது! சற்குணவழுதியினிடத்திலே மந்திரியாயிருந்த பிறகும் வேறொருவனிடம் மந்திரியாயிருப்பது தகியதன்று. ஆயினும் ஜனங்களினுடைய நன்மையினைக் கருதியும், இவன் இன்றுவந்து என்னை வேண்டிக்கொண்டமையினைக் கருதியுமே யான் இசைந்தது. அது அப்படியிருக்க, இவன் வந்து சின்னாள் வரை என் சொற்படியே கேட்டு நடந்துவந்தான். அப்பொழுது எல்லாருஞ் செவ்வையாய் நடந்து வந்தன. இப்பொழுதோ எதுவுந் தனக்குத் தோன்றியபடி செய்கின்றானே யன்றி ஒன்றிலும் என்னுடைய சொற்படிகேட்டு நடக்கின்றானில்லை. அநியாயங்களோ ஒன்றின்மேலொன்றாய் நடக்கின்றன! நம்முடைய வாகுதிமன் சுந்தரனைத் தானே கொன்றுவிட்டுச் சுவரேறிக்குதித்து ஓடுகையில் கீழ்ந்த சக்கரவர்த்தி கொலையுண்டானென்று பொய்க்காரியமும் பறையறைவித்தான். விசாரணையென்பது ஒன்றுமில்லாமல் தனக்கு யார்மீதேனும் அற்ப சந்தேகமிருக்குமாயின் அவர்களைக் கொன்று விடுகின்றான்! தன்மகன் காணாமற்போனால் அதற்கு

யாவரைப் பிணைப்பட்டார்? இவ்வருமனை செய்வனவெல்லாம் அநியாயமாயிருந்தமையால், யான் இவனுக்கு மந்திரியாயிருந்ததே பெருந்தவறு! ஆயினும் என் செய்வது? யான் எப்பொழுது ஒன்று செய்வதாக ஒத்துக் கொண்டேனோ அப்பொழுதே முதல் யான் அதனைச் செய்யக் கடமைப்பட்டவனாகின்றேன்! ஆகவே யான் எதிற்றவறினுங் கடமையில் தவறலாகாது. ஆதலின் இவ்வரசனுக்கு உறுதி பயப்பனவற்றையே செய்யப்புகுவேன்! (சுசீலன்போதல்.)

ஐந்தாங்களம்.

இடம்:—சோழனரண்மனை. காலம்—பிற்பகல்.

நடர்:—சுந்தரனுஞ் சுருபனும்.

சுந்தரன்:—என்னது சுருபத்தையலே! நாமும் இத்தந்தைமைபுரிந்து ஈச்சுரக்குறைய மூன்றுவாரமாய்விட்டன, என்னுடைய தாய் தந்தையரால் நாம் இன்று சென்று கண்டு கொள்ளவுங் கூடவில்லை. பார்த்தனையா?—

சுருபன்:—என்னது சுந்தரக்குரிசிலே! நாம் இவ்வாறு வந்ததனை ஏன் ஒளித்துக் கொண்டிருப்பது? அவர்கள் நம்மை [illegible] நாமே வெளிப்படுத்தல் நல்லதன்றோ?

சுந்தரன்:—என்னது மகிழ்நர் மடந்தையே! சற்றே பொறுத்துக்கொள். நாம் நம்மை வெளிப்படுத்திக்கொள்ளுங் காலம் இஃதன்று. எதுவுஞ் சமயம் அறிந்து செய்யவேண்டும்! மற்றைப்படி நீ சேரநாடு, பாண்டிநாடு, சோழநாடு ஆகிய இந்த மூன்று தமிழ் நாடுகளையும் ஒருவாறு பார்த்திருக்கின்றாயே! இம்மூன்று நாடுகளுக்குள்ளே எது மிகச் சிறந்தது? சொல்லு. கேட்போம்.

சுருபன்:—ஒவ்வொருநாடும் ஒவ்வொரு விஷயத்தில் உயர்வாய்த்தான் இருக்கின்றது. கல்வி செல்வங்களினால் அழகிய பாண்டிநாடும், நற்குணநற்செய்கைகளிற் சேரநாடும், வளமான நீர்வளங்களினும் தெய்வபக்தியினுஞ் சோழநாடும் சிறந்து விளங்குகின்றன.

(சற்குணவழுதியுஞ் சுந்தரியாரும் வருதல்.)

சுந்தரன்:—சமூகத்தில் அடியேன் சுந்தரன் நமஸ்காரம்.

சுருபன்:—அடியேன் சுருபனும் நமஸ்காரம்.

சற்குணவழுதி:—ஓ! சுந்தரரே! என்ன? ஏதாவது விசேஷமுண்டோ? ராஜா வீரேந்திரர் என்னசெய்து கொண்டிருக்கின்றார்?

சுந்தரன்:—அப்படியொன்றும் மிக விசேஷமில்லை. வீரேந்திரசோழ மகாராஜா அவர்கள் தங்களை யழைத்து வரும்படி சொன்னார். வேறொன்றுமில்லை. ஏதோ மதுராபுரிக்குத் தூதனுப்ப வேண்டுமாம்.

சற்குணவழுதி:—அதுதானே! வேறொன்றுமில்லையே?

சுந்தரியார்:—ஓ! பிராணேச்வரா! நேற்றைக்குச் சோமவாரம் என்று நாம் பஞ்சநத க்ஷேத்திரஞ் சென்று அவ்விடத்திற் கண்ட காட்சியை யென்னென்று சொல்வேன்?

சற்குணவழுதி:—எனது பிரியசுந்தரி! நம்முடைய ஆலாசிய க்ஷேத்திரத்துப் பிராமணர்களிற் பெரும்பாலார் ஸ்மார்த்தர்களே யொழியச் சைவர்க ளல்லர். அவர்கள் நம்முடைய சுந்தரேசரது ஆலயஞ் சென்று தரிசனஞ் செய்தபோதிலும் ஆணொள்ள சிவபெருமானோடு அபேதமாய்க் கலந்தருளிய நாயன்மார் அறுபத்து மூவரையும் வணங்குகின்றார்களில்லை. ஆனால் இவ்விடத்திலோ அந்தணரி லநேகர் சைவரேயாவார். இவர்கள் யாவரும் ஏகலிங்கசிவார்ச்சனஞ் செய்யும் மகாசாம்பவர்கள்! இத்தகைய பெரியோரைக் காணுதற்கு நாம் என்ன புண்ணியஞ் செய்தோமோ? பார்! ஈங்குள்ள வேதியர்கள் நாடோறும் நடராஜ சந்நிதியில், தாங்களுந் தங்கள் மாணாக்கர்களும் சிவபெருமான் நடித்துக்காட்டியருளிய அஷ்டோத்தரசத தாண்டவங்களையுஞ் செய்து வருகின்றார்கள்! இவர்களது சிவபக்தி யெல்லையை யின்னதென்று யாவரா லளக்கற்பாலதாம்? இவர்கள் செய்யும் பாவனைகளைக் காணிற் கல்லுங் கரைந்துருகுமன்றோ?

சுந்தரியார்:—ஆம். சந்தேகமேயில்லை. எங்கே! சுந்தரரே! கூடற்சொக்கலிங்கேசர்மீது நம்மூர் வித்தியாசாகரப்புலவர் செய்த பாட்டில் ஏதாவது உமக்குத் தெரிந்தால் சொல்லும். கேட்போம். நீரும் அவரிடம் கல்விகற்றுக்கொண்டதாகச் சொன்னீரே!

சுந்தரன்:—ஆகுக அப்படியே. இதோ சொல்லுகின்றேன். கேளுங்கள்.

(சுந்தரன் பாடுதல்.)

இராகம் - மோகனம். தாளம் - ஆதி.

பல்லவி.

அரனருள் நாடி யாவோய் பாடி.

அநுபல்லவி.

அருமையா யிலகுமெய்த மறிவேசனீ யன்புடனே. (அரனருள்)

சரணங்கள்.

கூடலம் பதியுட் கோமள மதியைச்
சூடிய சொக்கலிங்க சுந்தர மூர்த்தியெங்கள். (அரனருள்)
மலயரி பாகம் வந்தது யோகம்
நலமுறச் செய்திடுவாய் நற்சொல்நீ கேட்டிடுவாய். (அரனருள்)
சத்யகிரிச் சாரல் சாரலோர்ச் சேரி
வித்தியா சாகரர்க்கு வித்தக சற்குருவாம். (அரனருள்)

சற்குணவழுதி:—வித்தியா சாகரர்வாக்கே வாக்கு! ஆகா! எவ்வளவு நன்றாயிருக்கின்றது!

சுநபன்:—இதேபாட்டை யான் பலமுறை தங்கள் குமாரன் சுந்தரானந்தனிடம் கேட்டிருக்கின்றேன்.

சுந்தரியார்:—ஓ! சுந்தரானந்தா! எனது அருமைமகனே! உன்னை மறுபடியுங் காணக் கிடைக்குமோ?

சற்குணவழுதி:—சரி. அது அப்படியிருக்கட்டும். நம் சுந்தரானந்தனுடைய குரலும் இந்தச் சுந்தரருடைய குரலும் ஏறக்குறைய ஒரேமாதிரியாயிருக்கின்றன! கவனித்தாயா?

சுந்தரன்:—ராஜா வீரேந்திரர் தங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பார்!

சற்குணவழுதி:—ஆமாமாம். வெகுநேரமாய்விட்டது. யான் அவரிடம் போய்ப் பேசிவிட்டுச் சீக்கிரமாய் வந்துவிடுகின்றேன்.

சுந்தரியார்:—ஆனால் நானும் அந்தப்புரத்திற்குப் போகின்றேன்.

சற்குணவழுதி:—சரி. (சற்குணவழுதியுஞ் சுந்தரியாரும்போதல்.)

சுநபன்:—எனது இன்பமே! இறைவனே! நீயுன்பகற்பொழுதையெல்லாஞ் சோழன் அவைக்களத்தே கழிக்கின்றாயேயன்றி ஈண்டு யானிருக்கும் விடுதிக்கு விசேடமாய் வருகின்றாயல்லை!

சுந்தரன்:—என் அன்பே! அமுதே! ஆருயிரே! நீ யென்மீது கோபிக்கப்படாது. ஏனென்றால், ராஜசபைக்கு நீயோ விசேடமாய்ப்போகின்றதில்லை. யானும் போகாதிருப்பேனாயின் நம்மை இன்னார் என்று அவர்கள் கண்டுகொள்ளக் கூடும். அதுபற்றி யன்றே யான் அவ்விடத்தில் அதிகமாய் உலாவுவது!

(முத்தமிடல்.)

சுநபன்:—எனது சுந்தரத்தோன்றலே! நீயுரைத்தது சரிதான். மற்றைப்படி நேற்று நாமிருவரும் நின்பெற்றோர்களோடு திருவையாற்றிற்குச் சென்றபோழ்து அங்கே வந்திருந்த ஒருபரத்தையினை நீ சற்றேயுற்று நோக்கினாய்! அப்பொழுதே நின்மனம் அவள்பாற்சென்றதென்றறிந்து கொண்டேன்!

(தன்மேலிருந்ததலைவன்கையைத்தள்ளுதல்.)

சுந்தரன்:—என் கண்ணே காதற்கிழத்தி! ரூபாவதி!

சுநபன்:—ஆமாம். சரிதான். அவள்தான் நினக்கேற்ற காதற்குமரி! யான் கிழத்திதான்!

சுந்தரன்:—என்காதற்கொடியே! நீ அப்படி நினையாதே!—

சுநபன்:—சரி. நின்கருத்து இன்னதென்று வெளிப்பட்டது! ஆமாம் நான் கொடியேன்தான்! அவள் நல்லள்தான்!

சுந்தரன்:—என் காதற்கிளியே! நீ யென்றோ இத்தனைநாட்பழகியிருந்தும் இவ்வாறு கூறுதல் நினக்கு ஏற்குமோ?—

சுநபன்:—ஏன்? அங்ஙனங் கூறுதல் உண்மையா யிருந்தால் ஏற்காமலென்ன? பார்! உன்மனத்தில் நிகழ்வதை நீ சொல்லுஞ் சொற்களே வெளிப்படுத்துகின்றன! 'என்காதற்கிளியே' என்கிறாயே! யான் உன்காதற்கு இலிக்கின்றேன் என்பது பற்றியோ நீ யவ்வாறு கூறினை?

சுந்தரன்:—என் அற்புதத்தலைவியே! நீ இன்னும் இங்ஙனங் கூறுவையேல் ஆற்றேன்!—

(முத்தமிடச்சுருபன் தடுத்தல்.)

சுநபன்:—இதுகாறும் நீ யென்னைக் 'காதற்கிழத்தி' 'காதற்கொடியே' 'காதற்கிளியே' என்று நீ காதல்கொண்டவனாக வாயினும் அழைத்தனை! இப்பொழுது உனக்கு என்மீதுள்ள அன்பு இரிந்து விகாரப்பட்டதோ? என்னை 'அற்புதத்தலைவி' என்றனையே!

சுந்தரன்:—"குற்ற மேதெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வரால்"

என்றதுபோல, யான் எது சொன்னாலும் அதற்கெல்லாம் விபரீதப்பொருள் படுத்துகின்றனையே! என்னுயிர்த்துணைவி! நீயே என்னைத் தள்ளுவையேல் எனது முறைப்பாட்டினை இனி யார்பாலுரைப்பேன்? எங்ஙனம் ஆற்றுவேன்? எனதாருயிர்த்தலைவியே! என் மீது கருணைபுரிவாய்! (வணங்குதல்.)

சுநபன்:—எனது ஆனந்தமுகிலே! "ஊடுதல் காமத்திற்கின்பம்" என்று திருவள்ளுவநாயனார் கூறுவதாகச் சொன்னாயன்றோ? அதுபற்றியே யான் ஊடினேன்!

சுந்தரன்:—எனையாளு மிறைவியே! "அதற்கின்பங் கூடி முயங்கப்பெறின்" என்ற பிற்பகுதியினை மறந்துவிட்டாயே!

சுநபன்:—யான் மறக்கவில்லை! மறக்கவில்லை! என் உள்ளங் கொள்ளை கொள்ளுங் கள்ளனே!

(இருவருந்தழுவிமுத்தமிடல்.)

சுந்தரன்:—சரி. அது கிடக்கட்டும். எனது அழகிய மயிலே! நீ யென்னை நோக்கி யாதின்பொருட்டன்றோ யென்னை 'ஆனந்த முகிலே' என்று அழைத்தனை?

சுநபன்:—எனது ரசிக சுந்தரனே! எனது பாக்கியமன்றோ உன்னை யான் தலைவனாயடையப் பெற்றது?

நாம் இப்படியே பேசிக்கொண்டிருப்பது சரியன்றே! என்னை ராஜா வீரேந்திரசோழர் தேடுகிறாரே!

சுநபன்:—அப்படியானால் நாம் போவோம். (எல்லாரும்போதல்.)

ஆறுங்களம்.

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்:—காலை.

நடர்:—சூரசேனவர்மனும் சுசீலனும்.

சூரசேனவர்மன்:—எது எப்படியிருந்தாலுஞ் சரி. "இந்நயவசனைப்பயலைச் சிறைச்சாலையிலிருந்து விட்டுவிடவேண்டும்" என்கிற பேச்சைமாத்திரம் எடுக்காதேயும். அவன் இதுவரைக்குஞ் செய்துகொண்டுவந்திருக்கிற சமாசாரமெல்லாம் மகாராஜத்துரோகமேயாம் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

சுசீலன்:—மகாராஜா அவர்களிடத்திலிருக்கும் ஒற்றன் முன்பு நயவசனிடமிருந்தவன். அவர் அவனைத் துர்நடக்கையுள்ளவனென்று வேலையினின்றுந் தள்ளிவிட்டார். அதுபற்றி யவர்பேரில் அவனுக்குக் கொஞ்சம் வைமனஸ்யமுண்டு. ஆகையால் தாங்கள் அவன் சொல்லியதை நிஜமென்று நம்பி யிவ்வாறு செய்தது உசிதமெனத் தோன்றவில்லை.

சூரசேனவர்மன்:—உசிதமோ உசிதமில்லையோ? அந்நயவசனன்பேரில் எமக்கு வெகுநாளாய்ச் சந்தேகமுண்டு. அவன் பேசும்போதெல்லாம் மனத்திலொன்றும் வெளியிலொன்றுமாய்ப் பேசுவான். இது இப்படியிருக்கட்டும். பாரும் சுசீலரே! இப்போது உமக்காகத்தான் சும்மா இருக்கின்றோம். இல்லாவிட்டால் ஊர்முழுவதும் அப்பொழுதே தொம்ஸம் பண்ணிவிடுவோம். நீர் ஒருமாதம் பார்க்கலாமென்று கேட்டுக்கொண்ட தவணைக்கு இன்னும் ஆறுநாள்தாமேயிருக்கின்றன. பார்த்துக்கொள்வோம். அதற்குள்ளே யென்மகள் ரூபாவதியைப் பற்றி யொன்றும் தெரியாதிருக்குமாயின் அப்புறம் எமதிஷ்டப்படி தான் செய்வோம். நீர் அப்பொழுது ஒன்றுஞ் சொல்லக்கூடாது. யடா! சேவகா, என்னசெய்தி? (சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா! நம்முடைய அரண்மனை வாசலிற் சோழநாட்டிலிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கின்றான்.—அவன்பெயர் என்னவோ [illegible].

சூரசேனவர்மன்:—தூதேன்? சுசீலரே!—இருக்கட்டும். சேவகா! நீபோய் அவனை வரச்சொல். (சேவகன்போதல்.)

சுசீலரே! பார்த்தீரா? எல்லாம் நினைத்தபடியே முடிகின்றன. சோ

ழன் வீரேந்திரன் படையெடுத்துவருவான் என்று நாம் எண்ணின தற்கேற்ப ஒருதூதனும் வந்திருக்கின்றான்!

சுசீலன்:—எல்லாவற்றிற்கும் அதுவன் சொல்லப் போகின்றதையுங் கேட்போம். சற்றே பொறுங்கள். (தந்திரதீரன்வருதல்.)

தந்திரதீரன்:— வாழ்க! வாழ்க! சேர மன்னவ!
கடல்புடை சூழ்ந்த காசினி யதனு
ளெந்நாட் டினுமிக வென்று டெனப்பெறூஉஞ்
சோணாட் டிறைவன் றூய குணத்தினன்
பூணூர் மேனியன் புண்ணியச் செல்வ
னரசர்க் கரச னளவிலா வெற்றிபெற்
றரைசெயற் கரிய வுயர்வா கையினன்
பாரேந் துறூஉம் பார்த்தன் வேந்தன்
சிரேந்து கல்விச் சிறப்பு நிலைந்தவன்
வீரேந் திரனெனும் மேதக வுடையோன்
விடுத்த தூதன்யா னேவன்.—

சூரசேனவர்மன்:—அடுத்துநீ வந்த வநுவ லென்ன?

தந்திரதீரன்:—பன்னருஞ் சற்குண பாண்டிய னட்டை
யின்றுப் போர்செய் திறைவனைக் காட்டிற்
றுரத்திவிட்டுத் தோழுறக் கவர்ந்தனை
யதனு லெங்கோன் கதமது விஞ்சிப்
பாண்டியற் காக வீண்டுப் படைகொடு
வருவான். நாட்டினை விடுவா யாயின்
மருமலர்த் தாரினோன் மன்னித்தல் கூடும்.

சூரசேனவர்மன்:—இல்லா விட்டால்?

தந்திரதீரன்:— பொல்லாப் போருறும்.

சூரசேனவர்மன்:—அவ்வளவு தானே! அன்றிவே றுண்டோ!

தந்திரதீரன்:—ஆம். அவ் வளவுதான். ஆயினும் போரில்
வெல்லுநர் யாரோ வெந்நு காட்டிச்
செல்லுநர் யாரோ? தெரிந்திலை யரசனே!

சூரசேனவர்மன்:—சரிதான். தந்திர தீர நீசென்
றுரையாய் சேரர்கு லோத்தமன் போர்க்குச்
சன்னத்த மாகவே தானுளா னென்றே.

தந்திரதீரன்:—தந்திர தீரன் றந்தேன் வந்தனம்.
(தந்திரதீரன்போதல்.)

சூரசேனவர்மன்:—கேட்டீரோ சுசீலரே! முற்றிலும்? ஆதிமுதற்கொண்டு நாம் சொல்லவில்லையா?—சரி. நாம் இனிமேல் ஒருகிமிஷமேனும் தாமதஞ் செய்தல்கூடாது. ஏ! சேவகா!

(சேவகனுவருதல்.)

சேவகன்:—மகாராஜா!

சூரசேனவர்மன்:—நீ சென்று நம்முடையசேனைத்தலைவனிடம் "சோழன் நாம் அடித்துத் துரத்திய பாண்டியனுக்காகப் படையெடுத்து வந்தி மாலைக்குள் வருகின்றானாம்; ஆதலிற் போர்வீரரோடு இன்றுமுதல் ஏந்த நிமிஷத்திலும் ஆயத்தமாயிருக்கவேண்டும்" என்று மகாராஜா அவர்கள் உத்தரவுகொடுத்தாரென்று சொல்லிவிட்டுவா.
(சேவகன்போதல்.)

ஏ! சேவகா!

சேவகன்:—மகாராஜா!

சூரசேனவர்மன்:—நம்முடைய சேரநாட்டிற்கும் இத்தகைமையே ஓராளனுப்பி அங்குள்ள போர்வீரரையுங் கூடியசீக்கிரத்தில் வாவழைக்கும்படியும் நாம் உத்தரவு செய்ததாகச் சேனைத் தலைவனிடத்திற் சொல்லுக.
(சேவகன்போதல்.)

சேவகன்:—ஆக்ஞை!

சுசீலன்:—நம்முடைய கருவூரிலிருந்து போர்வீரர் வந்து சேருவதற்கு எத்தனைநாட் செல்லுமோ!

சூரசேனவர்மன்:—இந்தத் தந்திரதீரன்போய்ச் சோழனிடம் தெரிவித்து அதன்பிறகு அவன் தன்னுடைய சேனைத்தலைவனுக்கு உத்தரவு செய்து அதன்மேல் அவன் போர்வீரரை யாயத்தப்படுத்திப் படையெடுத்து வருவதற்குள் இவர்கள் வராமற் போகிறார்களா! மேலும் நந்நகைக்குக் கருவூர்சமீபமன்றோ!

சுசீலன்:—ஆம். சமீபந்தான். ஆனாலும் ஒருவேளை நம்முடைய கருவூர்ப் போர்வீரர் வருகிறதற்குமுன் சோழன் படையோடு வந்துவிட்டாலென்னசெய்கிறது? அதையும் நாம் யோசிக்கவேண்டும்.

சூரசேனவர்மன்:—நீர் சொல்லுவது சரிதான். ஆனால் இவர்கள் வருகிறதற்குமுன் அவன் வரக்கூடுமோ?

சுசீலன்:—ஏன் வரக்கூடாது? என்னவோ? யார்கண்டார்கள்? எல்லாவற்றிற்கும் நம்முடைய வெளிநாட்டொற்றர்களை விசாரித்தீர்களோ?

சூரசேனவர்மன்:—இதோ விசாரிப்போம்.

சுசீலன்:—சகலத்திற்கும் நான் இருக்கத்திற்குப்போய் வெகுசீக்கிரத்தில் திரும்பிவிடுகிறேன். அதற்குள் தாங்களும் ஒற்றர்களை யழைத்து விசாரியுங்கள்.

சூரசேனவர்மன்:—ஆம். அப்படியே செய்வோம். (எல்லோரும்போதல்.)

ஏழாங்களம்.

இடம்:—சோழனரண்மனை. காலம்—பிற்பகல்.

நடர்:—விரேந்திரசோழனும், சற்குணவழுதியும்.

விரேந்திரசோழன்:—ஓ! சற்குணவழுதியாரே! கேட்டீர்களோ ஒரு சமாசாரம்?

சற்குணவழுதி:—என்ன? தெரியாதே!

விரேந்திரசோழன்:—உங்களுடைய குமாரன் சுந்தரானந்தனைச் சூரசேனவர்மன் கொன்றுவிட்டபிறகு அவனுடைய மகனை ஏதோ பூதமோ பேயோ அடித்துக்கொண்டு போய்விட்டதாம்.—

சற்குணவழுதி:—இப்பொழுது சூரசேனவர்மன் மகனைப் பூதங்கொண்டு போனாலென்ன? பேய்கொண்டு போனாலென்ன? நம்முடையகுமாரன் சுந்தரானந்தன் போனபிறகு நமக்கு இராஜ்யாதிகாரமும் வேண்டுமோ?

விரேந்திரசோழன்:—இல்லை, இல்லை. தாங்கள் அப்படிச் சொல்லவே கூடாது. அந்தப்பயல் சூரசேனவர்மன் செய்த அநியாயங்களுக்கெல்லாம் நம்முடைய பஞ்சாங்கசமே தண்டிக்கின்றார்! பாருங்கள்! தெய்வத்திற்குக் கூட அவனுடைய கொடுமை பொறுக்கமுடியவில்லை! ஆகையினாலேதான் சூரசேனவர்மன் தன்பெண்ணை யிழந்தான்!

சற்குணவழுதி:—நாம் அவன்மீது படையெடுத்துச் செல்லப்போகின்றோமென்பதை யுணர்ந்திருப்பதோடு அவன் எனதுமகன் சுந்தரானந்தனைக் கொன்றதற்கு வேறுகாரணமுமுண்டோ? இதற்குமுன்பு சோழநாட்டிலேயே பிறந்து வளர்ந்த சூரசேனவர்மனுக்கு வேண்டியவனாயிருந்து இப்போது இவ்விடத்திலிருந்து அடைக்கலம் புகுந்திருக்கின்ற சுருபன் என்பவனைக் கேட்டால் தெரியும்.

விரேந்திரசோழன்:—என்னவோ? நாம் நம்முடைய ஒற்றர்கள் சொல்லியதைக்கேட்டதில் உம்முடைய புத்திரன் சுந்தரானந்தன் ஒருநாளிராத்திரிச் சிறைச்சாலையினின்றும் மதில்மேலேறிக் குதித்து ஓடினதாகவும், உடனே காவலாளர் துயிலொழிந்து கூட ஓடிப் பிடித்ததாகவும், அப்போது உமது மகனுக்கும் அவர்களுக்கும் நேர்ந்த சச்சரவில், சுந்தரானந்தன் கொல்லப்பட்டதாகவும் சூரசேனவர்மன் நகர் முழுதும் பறைபறைந்து சாற்றினானென்று தெரியவருகின்றது. இனிச் சனங்களிதை நம்பவில்லையாம்.

சற்குணவழுதி:—சுந்தரானந்தனைப்பற்றித் தெரிந்தவர்கள் சூரசேனவர்மன் சொல்லுங் கதைகளெல்லாம் பொய்யென்று விடுவார்களே யொழிய ஒருவரும் நிசமென்று நம்பமாட்டார்கள்.

(சுந்தரன் வருதல்.)

சுந்தரன்:—உபயமகாராஜா அவர்களுக்கும் அடியேன் சுந்தரன் வந்தனம்.

விரேந்திரசோழன்:—ஏ! சுந்தரரே! ஏதாவது விசேஷமுண்டோ?

சுந்தரன்:—நம்முடைய பாண்டிநாட்டிற்குச் சாருசென்ற தந்திரதீரனைத் திரும்பி வரும்போது சூரசேனவர்மனுடைய ஆட்கள் அடித்து மிகவுந் துன்பப்படுத்தி விட்டார்களாம். இது சங்கதி ஒருசேவகன் முன்னே சீக்கிரமாயோடிவந்து தந்திரதீரர் சொல்லச் சொன்னதாகக் கூறினான். தந்திரதீரர் பின்னே வருகின்றாராம்.

விரேந்திரசோழன்:—ஏமது தந்திரதீரரையா சூரசேனப்பதர் அவ்விட்டடித்தது? கேட்டீர்களோ சற்குணவழுதியாரே! இத்தக்கயவன் எமது தூதனை யடிக்கும் நிலைமைக்கும் பொறுப்பேமா? இதோ இந்த நிமிஷத்திலேயே பேர்வீரரைப் படையெடுப்பித்து ஆயத்தப்படுத்தும்படி சேனைத்தலைவனுக்குச் சொல்லியனுப்புகின்றேம்.

சற்குணவழுதி:—எல்லாவற்றிற்குஞ் சாருசென்ற தந்திரதீரரும் வரட்டுமே! வந்தபிறகு தாதிற்குச் சூரசேனவர்மன் உத்தரமென்ன சொன்னானோ அதையுங்கேட்ட பிற்பாடு சேனைத்தலைவனுக்கு உத்தரவு கொடுக்கலாமே?

விரேந்திரசோழன்:—இவன் தூதனை யடித்த போதே இவனுடைய நீதியெல்லாம் வெட்டவெளிச்சமாய்விட்டதே! இந்தவஞ்சகன் நியாயமென்ற ஆரியவே அறியாதவன் போலிருக்கின்றதே! இவன் தூதிற்கு உத்தரமென்ன சொல்லியிருக்கப் போகின்றான்? இவன் என்னசொல்லி யனுப்பியிருந்தபோதிலும், எம்முடைய தந்திரதீரனை யடித்ததினால் படையெடுத்துச் சென்று அவனோடு போர் புரிந்தே தீருவேம்.

(தந்திரதீரன் வருதல்.)

சுந்தரன்:—அதோ! தந்திரதீரரும் வந்துவிட்டார்!

விரேந்திரசோழன்:—ஐய! தந்திரதீரரே! என்னசங்கதி? உம்மை ஆள் விட்டடித்த சூரசேனவர்மன் உயிரோடிருக்கிறமட்டும் சும்மா இருப்போமா?

தந்திரதீரன்:—அவன்றான் இவர்களை யேவினானோ அல்லது இவர்கள் இருட்டர்களேயோ? தெரியவில்லை. அடியேன் அடிபட்டது என்னவோ உண்மை!

சுந்தரன்:—உம்மையடித்த அந்தச் சேவகர்கள் பேச்சினின்றும் அவர்கள் சோழநாட்டாரோ அல்லது பாண்டிநாட்டாரோ என்று நிர்மானித்திருக்கலாமே?

தந்திரதீரன்:—அதென்னவோ அவர்கள்பேச்சை யான் நன்றாய்க் கவனித்திலேன்.

வீரேந்திரசோழன்:—சரி, இருக்கட்டும். அந்தப்பயல் சூரசேனவர்மன் தூதிற்கு என்ன உத்தரங் கொடுத்தான்?

தந்திரதீரன்:—சூரசேனவர்மன் தான் பாண்டிய நாட்டை விடுவதில்லை யென்றும், யுத்தத்திற்குச் சன்னத்த மென்றும் உத்தரஞ் சொல்லி விட்டான், அவ்வளவுதான். வேறொன்று மவன் சொல்லவில்லை.

சற்குணவழுதி:—ஐய! தந்திரதீரரே! நீவிர் சென்று தூதுரைத்தபோது சூரசேனவர்மனோடு கூட இருந்தவர் யாவர்?

தந்திரதீரன்:—யாரோ? மந்திரிபோலும்! நான் தூதுரைத்த போது அவர் ஒன்றும் பேசவில்லை.

சுந்தரன்:—யார்? சுசீலரோ?

சற்குணவழுதி:—ஆமாம், சுசீலர்தாம்.

வீரேந்திரசோழன்:—உங்களிடத்தில் மந்திரியா யிருந்தவர் தாமோ?

சற்குணவழுதி:—ஆமாம், அவர்தாம்.

வீரேந்திரசோழன்:—ஏ! சுந்தரரே! நீர்போய் எனது சேனைத் தலைவனிடம் போர்வீரரை யாயத்தப்படுத்திக்கொண்டு மதுரைமாநகரை நோக்கி வஞ்சிமாலைசூடி வஞ்சிவேந்தனோடு வஞ்சிப்போர் செய்வதற்கு இப்பொழுதே புறப்பட்டுச் செல்லவேண்டும் என்று சொல்லும். நீரும் கூடவே இருந்து சேனைத்தலைவர்க்குப் படைவகுப்பதில் உதவிசெய்யும். நீருமொரு அக்ஷௌஹிணிநாயகராயிருந்து சேனையை நடத்தும். சீக்கிரம், தாமதஞ் செய்யாதேயும்.

(சுந்தரன்போதல்.)

தந்திரதீரன்:—அடியேனும் விடைபெற்றுச் செல்லலாமோ?

வீரேந்திரசோழன்:—சரி, வேறே யாதாவது விசேஷமுண்டோ?

தந்திரதீரன்:—அப்படி வேறொன்று மில்லை.

வீரேந்திரசோழன்:—ஆனாற்சரி. போய்வாரும். (தந்திரதீரன்போதல்.) என்? சற்குணவழுதியாரே! நாமும் புறப்பட்டுப் போவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டாமோ?

சற்குணவழுதி:—ஆம், செய்யவேண்டும்.

வீரேந்திரசோழன்:—சரி, பின்னை நாம்போகலாம்.

(எல்லோரும்போதல்.)

நான்காம் அங்கம்

முற்றிற்று.

அங்கம்-V.

முதற்களம்.

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்—காலை.

நடர்:—சூரசேனவர்மனும் சுசீலனும்.

சூரசேனவர்மன்:—ஐய! சுசீலரே! சந்தேகமேன்? நாமனுப்பிய சேவகன் கருவூர் சென்று அவ்விடத்தில் நம்முடைய மந்திரி இராசோபாயரிடம் ஓலை கொடுத்துப் போர்க்கு வேண்டியனவெல்லாம் முடித்துக் கொண்டு போர்வீரரைச் சமரேசன் என்னும் நம்முடைய சேரசேனைத்தலைவன் அழைத்துக்கொண்டு மதுரை வரவேண்டுமென்று சொல்லி ஏற்படுத்திவிட்டு வருவதற்கையமில்லை.

சுசீலன்:—நம் சேவகனால் ஒருதடையுமில்லை. அவன்போய் மந்திரி இராஜோபாயரிடம் திருமுகங் கொடுத்துச் சமரேசன் தலைவனாகச் சேனை வந்து சேருவதற்குத் தடையில்லை. ஆனால் என்னுடைய கருத்தெல்லாம் காலதாமதமின்றி வந்து சேரவேண்டுமே யென்பதுதான்.

சூரசேனவர்மன்:—அதற்கும் ஐயமுண்டோ? இதோவந்துவிடும். பார்த்துக் கொண்டிரும்.

சுசீலன்:—வந்தால் நலந்தான். இதுநிற்க, சோழன் தூதுவன் தந்திரதீரனைத் திரும்பிப் போகும்போது நம் கருவூராட்கள் வழியில் அடித்துத் துன்பப்படுத்தி விட்டார்களாம். அவர்கள் அப்படிச்செய்தாரென்று கேட்டதுமுதல் என்மனம் வருத்தப்படுகின்றது. தூதுவனை யடித்தல் மகாபிழையென்று நீதிநூல்கள் முறையிடுகின்றன. அவ்வாறிருக்கவவர்கள் செய்தது சுத்த அநியாயமேயாம். ஆகையால் அதை விசாரித்துத் தண்டிக்க வேண்டுவது தங்களுடைய தலைக் கடமையாம்.

சூரசேனவர்மன்:—ஆம்! அப்படித்தான் நாமும் கேள்விப்பட்டு விசாரித்துக்கொண்டு வருகின்றோம். அடித்த பயல்கள் இன்னாரென்று இன்னுந் தெரியவில்லை; தெரிந்த பிற்பாடு அவர்களுக்குத் தக்கபடி தண்டனை விதிப்போம்.

சுசீலன்:—மேலும் தாங்கள் தாம் தந்திரதீரனை ஆட்கள் விட்டடித்ததாக ஊர் முழுவதும் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்கள் அவ்வெண்ணத்தை யொழிக்கும்படியாகத் தாங்கள் தூதர் தந்திரதீரரை யடித்த பயல்களைக் கண்டுபிடித்துக் காட்டிக் கொடுப்பவர்க்கு வெகுமதி கொடுக்கப்படும் என்று பறையறைவிக்கவேண்டும். இதுகேட்டுச் சனங்கள் தங்கள்மீதுள்ள தவறெண்ணத்தை நீக்கிவிடுவார்கள்.

சூரசேனவர்மன்:—அப்படியே செய்துவிடுவோம். அதற்கொன்றும்ஆக்ஷேபணையில்லை. மற்றைப்படி கருவூருக்கு நம்முடைய மந்திரி இராசோபாயரிடஞ் சென்ற சேவகன் என்ன இதுவரையிலும் வரக்காணோம்? ஏன்? சுசீலரே!

சுசீலன்:—என்னகாரணமோ? தெரியவில்லை.—சரி. இருக்கட்டும். அந்தச் சேவகன் போய் எத்தனை நாளாயின?

சூரசேனவர்மன்:—அவன் சோழன்தூதவன் வந்துபோன அன்றைக்கு, அதாவது ஞாயிற்றுக்கிழமை மாலை சென்றான்.

சுசீலன்:—ஞாயிற்றுக்கிழமை மாலை நல்ல ராகுகாலமாயிற்றே! அப்பொழுதா அனுப்பினீர்கள்?

சூரசேனவர்மன்:—ஆம் என்ன செய்கிறது? காலதாமஸஞ்செய்யக்கூடாதென்பதைப் பற்றி உடனே அப்பொழுதே அனுப்பினேம். அதற்கென்ன?

சுசீலன்:—அதிற்கொன்றுமில்லை. ஆயினும் பெரியோர்கள் கைகூடாதென்பதுபற்றி அக்காலங்களில் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்பார்கள். அதுதான். வேறொன்றுமில்லை.

சூரசேனவர்மன்:—சரிதான். அவன்போய் இன்றைக்கு ஐந்தாவதுநாளாயிற்றே! ஏன் இன்னும் வரவில்லை?

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் சேவகன் வந்தனம். நம்முடைய வையாளி வீதி ஆசாரவாசற் காப்போன் வந்து வெளியே நிற்கிறான்; இதுசெய்தி சமுகத்திற்கு அறிக்கையிட்டேன்.

சூரசேனவர்மன்:—ஏ! சேவகா! அவனை இப்பொழுதே இவ்விடம் வரச்சொல். (சேவகன்போதல்.)

ஏன்? சுசீலரே! ஒருநாளும் வாராத வையாளி வீதி ஆசாரவாசற் காப்போன் முருகத்தேவன் தன் காவற்றொழிலை விட்டு இன்று இவ்விடம் வந்திருப்பது ஏதாவது புதிய செய்தி சொல்லுதற்குப் போலும்! (முருகத்தேவன்வருதல்.)

முருகத்தேவன்:—அடியேன் முருகத்தேவன் மகாராசா அவர்கள் சமுகத்துக்கு வந்தனம்.

சூரசேனவர்மன்:—ஏ! முருகத்தேவா! என்னவிசேஷம்?

முருகத்தேவன்:—மகாராசா! இன்றைக்குக் கோழி கூவையிலே யொரு சமாசாரம் கேட்டபிறகு காவலைக்கூட விட்டுவிட்டு இங்கே சமுகத்திலே தெரியப்படுத்த வேண்டுமென்று ஓடிவந்தேன்.

சூரசேனவர்மன்:—அப்படியென்ன அவசரமான சமாசாரம்? எங்கே? சொல்லு. கேட்போம்.

முருகத்தேவன்:—மகாராசா! தஞ்சைநகரத்து வீரேந்திர சோழ ராசாவும் முன் திருப்பரங்குன்றத்திலே தங்களோடு நடந்த சண்டையில் தோற்றுப் போன சற்குணவழுதியும் படையெடுத்து வந்து இந்த வூருக்குப் பத்துநாழிகைவழித் தூரத்திலே தங்கியிருக்கிறார்களாம். இன்றைக்குப் பொழுது மறையும் வேளைக்குள்ளே இவ்விடம் வந்துவிடுவார்களாம், பலத்த சேனையோடு வந்திருக்கிறார்களாம். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பக்கத்தூர்க் குடியானவன் ஒருத்தன் மேல்மூச்சுக் கீழ்மூச்சு விட்டுக்கொண்டு வெகு அவசரமாய் ஓடிவந்து சொல்லிவிட்டுப் போனான். இதுகேட்டவுடனே என்கால்கள் அவ்விடத்திலே தரிக்காமையினாலே இவ்விடம் தங்களிடத்தில் சொல்லிவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

சுசீலன்:—சரிதான். முன்னொருகாலத்துக் காடுவெட்டியசோழமகாராஜாவந்து தங்கியிருந்த சோழன்வந்தான் என்னும் கிராமத்திற்குச் சமீபத்திலே இவர்கள் வந்து தங்கியிருக்கின்றார்கள் போலும்!

முருகத்தேவன்:—ஆமாம். அப்படித்தான் சொன்னான், மகாராசா!

சூரசேனவர்மன்:—ஹூம் (பெருமூச்செறிந்துகொண்டு) சரிதான். முருகத்தேவா! நீபோ. (முருகத்தேவன்போதல்.)

கேட்டீரோ சுசீலரே! சமாசாரத்தை? சகலமும் நமக்குக் கெடுதலாகவே நடந்துவருகின்றன! பார்த்தீரா! கருவூர்போன சேவகனோ இன்னும் வரவில்லை. பாண்டியனும் சோழனுமோ படையெடுத்து வந்துவிட்டார்கள்! இதற்கென்ன செய்யலாம்?

சுசீலன்:—கருவூருக்குப் போன சேவகனும் வருகிற சமயந்தான். பதறாதிருங்கள். வந்துவிடுவான். இது இருக்கட்டும். நம்முடைய சேனைகளெல்லாம் இப்போது ஆயத்தமாயிருக்கின்றனவே யல்லவோ?

சூரசேனவர்மன்:—ஆம். அது மூன்று நாளுக்கு முன்னேயே ஆயத்தமாயிருக்கின்றது. ஆயினும் அது கொண்டு நாம் யுத்தந்தொடங்குவது சரியன்று. அப்படியன்றிப் போர்செய்யத் தொடங்கினேமோ தோல்வி யடைவது நிச்சயம். முன் சற்குணவழுதியுடன் திருப்பரங்குன்றத்தருகே நாம் புரிந்த போரில் வெகுகஷ்டத்தின்மேலன்றோ நாம் வெற்றிபெற்றது? அதுவுங் கருவூர்ச்சேனையுஞ் சேர்ந்திருந்த போதன்றோ? அப்படியிருக்க நாம் கருவூரிலிருந்து சேனை வருமுன் யுத்தமாரம்பிப்பது யுக்தமன்று. அது இப்பொழுதே வருமாயின் இந்த க்ஷிணத்திலேயே போர்தொடங்குவோம். அதற்குத் தடையொன்றுமில்லை.

சுசீலன்:—போர் என்னவோ வந்துவிட்டது. நாம் இனிமேற்சும்மா இருக்கக் கூடாது. ஆகையால் நகர்முழுவதுஞ் சனங்களறியும்படி பறையறைய வுத்தரவு செய்யவேண்டும். எதிரிகளுக்கு நாம் பயந்தவர்க

ளாகக் காட்டிக்கொள்ளக் கூடாது. ஆகையாற் போர்முரசும் அரண்மனைவாயிலில் முழங்கட்டும். இதற்கிடையிற் கருவூர்ப்படை வருமாயின், பகைவர் எதிர்சென்று காஞ்சிமாலை சூடிப் போர் செய்வோம். அதல்லாமற் பகைஞர்கள் நமது கோட்டையை வளைந்துகொண்டு உழிஞைமாலைசூடிப் போர்செய்வார்களாயின் நாம் அதற்கேற்பக் கோட்டையைக் காத்துக்கொண்டு நொச்சிமாலை சூடிப் போர்செய்வோம். (சேவகன்வருதல்.)

சூரசேனவர்மன்:—சரி. எடா! சேவகா! என்ன சங்கதி?

சேவகன்:—மகாராஜா! நம்முடைய கருவூருக்குப் போயிருந்த சேவகன் வந்திருக்கிறான்.

சூரசேனவர்மன்:—போய் உடனே வரச்சொல். (சேவகன்போதல்.) சுசீலரே! கருவூர்ச் சேவகனும் வந்துவிட்டான்! கட்டாயமாய்நம்முடைய சேனை வந்திருக்கும்! இனிமேல் நாமொன்றிற்கும் பயப்படவேண்டியதேயில்லை! சோழன் வீரேந்திரன் சேனைபலத்தையும் சமர்க்களத்தில் ஒருவாறு அறிவோம்!

(கருவூர்சென்றசேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராசா! அடியேன் சேவகன் வந்தனம்.

சூரசேனவர்மன்:—எடா! என்ன சங்கதி? சீக்கிரமாய்ச் சொல்லு.

சுசீலன்:—(தனக்குள்) ஓகோ! சேவகன் முகக்குறியைப் பார்க்குங்கால் ஏதோதீங்கு நேரிட்டிருக்கும்போலத் தோன்றுகின்றதே! எல்லாவற்றிற்குங் கேட்போம்.

சேவகன்:—மகாராசா! கருவூர்ச் சமாசாரத்தை யென்னென்று சொல்லட்டும்?—

சூரசேனவர்மன்:—என்ன? என்ன? கருவூரிலென்ன?

சேவகன்:—மகாராசா! முன்னிருந்த சத்துருவழுதியின் மாமனாராகிய வீரமார்த்தாண்டத் தொண்டைராசர், தாங்கள் பாண்டிநாட்டைச் செயித்துக் கவர்ந்துகொண்டு வழுதியாரைக் காட்டில் துரத்திவிட்டீர்களென்பது கேள்விப்பட்டு நம்முடையசோநாட்டின்மீது படையெடுத்து வந்து இப்பொழுது யுத்தம் வெகு மும்முரமாய் அவ்விடத்தில் நடக்கிறது. ஆகையாற் சேனை யனுப்புவது அசாத்தியமென்று மந்திரியார் இராசோபாயர் சொல்லிவிடுத்தார். இன்னாருக்கு வெற்றியென்று இன்னுந் தெரியவில்லை. இருதிறத்தாரிலும் பலபேர் மாண்டார்களாம். எல்லாவற்றிற்கும் வெற்றி தோல்விகளைக் குறித்துச் சமாசாரம் நாளைக்கு வருமென்று சொன்னார்.

சூரசேனவர்மன்:—அவ்வளவு தானே! இன்னும் ஏதாவதுண்டோ?

சேவகன்:—அவ்வளவுதான். மகாராசா! வேறொன்றுமில்லை.

சூரசேனவர்மன்:—சரிதான். நீபோ. (சேவகன்போதல்.)

என்ன? சுசீலரே! நாம் இப்படியெல்லாம் வருமென்று கனவிலும் நினைக்கவில்லை. எமக்கு இம்மதுரைக்கு வந்தபிறகு நேரிட்ட மனவருத்தத்திற்கோ அளவில்லை! இவற்றையெல்லாம் பார்க்கும்போது, கடவுள் இல்லையென்றே சொல்லிவிடலாம்! பாரும்! நாம் மதுரை வந்தபிறகு நம் சொக்கேசருக்கு எவ்வளவோ அருச்சனைகளும் அபிஷேகங்களும் செய்து, கணக்கற்ற காணிகள் திருக்கோயில் உபயோகத்திற்கு அளித்திருக்கிறோம்! அப்படியிருந்தும் நம் சோமசுந்தர மூர்த்திக்கு எம்மீது கருணை பிறக்கவில்லை!

சுசீலன்:—(தனக்குள்) ஒருவனுக்கு அந்தரங்கத்திற் பக்தியில்லாவிட்டால் பகிரங்கத்தில் எவ்வளவு செய்த போதிலும் அவை யொருநாளும் பயன்படாவாம்! (அரசனைநோக்கி) என்னசெய்கிறது? மற்றைப்படி இப்போது யுத்தந் தொடங்குவமா? என்ன?

சூரசேனவர்மன்:—அதுதான் அப்பொழுதே சொன்னேமே!

சுசீலன்:—அப்போ தென்னவோ குறிப்பாய்க் கூறினீர்கள். தற்காலத்தில் இன்னது செய்வோமென்று தீர்மானமாய்ச் சொல்லுங்கள். பகைஞரோ வந்துவிட்டார்! நாம் இனிமேற் சும்மா இருப்பது சரியன்று.

சூரசேனவர்மன்:—என்ன? ஐயா! சுசீலரே! முந்திப் பாஞ்சிச் சண்டையில் நாமொருபக்கமும், சத்துருவழுதி யொருபக்கமுமாகப் போர் செய்தோம். இப்போதோ நாமொருபக்கமும், சத்துருவழுதி, வீரேந்திரன், வீரமார்த்தாண்டன் ஆகிய இம்மூவரும் ஒருபக்கமுமாயிருத்தலினாற் சமர்செய்வது சரியன்றெனத் தோன்றுகின்றது. அப்படியன்றிச் சமர் புரிந்தோமோ நாம் தொலைவுண்டு போவதற்குத் தடையொன்றுமில்லை!

சுசீலன்:—ஆகையால் இப்போது தங்களுக்கு அவர்களோடு சமாதானமாய்ப் போவதற்குச் சம்மதம் போலும்.

சூரசேனவர்மன்:—ஆம். பின்னை யென்ன செய்கிறது?

சுசீலன்:—அவையெல்லாம் சரிதான். அவர்கள் சமாதானத்திற்கு இணங்குகின்றார்களோ இல்லையோ? இவ்வளவுதூரம் படையெடுத்து வந்துவிட்டு யுத்தமில்லாமற் சும்மா போகிறதா என்ற ஆலோசனையினாலும், வழுதிமகன் சுந்தரானந்தன் கொல்லப்பட்டதற்காகப் பழிவாங்கு மெண்ணத்தினாலும், சமாதானத்திற்கு வரமாட்டோம் என்று சொல்லிவிட்டால் நாமென்ன செய்கிறது? இதையும் யோசிக்கவேண்டாமா? சமாதான மென்றாலும், அதுவுமுடனே யாகக் கூடியதா? என்ன? அதிலு மெத்தனையோ விஷயங்களெல்லாந்

கவனிக்கப்படவேண்டும். முன்னமே அது தன்வசத்தே போதென்றால், இருதிறத்தார்க்கும் நேராகப் போயிருக்கும். இப்போதோ அவர்கள் கை உயர்வும் நமது கை தாழ்வுமா யிருக்கின்றதே! மேலும் அப்படியே சமாதானஞ் செய்து கொள்வதற்கு அவர்களு மிணங்கினாலும், உடன்படிக்கையின் நிபந்தனைகள் நம்முடைய மனத்திற்குப் பொருந்தக் கூடியவை வாயு மிருக்கவேண்டுமே! அவ்வாறில்லையாயின் என்செய வல்லேம்?

சூரசேனவர்மன்:—ஓ! சுசீலரே! நீர் என்ன செய்வீரோ? அது எமக்குத் தெரியாது. எப்படியாவது எதிர்க்குறைய நம்மனத்திற்கேற்கும்படி உடன்படிக்கை செய்துவிட வேண்டியது தமது தலைக் கடன் பாடேயாம்.

சுசீலன்:—அப்படியாயின் இப்பொழுது எனக்கு உத்தரவு கொடுங்கள். போய் அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்கிறேன்.

சூரசேனவர்மன்:—கட்டாயமாய் உடன்படிக்கைதான் செய்யவேண்டும்.

சுசீலன்:—சரி, சரி. (தனக்குள்) எப்போதும் இந்தச் சூரசேனவர்மன் இப்படித்தான் கெஞ்சினால் மிஞ்சுகிறதும் மிஞ்சினாற் கெஞ்சுகிறதும் வழக்கம். இவனை நம்பினால் நாசமடைவதற்குச் சந்தேகமில்லை! நாம் ஒருவருக்குந் துரோகஞ் செய்யவேண்டாம்! சகலத்திற்குங் கடவுள் ஒருவரிருக்கின்றார்! (சுசீலன்போதல்.)

சூரசேனவர்மன்:—நாமும் அந்தப்புரத்திற்குப் போவோம்.

(சூரசேனவர்மன்போதல்.)

இரண்டாங் களம்.

இடம்:—இராசமகிஷியினந்தப்புரம். காலம்:—மாலை.

நடர்:—கோமளவல்லியுஞ் சேவிலியும்.

கோமளவல்லி:—நாம் கருவூரைவிட்டு மதுரை வந்தது முதல் நமக்குத் துன்பங்கள் ஒன்றின்மேலொன்றாய் வந்துகொண்டிருக்கின்றன! நம்முடைய ராஜாவோ இவ்வூராரிடங் கொடியவரெனப் பட்டம் பெற்றுக்கொண்டார். பிறகு நமக்கு நம்முடைய செல்வமகள் ரூபாவதியையிழக்குந் துர்ப்பாக்கியஞ் சம்பவித்தது! போதாக் குறைக்கு யுத்தமும் வந்திருக்கிறது! இது எப்படி முடியுமோ? தெரியவில்லை.—தெய்வமே! எங்களை இப்படித் துன்பத்திற்கு ஆளாக்குவது சரியோ?

சேவிலி:—அம்மையே! கோமளவல்லி! கொஞ்சமிருங்கள். ஏதோ தாரை பேரியுங் காளத்தினோசையுங் கேட்கின்றனவே! எதிரிகளினுடைய சேனைகளெல்லாம் வையையாற்றின் வடகரையிலே வந்து தங்கி யிருக்கின்றனவோ!

கோமளவல்லி:—ஐயோ! என்னசெய்வோம்? தெய்வமே! எங்கள்மீது உனக்கு இரக்க மில்லையோ?

சேவிலி:—தாயே! நாம் இப்படிப் புலம்புவது நியாயமில்லை. மேலும் தாங்கள் அரசன்மனைவியா யிருந்துகொண்டு இந்தமாதிரி பயப்படக் கூடாது! எல்லாவற்றிற்கும் சுவாமி யொருவர் இருக்கின்றார்! சரி, இதிப்படியிருக்கட்டும். இன்னொரு சங்கதி சொல்லுகின்றேன். கேளுங்கள். நான் நேற்றிராத்திரி யொருகனவு கண்டேன். எப்போதும் நம்முடைய ரூபாவதியின் ஞாபகமாயிருக்கிறதினாலேதானோ என்னவோ? தெரியவில்லை. அவள் என்னிடம்வந்து, "நீ ஏன் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? உன் வருத்தத்தையெல்லா மொழித்துவிடு. நான் நாளைக்குத் திரும்பி வந்துவிடுகின்றேன்". என்று சொல்லிவிட்டுப் போனாள்! உடனே விழித்துக்கொண்டேன். என்மனமும் ஏதோ கொஞ்சம் ஆறுதலடைந்திருந்தது!

கோமளவல்லி:—ஐயோ! நீசெய்த பாக்கியம் நான் செய்யவில்லையே! உன்கனவில் வந்து பேசுகிறவள் பெற்றவளாகிய என்னிடம் ஒரு நாளாவது கனவிலேனும் வந்தாளில்லையே! நான் என்ன பாவஞ் செய்தேனோ? அவள் என்னைக்கனவிலுங் காணமாட்டேன் என்கின்றாள்! (சூரசேனவர்மன்வருதல்.)

சேவிலி:—அதோ! மகாராஜாஅவர்கள் வருகிறார். நாமொன்றும் இப்பொழுது பேசப்படாது. தாயே! நான்போகின்றேன்.

(சேவிலிபோதல்.)

சூரசேனவர்மன்:—ஏ! பிராணவல்லி! பகைவருடைய சேனையோ வந்துவிட்டது! நாம் இன்றைக்காலை சுசீலரோடு சொல்லி யுத்தமொன்றுமில்லாமற் சமாதானமாய்ப் போவதற்குத் தக்க ஏற்பாடுகள் என்னவோ அவற்றைச் செய்யும்படி திட்டம் பண்ணியிருக்கின்றோம்!

கோமளவல்லி:—ஏ! பிராணவர்மா! எல்லாஞ் சரிதான். ஆயினும் நாமே வலியப் போய்ச் சமாதானம் பேசுவதென்றால் அது சத்துருவீரர்க்கு அழகாகுமோ?

சூரசேனவர்மன்:—அரசர்க்குரிய நால்வித உபாயங்களில் இது முதலாவதாகிய சாமோபாயமன்றோ?

கோமளவல்லி:—அப்படி யானாற் சரிதான். அஸ்தமித்துப் போயிற்று. ஆகையினாலே நான்போய் நம்முடைய அரண்மனைக் குலதேவதையை வேண்டிக்கொண்டு வந்துவிடுகின்றேன். சற்றேயிருங்கள்.

(கோமளவல்லிபோதல்.)

சூரசேனவர்மன்:—இவ்வளவு இடையூறுகளையும் நாம் அனுபவிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதானோ நம்மைக் கடவுள் பாண்டி-

நாட்டின் மீது படையெடுத்து வழுதியை வென்று மாறு தூண்டினோர்? குடிகளிடங் கொடியரெனும் பெயர்பெற்றோம்! ஓ! அதுமட்டோ? குடிகளு மெம்மைக் கொல்லத் தலைப்படுகின்றார்கள்! இந்த நாட்டார் யாவர்க்கும் நாம் அரசாள்வதில் விருப்பமில்லை போலும்! இந்நாட்டின் எவ்விடந்திரும்பினும் எமக்குப் பகைவர்கள் காணப்படுகின்றார்களேயொழிய நண்பர் ஒருவரையாவது காணேம்! இவ்வாறு நம்மேற் பிரியமில்லாக் குடிகள் வாழும் நாட்டைப் படைகொண்டு அடக்கி ஆள்வதிற் பயன்றான் என்னையோ?—(மௌனம்.) பரம்பரையாயுள்ள சோநாட்டையும் இழந்துவிடுவேமோ? போரினுற் பெற்ற பாண்டிநாட்டை இழத்தல் இன்னணமேயாம். அந்தோ! என்ன என்ன மென்றுழல்கின்றேம்!—(மௌனம்.) ஏ! வர்மா! இத்தனை துன்பங்களையும் அநுபவித்துக்கொண்டாவது நீ உயிர் வாழ வேண்டுமென்றோ? உன்னை நேசிப்பார் ஒருவரும் இல்லையே! உனக்கு அரசாட்சியும் வேண்டுமோ?—(மௌனம்.) இதற்குமுன் எமது அருமைமகள் ரூபாவதியை இழந்துவிட்டோம்! ஓ! ரூபாவதி! உன்னையிழந்துமிருக்கும் நாம் அரசபுரிய இச்சிப்பது என்ன அறிவின்மைகாண்! அது கள்ளிக்கொம்புக்கு வெள்ளிப் பூண் கட்டத் துணிந்ததுபோலாகுமன்றோ? எமக்கோ உன்னைத் தவிர்த்து வேறு சந்ததிகளில்லை. நீ காணாமற் போனது முதல் எமக்கு ஒன்றுந் தோன்றவில்லை! ஐயோ! இவ்வூர்ப் பேய்ச்சனங்களுக்கு உன்னைப்பலிகொடுத்த கொடும்பாதகர்யாரும் வாழவேண்டுமோ!—(மௌனம்.) எமது பாதகச் செயல்களோ கணக்கற்றன! நன்னடக்கையே வடிவெடுத்து வந்தாற் போன்ற சுந்தரவழுதியையும், அழகு நிறைந்த அவனுடைய மனைவியையும் சிறையிலிட்டுக் காட்டிற்றுரத்தினேம்! சிவபிரான் அவர்களை அவ்விடத்தும் கருணைபுரிந்து காத்தருளினார்!—இன்னும் வழுதிமகன் சுந்தரானந்தனை, ஒருபாவமு மறியாதவனை, சாந்தமே யுருவமாயிருந்தவனைச் சிறைச்சாலையிற் போட்டு வருத்திக் கொன்றுவிட்டோம்! ஓ! கொலைபாதகச் சூரசேனா! நீ யுயிர்துறந்து விண்ணுடி புகுந்து ஆங்குள்ள சுந்தரானந்தனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுதலே தகுதி!—(மௌனம்.) ஐயோ! தெய்வமே! மகளையிழந்து, உளவையொழிந்து, மானமழிந்து, கொலைகள்புரிந்து, வீரமிழந்து, பகைவர்கள் பாதத்தில் விழுந்து, அவரோடு சமாதானமாய் மனமொவ்வாத நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கை செய்துகொண்டு உயிர்வாழ்ந்திருத்தலைக் காட்டிலும், தற்கொலைசெய்து கோடல் நல்லதன்றோ?-(மௌனம்.) நாம் செய்த கொடுஞ்செயல்களுக்குப் பிராணனை விடுவதே மேலானது! இனியொருக்ஷணமேனும் தாமதியேம். இதோ இந்த வாளின் மீது பாய்ந்து உயிர்விடுவேம்! (வாளை நேர்நிறுவுதல்.) சிவபெருமானே! சோமசுந்தரமூர்த்தியே! சொக்கலிங்கவள்ளலே!

நீயே யெமக்குக் கதி! இதோ நின்பாதாரவிந்தங்களை வந்து கடிதிற் சேருவேம்! எம்மைக் கருணைக் கண்ணுற் பார்த்து ஆண்டருளுவாய்!

(இறைவனைப்பாடுதல்.)

"ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக்கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே."

"இர்ந்தவன் பாய வன்பர்க் கவரிறு மன்ப போற்றி [ற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை போ
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
யார்ந்தநின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி."

(கோமளவல்லிவருதல்.)

கோமளவல்லி:—ஐயோ! பிராணநாதா! இதென்ன விபரீதம்! விபரீதம்! என்னை இவ்வாறு தமியளாய் விட்டுவிட்டு நீ உயிர்துறத்தல் நியாயமேயோ? (கோமளவல்லி சூரசேனவர்மன் பாதங்களில் விழுந்து பிடித்துக் கொள்ளுதல்.)

சூரசேனவர்மன்:—ஓ! இதென்ன புதுமை! சிவபெருமானே! அடியேன் நின்னுடைய பாத நிழலைச் சேருதற்கும் நினக்குப் பிரிய மில்லையோ? என்ன செய்வேம்? தெய்வமே!

கோமளவல்லி:—என்து பிராணேஸ்வரனே! நான் சொல்லுகின்றதைக் கொஞ்சங் கவனமாய்க் கேட்பாய். எல்லாவற்றிற்கும் நாளைவரைக்கும் பொறுத்துக் கொள்ளுவாய்! அதற்குட் சிலரும் வந்துவிடுவார். எதிரிகள் சமாதானத்திற்கு இணங்கிவிட்டாற் சரிதான். அப்படி இல்லையாயின் இவ்விடத்தில் வாளிற்பாய்ந்து உயிர்விடுவதைக் காட்டிலும் போர்க்களஞ்சென்று சாவது மேன்மையாம். ஆகையால் என்னருமை நாயகனே! நீ யென்னை வேண்டியாவது நாளைவரைக்கும் பொறுத்துக் கொள்வாயாக!

சூரசேனவர்மன்:—ஏ! பிராணவல்லி! நீகூறுவதும் நியாயமேயாம்! என்ன செய்வேம்?

கோமளவல்லி:—ஏ! பிரியநாயகா! எல்லாவற்றிற்கும் நாம் இவ்விடத்தில் இருக்கவேண்டாம். போவோம். வருவாயாக.

சூரசேனவர்மன்:—விடு, விடு, வருகின்றேம். (எல்லோரும்போதல்.)

மூன்றாங்களம்.

இடம்:—சோழன் பாசறை. காலம்:—காலை.

நடர்:—சுந்தரனும் சுருபனும்.

சுந்தரன்:—எனதருமைத் தோழியே! நாமும் நமது மனைவிமார்களும் வந்து சேர்ந்தோம்! இதோ பார்! இப்பக்கம் வைகைநதி யோடாநின்றது, அப்பக்கங் காணப்படுவது திருவாப்பனூராம். நமது கருணையங் கடலாகிய சிவபெருமானார் அடியார்களுய்யும்பொருட்டுத் திருக் கோலங் கொண்டெழுந்தருளும் பெற்றியராதலின் சோழராசப் பாண்டியன் பொருட்டு அவ்விடத்து அப்பு வடிவமாய் அமர்ந்து காட்சி கொடுத்தருளினர்! அம்மான்மியம் பற்றி யன்றோ அந்த ஆப்பனூரென்னும் பெயர்த்தாயிற்று. நாம் மீட்டும் நமது சுந்தரேசப்பெருமானைத் தரிசிக்கும் பாக்கிய மடைந்தோம்! ஆயினும் இனி மேல்வரும் போரிற்கு நீ யஞ்சுகின்றாயோ?

சுருபன்:—எனது பிரியசுந்தரா! யான் நின்னை அடைந்தபிறகும் போர்க்குப் பயப்படுவேனோ? ஒருவேளை என் தந்தையார் யுத்தகளத்தில் இறக்கும்படி நேரிடுமாயின் வருந்துவேன் என்றெண்ணுகின்றாயோ? அப்படி வருத்தப்படும் தன்மையை யுடையவளாயின் யான் நின்னுடன் போத ஒருப்பட்டிரேனே! நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டுவதில்லை. கடவுள் செய்கிறபடி செய்யட்டும்!

சுந்தரன்:—சரி. அப்படியாயின் நாம் நம்முடைய நண்பர்களை மீட்டும் காணலாம். எனது ஆசிரியர் வித்தியாசாகரப்புலவர் என்செய்கின்றாரோ? எனது பிரியநேசர்களாகிய [illegible] சந்திரமுகனும் என்செய்கின்றார்களோ? அவர்களுக்கு விவாகமும் நடந்துவிட்டனவோ?

சுருபன்:—அநேகமாய் அம்புஜாட்சிக்கும், கனகமாலைக்கும் கலியாணம் நடந்திருக்குமென்றுதான் தோன்றுகின்றது! இதிருக்கட்டும். எனது ஆனந்தத்தலைவனே! யான்என்தோழியரோடு பண்டு விளையாடுவது அப்பூஞ்சோலை தானே?

சுந்தரன்:—ஆமாம். அதுதான் நாமிருவருங் கண்டு காதல்கொண்ட பூஞ்சோலை! பார்! அஃது நீ இல்லாமையினால் இலக்குமியில்லா இல்லத்தினையுஞ் சான்றோரில்லாச் சபையினையும் போலாகின்றது!

சுருபன்:—சரி. அதிருக்கட்டும். எனது சுந்தர வள்ளலே! நீ உனது கானரசத்தினால் என்னை யானந்தப்படுத்திச் சுந்தரானந்தன் என்று நினக்கிட்ட பெயர் சாலுமென்று காட்டுவாயாக.

சுந்தரன்:—ஆ! அப்படியே என்பெயரெனக்குச் சாலுமென்பதை நிலைநிறுத்திக் கொள்ளுகின்றேன்! கேட்பாயாக. (சுந்தரன்பாடுதல்.)

சதாசிவா பராபரா தயாநிதீ மகாகுரோ
சிதானவா சுகாகரா திவாகரப் ரகாசனே
யுதாரமா குணாத்மனே யுகாரரூ பியோகினைச்
சதாமனத் திருத்துவாஞ் சபாபதீ யுமேசனே.

சுருபன்:—யான் நின்னைக் கவி பாடும்படி கேட்கவில்லையே.—ஏதேனுங் கீர்த்தனம் பாடுவா யென்றன்றோ நினைத்தேன்?

சுந்தரன்:—ஆயின் அதுவும் பாடுகின்றேன். கேட்பாயாக.

(சுந்தரன்பாடுதல்.)

இராகம்-பிலகரி, தாளம்-சாப்பு.

பல்லவி.

தெய்வத்துணை சம்புவே மேலோன்நீ காண்டி

அநுபல்லவி.

மைகொண்ட கண்ணியென் ரூபாவதிசக்ர
வாகத்தை மானுங்கொங்கைத்தேவியே யெல்லாந் (தெய்வ)

சரணம்.

ஆனந்த வல்லித்தா யாரொடு கூடவே
அன்றுவெண் மன்றாடி யான்மாவெல் லாமாட்டி
ஞானந்த வாதவர் நால்வர்க்கும் யோகத்தை
நாட்டினன் மெய்யினைக் கூட்டியோ னாதலின் (தெய்வ)

(சேவகன்வருதல்.)

ஏடா! சேவகா! என்ன செய்தி?

சேவகன்:—ஐயா! சேராஜன் மந்திரி சுசீலர் தாம்வந்திருப்பதாக நமது மகாராஜாஅவர்களிடம் தெரியப்படுத்தும்படி சொன்னார்.

சுருபன்:—அப்படியா? அவர் வந்திருக்கிறாரா? சரிதான், நாம் அரசனிடம் தெரியப்படுத்துகின்றோம். நீ போ.

(சேவகன்போதல்.)

சுந்தரன்:—சரி, நீ யுள்ளே போய்விடு. நான் மாத்திர மிவ்விட மிருக்கின்றேன். அரசர்கள் வருகிற சமயமாயிற்று. (சுருபன்போதல்.) இன்னுஞ் சிறிது நேரத்திற் கெல்லாம் சமர்தொடங்கவேண்டும். அப்படியிருக்கச் சுசீலர் இப்போது இவ்விடம் வந்ததின் காரணம் என்னவோ? ஒருவேளை வர்மனுக்குத் தெரியாமல் எந்தை சற்குண வழுதியாரைக் காண வந்தனரோ? அன்றி வர்மன் பொருட்டுச்

சமாதானம் செய்ய வந்தனரோ? தெரியவில்லை. எல்லாம் அரசன் வந்தபின்பதைச் சுசீலர் சொல்லும்போது கேட்போம்.

(வீரேந்திரசோழன்வருதல்.)

மகாராஜா அவர்களுக்கு அடியேன் சுந்தரன் வந்தனம்.

வீரேந்திரசோழன்:—ஏ! சுந்தரரே! என்ன சமாசாரம்? உம்முடைய சினேகிதர் சற்குணரெங்கே காணோம்?

சுந்தரன்:—ஏன்? இதுவரை அவர் இங்கேயே யிருந்துவிட்டு இப்பொழுது தானே அந்தப் பக்கமாக வந்தார்!

வீரேந்திரசோழன்:—சரி. மற்றைப்படி நம்முடைய படைகளெல்லாம் அணிவகுக்கப்பட்டிருக்கின்றனவா?

சுந்தரன்:—ஓ! அவையெல்லாம் ஒழுங்காய்த்தாம் இருக்கின்றன. அதற் கொன்றுஞ் சந்தேகமில்லை. இதுநிற்க, சேரன்மந்திரி சுசீலர் ஏதோ காரியமாய் வெளியில் வந்திருப்பதாகச் சேவகன் சொன்னான்.

வீரேந்திரசோழன்:—என்ன! நிஜந்தானா?

சுந்தரன்:—ஆம். நிஜந்தான், மகாராஜா!

வீரேந்திரசோழன்:—அப்படியாயின் நமது சற்குணவழுதியா ரெங்கே? இன்னும் இங்கே வரவில்லையோ? (சற்குணவழுதிவருதல்.)

சுந்தரன்:—ஏன்! அதோ அவர்களும் வந்துவிட்டார்களே?

வீரேந்திரசோழன்:—வந்தனம் வழுதியாரே! வாருங்கள். இப்படி வீற்றிருங்கள். கேட்டீர்களோ ஒருவிசேஷம்?

சற்குணவழுதி:—வந்தனம். வந்தனம். அப்படி யென்ன விசேஷம்? தெரியாதே. ஏன் சுந்தரரே! நிற்கின்றீர்? இப்படி யுட்காருமே?

சுந்தரன்:—அதற்கென்ன? பாதக மில்லை. நான் இதோ இப்படி யுட்காருகின்றேன்.

வீரேந்திரசோழன்:—சேரன் மந்திரி சுசீலனென்பவன் ஏதோகாரியமாய் வந்திருக்கின்றானாம்!

சற்குணவழுதி:—ஆ! அப்படியா? ஆனால் அவனை யுள்ளே வரச்சொல்லி என்ன சமாசார மென்று கேட்கலாமே!

வீரேந்திரசோழன்:—ஏ! சேவகா! (சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா! ஆக்ஞை!

வீரேந்திரசோழன்:—நீபோய் வெளியில் வந்திருக்கும் சேரன் மந்திரி சுசீலரை யுள்ளே வரச்சொல். (சேவகன்போதல்.)

சற்குணவழுதி:—அவர்முன் நம்மிடத்து இருந்தவராகையினாலே யொரு வேளை நம்மைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்திருப்பார். சகலமுங் கேட்டால் தாமே தெரிகின்றன. (சுசீலன்வருதல்.)

சுசீலன்:—அடியேன் சேரன் மந்திரி சுசீலன் உபய மகாராஜாஅவர்களுக்கும் வந்தனம்.

சற்குணவழுதி:—ஓய்! சுசீலரே! இப்படி யுட்காரும். என்ன சமாசாரம்? சௌக்கியமாயிருக்கின்றீரா? உமதுதேசமெல்லாம் வாழ்கின்றதா?

சுசீலன்:—ஆம். நம் சுந்தரேசர் கிருபையினால் அடியேன் சௌக்கியமாய்த் தானிருக்கின்றேன். மற்றைப்படி யான் வேறு இராஜகாரியமாய் வந்திருக்கின்றேன்.

வீரேந்திரசோழன்:—ஓய்! மந்திரியாரே! நீர் வந்த ராஜகாரிய மென்ன? சீக்கிரஞ் சொல்லும். நாம் போர் தொடங்கவேண்டும்.

சுசீலன்:—அடியேன் தாங்களும் சேரனும் பொருதால் பலர் மாளவேண்டு மேயென்னும் நோக்கத்தோடு வெகுகஷ்டத்துடன் சேரராஜன்குர சேனவர்மனைத் தங்களுடன் சமாதானமாய்ப் போகும்படி இணங்கி யிருக்கிறேன். ஒருவேளை தாங்களு மெனியேன்மீது கருணைகூர்ந்து சமர்நிறுத்தி எல்லாருஞ்சேர்ந்து ஒருடன்படிக்கை செய்துகொடல் கூடுமோ என்னும் எண்ணத்தோடு அடியேனிவ்விடம் வந்தேன்.

வீரேந்திரசோழன்:—என்ன? ஐயா! வழுதியாரே! சுசீலர்சொல்லுகிறதைக் கேட்டீர்களோ?

சற்குணவழுதி—அப்படியாயின் சுசீலரே! நாம் சந்திரநிரைத் தீர்மானப் படிபோது சேரன் இணங்கியிருக்கலாமே!

வீரேந்திரசோழன்:—அதுவுமன்றி நம் சந்திரநிரைச் சேரன் தன் ஆள் விட்டடித்தது நீதியாகுமோ?

சுசீலன்:—இவ்வாறு சந்திரநிரை யாரோ சிற்சில கயவர்கள் இடைவழி யில் அடித்துவிட்டார்களென்பதை எங்கோன் குரசேனவர்மன் உணர்ந்து நகர்முழுதும் அவர்களைக் கண்டுபிடித்துத் தருபவர்கட்கு வெகுமதி கொடுப்பதாகப் பறையறைவித்திருக்கின்றான்.

சற்குணவழுதி:—அப்படியாயின் சரிதான்.

சுந்தரன்:—எல்லாவற்றிற்கும் உம்முடைய அரசன் குரசேனவர்மனை இவ்விடம் அழைத்துக்கொண்டு வம்மின்!

வீரேந்திரசோழன்:—ஆமாம். சுந்தரரே! நன்றாய்ச்சொன்னீர்! சரிதான். சுசீலரே! தாங்கள் சென்று சோலை அழைத்து வந்து உடன்படிக்கை செய்துகொண்டு போகலாம்.

சுசீலன்:—ஆனால் அடியேன் போய் வருகின்றேன்.

சற்குணவழுதி:—சரி, சரி. போய்வாரும். (சுசீலன்போதல்.)

வீரேந்திரசோழன்:—ஏன்? வழுதியாரே! இப்பொழுது இங்கே வந்து போன சுசீலரென்பவர் நிஜமாகவே சமாதானம் பேச வந்தவரோ அல்லது நாம் என்ன செய்கிறோமென்று வேவுபார்க்கவந்தவரோ? தங்களுக்கிதைக்குறித்தேதாவது தெரியுமோ?

சற்குணவழுதி:—இல்லை, இல்லை. அப்படி வேவுபார்க்க வந்தவரா யிருக்க மாட்டார்.

வீரேந்திரசோழன்:—இல்லாவிட்டால் நல்லதுதான். எனக்கென்னவோ ஆச்சரியமாயிருக்கின்றது! இதுவரையிலும் நாம் போர்தொடங்குந் தருணமட்டும் சமர்செய்யச் சன்னத்தமாயிருந்தவன் இப்போது உடன்படிக்கைக்கு வருவதை யோசித்துப் பார்க்குமிடத்து ஏதாவது எதிர்பாராத செய்தி நிகழ்ந்ததா யிருக்கவேண்டு மென்று தோன்றுகின்றது.

சுந்தரன்:—மகாராஜா அவர்கள் எனக்குக் கொஞ்சம் உத்தரவு கொடுக்க வேண்டும். யான் நம்முடைய சேனைத் தலைவனிடம் போக வேண்டும்.

வீரேந்திரசோழன்:—சரி. சீக்கிரமாக வந்து சேரும். வர்மனோடு நாம் உடன்படிக்கை செய்கையில் நீரும் இருக்கவேண்டும்.

சுந்தரன்:—ஆம். அந்தப்படியே வந்து சேருகின்றேன்.

(சுந்தரன்போதல்.)

வீரேந்திரசோழன்:—ஓ! வழுதியாரே! தாங்கள் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களோ நம் சுந்தரரைப் பற்றி? மகா புத்திமானாயிருக்கிறார்! இராஜதந்திரங்களும் போர்செய்யு முறைகளும் வெகு நன்றாகத் தெரிந்தவர் போலக் காணப்படுகின்றார்! மேலும் மிகவும் கல்வி கற்றிருக்கிறார்! இவ்வளவு இளமைப் பருவத்திலே இவர்போலுங் கல்விமான் யானெங்குங் கண்டதில்லை!

சற்குணவழுதி:—யான் முன்னொருமுறை தஞ்சையிலிருந்தபோது அவரொடு சம்பாஷித்திருக்கின்றேன். அப்பொழுது அவர் பேசியதினின்றும் அவர் ராஜநீதி முறையிலும், நீதிநூல்களிலும் இசைநூலிலும் விசேஷப் பயிற்சியுள்ளவ ரென்று தெரிந்துகொண்டேன்.

வீரேந்திரசோழன்:—இன்னும் அவருடைய தோழர் சுருபரென்பவர் மிருதியாய்ப்பேசுகிறதில்லை. அப்படியே அவர் பேசத்தொடங்கி விட்டால் அவர்பேச்சினும் மதுரமானது வேறொன்றுமில்லை!

சற்குணவழுதி:—ஆம். அவர் இனியகுரலுள்ளவர்; மிகமென்மைத்தன்மையும் அழகுமுடையவர்! அதிகமாய் யாவரோடும் கூடிப் பேசுகிறவருமல்லர். நானும் இரண்டொரு முறை கவனித்திருக்கிறேன். மற்றைப்படி நம்முடைய படைகளையும் பார்த்துக்கொண்டு வருவோம், வாருங்கள். (எல்லோரும்போதல்.)

நான்காங்களம்.

இடம்:—மதுரைமாநகரிலொருவீதி. காலம்—காலை.

நடர்:—வித்தியாசாகரப்புலவரும், சிலகனவான்களும்.

முதற்கனவான்:—ஓய்! புலவரே! மந்திரிசுசீலர் நம் வழுதியாரோடு வர்மன் பொருட்டுச் சமாதானம் பேசப்போயிருக்கிறாராமே! அதென்ன மெய்தானா?

புலவர்:—மெய்யோ! பொய்யோ! அஃது யாம் அறிந்திலேம். இதுநிற்க. யாமொன்று செய்யக் கருதியுளேம். அஃதென்னை யென்பிரேற் கூறுதும்:—

அருவுருவ மானபர மானந்தத் தனிக்கடவுள்
மருவுறு மெழில்வைகை யெனும்யாற்றின் வடகரைக்கண்
வருமனொடு சமர்புரிய வந்தவிரு பெருவேந்தர்
கருமமுற் றுகவென்றி பெறுகவெனக் கவிசெய்வான்.

மணங்கொண்டு பல்விதமாம் வாழ்த்துசெயுள் மிகவியற்றிக்
கனங்கொண்டு சிறப்புற்றுக் கழறருபட் டம்பெறீஇ
யினங்கொண்டு நன்மணியி னிணங்கொண்டு களிப்புடனே
தினங்கண்டு தனங்கொண்டு சீர்மேன்மைத் தனங்கொண்டு—

முதற்கனவான்:—ஓய்! ஓய்! புலவரே! போதும்! போதும்! போதும்! நிறுத்தும்! நிறுத்தும்!

புலவர்:—என்ன? என்ன? அப்படிச்செய்தாலென்ன?

இரண்டாங்கனவான்:—நன்று! நன்று! நுமது வெள்ளறிவு இன்னதென்று பொன்னெனப் புலப்பட்டதே!

புலவர்:—ஏயே! கற்றுணர்ந்த நல்ல கவிவாண னென்றனக்குக்
குற்றங்கற் பித்த குணமில்லாய்—சிற்றறிவை
யெங்கேநீ கற்று யெவருனக்குப் போதித்தாய்
தங்காநீ வாழ்ந்ததுபோ தும்.

இரண்டாங்கனவான்:—சரிதான். புலவருக்குப் பித்தம் அதிகமாய்விட்டது போலும்! அதுதான் வாய்க்குவந்தபடி யெல்லாம் பிதற்றுகின்றார்!

புலவர்:—என்னையா?

இரண்டாங்கனவான்:—ஆமாம், உம்மைத்தான்!

புலவர்:—யான் பிதற்றினேனோ! நீர் பிதற்றினீரோ! நன்று யாலோசித்துக் கூறுதிர்.

இரண்டாங்கனவான்:—ஓய்! புலவீர்! இதுகாறும் நம்மைப் புல்வாய்ப் புலவரென்று கருதியிருந்தேன்! இப்பொழுது நீவிர் பெருவாய்ப் புலவராயினீரே!

புலவர்:—கேட்டிர்! கேட்டிர்! அவர்விளைத்தலை.

இரண்டாங்கனவான்:—ஓய்! உமக்குக் கிழத்தலையா? எமக்குக்கிழத்தலையா!

முதற்கனவான்:—அதுமட்டுமோ? அவர் பணவாசை கொண்டபிணம்!

புலவர்:—யாவர்!

இரண்டாங்கனவான்:—நீர்தாம்!

புலவர்:—நீவிர் வாளாவிருத்திர்! யாம் உம்மோடு பேசவில்லை.

இரண்டாங்கனவான்:—ஆமாம்! சரியாய்ச் சொன்னீர்! "பணவாசை கொண்டபிணம்!" நும்வாய்க்குச் சர்க்கரை யிடவேண்டும்.

புலவர்:—வெற்றுரை! வெற்றுரை!

இரண்டாங்கனவான்:—வெற்றுரையா! கேளும் யான் சொல்லுகின்றேன். நீர் முன் சற்குணவழுதியார் அரசரா யிருக்குங்காலத்து அவர்வாசல் வித்வானாயிருந்து அவர் மீது புகழ்ச்சிக்கவி பாடினீர்! இதுவரைக்கும் வருமனைப் புகழ்ந்தீர்! இப்பொழுதோ சோழனையும் வழுதியையும் புகழ வெண்ணினீர்! இவ்வளவும் அந்தப் பணப்பேராசையினாலே அன்றோ?

புலவர்:—ஓகோ! யாம் முன்னர் வர்மனைப்பாடிய கவியுட் புகழ்ந்தனமெனக் கருதினீரோ! அது வசைக்கவி யென்பது மறியீரோ? மங்கல முதன்மொழி யல்லாத 'நிம்பம்' என்னுஞ் சொல்லைப் பிரயோகித்ததினால் மங்கலப்பொருத்த மின்மையும், சிறப்பில் சொல்லாதலின் சொற்பொருத்த மின்மையும், ஒற்றுட்பட நான்கெழுத்தாதலின் எழுத்துப்பொருத்த மின்மையும், இன்னும் பிறபொருத்த மின்மையும் நீவிர் உணர்கிலிரோ?

முதற்கனவான்:—நீர் சொன்னகவியிலே முதற்சொல் வழுதிக்கு அடைமொழியா யிருப்பதினாலே இவ்வமங்கலம் வழுதியைப் பற்றாதோ?

இரண்டாங்கனவான்:—இப்பொழுது நாம் கேட்டால் இந்தமாதிரியும் வருமனுக்கு வேண்டியவன் யாருங்கேட்டால் அது வழுதியைச் சேருமென்றும் தமக்குத்தோன்றியபடியெல்லாம் கூறித்திரியும் புலவர் பெருமானல்லவோ? இதைக்கருதியல்லவா சோழனுங் கம்பரை நோக்கிப்,

"போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடிற்
தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே."

என்று சொல்லியது? (மூன்றாங்கனவான் வருதல்.)

மூன்றாங்கனவான்:—ஓய்! புலவரே! உமக்கொரு சமாசாரம் தெரியாதே!

புலவர்:—என்ன? என்ன?

முதற்கனவான்:—அவர் சொன்னதற்குச் சமாதானஞ் சொல்லாமற் புதுச் சமாசாரம் விசாரிக்கப் புகுந்தீரே!

இரண்டாங்கனவான்:—சொல்லத் தெரிந்தால் உடனே சொல்லமாட்டாரோ! சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்!

புலவர்:—அவையெல்லாம் சரிதாம். சற்றே பொறுத்திர். இவர் சொல்வதைக்கேட்ட பின்னை நுமக்குச் சமாதானம் சொல்லுகின்றோம்.

மூன்றாங்கனவான்:—இப்பொழுதுதான் பார்த்தேன், மந்திரி சசிலரும் இந்த வஞ்சகவர்மனும் சில மெய்காப்பாளருடன் சோழன் பாசறைக்குப் போகிறார்கள்! ஏதோ சமாதானம் பேசுகிறதற்காம்!

புலவர்:—ஓய்! கேட்டீரோ அவர் கூறுவதை? யாம் அவ்வருமன் மீது இவ்வசைக் கவிபாடிய நாள் தொட்டு அவன் எய்திய இடுக்கண்களும் இப்பொழுது அவன் நம் வழுதியார் பாதத்தில் விழுந்து சமாதானம் பேசி உயிர்தப்பிப் பிழைக்க எண்ணுதலுமே அவ்வசை சூரசேனனையே பற்றிய தென்பதற்குத் தக்க சான்று பகரும். மேலும் வழுதியார் மாட்டு எமக்குள அன்பு அளவிட்டுரைக்கற் பாலையதன்று. எமது மாணாக்கருட் சிறந்தவனாய சுந்தரானந்தன் றனக்கு என்மீதிருந்த அன்பையும் எனக்கு அவன் மேலிருந்த ஆதரத்தையும்பற்றி நும்மிடத் துரைப்ப தென்னே! அந்தோ! இத்தகைய மாணாக்கனைக் கொலைக்களம் படுத்த வருமன் தலைக்கண் உருமுறாதோ?

முதற்கனவான்:—சரி. இவரிப்படித்தான் என்னவாவது சளசளவென்று பேசிக்கொண்டிருப்பார்!

இரண்டாங்கனவான்:—ஆமாம். நாமும் வையையாற்றின் தென்கரைக் கண் ஒளித்திருந்து வர்மன் சமாதானம் செய்துகொண்டு வரும்பொழுது பார்ப்போம். வாரும்.

முதற்கனவான்:—இரும், இரும். என்ன போர்முரசம் முழங்குகின்றதோ? சரிதான், யுத்தந் தொடங்கப்போகிறார்கள் போலும்.

மூன்றுங்கனவான்:—போம், ஐயா! போம். யுத்தமாவது நடக்கவாவது! இவன்போய் வழுதியார் காலிலே வீழ்ந்து ஐயா அப்பா என்று கெஞ்சப்போகிறான்! அவர் இரக்கப்பட்டு இவனை மன்னிப்பாரே யன்றிப் போர்புரியார்!

புலவர்:—யாமிதற்குறித்து இப்பொழுது பேசிக்கொண்டிருப்பானேன்? போவோம், வாருங்கள்.

(எல்லோரும்போதல்.)

ஐந்தாங்களம்.

இடம்—சோழன்பாசறை. காலம்—காலை.

நடிகர்:—சற்குணவழுதியும் விரேந்திரசோழனும்.

விரேந்திரசோழன்:—என்? வழுதியாரே! படைகளையெல்லாம் நன்றாய்ச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தீர்களா? போர்வீரர்கள் யாவரும் யுத்தசன்னத்தராயிருக்கின்றார்களா?

சற்குணவழுதி:—நன்றாய்த்தான் பார்த்தேன். தேர்ப்படை குதிரைப்படை முதலிய யாவும் போர்தொடங்க நம்முடைய கட்டளையினைத்தான் எதிர்பார்த்துக்கொண்டு நிற்கின்றன.

(சேவகன்வருதல்.)

விரேந்திரசோழன்:—அடா! சேவகா! அந்தச் சுசீலனும், சூரசேனனும் வந்திருக்கின்றார்களோ?

சேவகன்:—ஆமாம். மகாராஜா!

விரேந்திரசோழன்:—ஆனால் நீ சென்று அவர்களை வரும்படி சொல்லு.

(சேவகன்போதல்.)

(சுசீலன், சூரசேனவர்மன், மெய்காப்பாளர் இவர்கள்வருதல்.)

சூரசேனவர்மன்:—வந்தனம்.

(சற்குணவழுதியும் விரேந்திரசோழனும் எழுந்திருத்தல்.)

விரேந்திரசோழன்:—வந்தனம், வந்தனம். தாங்கள் இப்படிவந்து வீற்றிருக்கருளலாமே?

சூரசேனவர்மன்:—இல்லை, இப்படி யுட்காருகிறோம்.

விரேந்திரசோழன்:—அவ்விடத்து இஷ்டம் எப்படியோ அப்படியே!

சற்குணவழுதி:—என் நிற்கிறீர்கள்? இப்படியுட்காருங்கள்.

சுசீலன்:—அதற்கென்ன? உட்காருகிறோம்.

விரேந்திரசோழன்:—எங்கே நம்முடைய சுந்தரர்? இன்னும் வரக் காணோம்.

சற்குணவழுதி:—இதோ வந்துவிடுவார். அவர் ஒருநாளுங் காலதாமசஞ் செய்யமாட்டார். ஒருவேளை தம்முடைய ஆன்மநேசராகியசுகுப்ரரையுங் கூட்டிக்கொண்டுவருவார்.

விரேந்திரசோழன்:—இது நிற்க. யாம் தங்களுடைய மந்திரியார் சுசீலர் மூலமாய்த் தாங்களும் யாமும் சாமோபாயத்தை நாடி நடத்தல் நலமென்பது பற்றித் தங்களுக்கு எம்முடன் சமாதானமாய்ப் போவதற்கு இஷ்டந்தான் என்பதை யுணர்ந்து கொண்டோம். அஃது எமக்கும் இஷ்டமேயாமாயினும் எமது வழுதியார் இஷ்டம் எப்படியோ? அவர்க்குத் துணைவலியாய்ப் போந்தாம்.

சுசீலன்:—இதற்குமுன் என்ன வித்தியாசங்கள் நடந்திருந்த போதிலும், அவற்றையெல்லாம் மறந்துவிடவேண்டும். மற்றைப்படி நாமெல்லாம் இன்று நட்பானராயினோமென்று எண்ணிக்கொள்ள வேண்டும். இவைதாம் யான் சொல்லவிரும்பினவை.

சூரசேனவர்மன்:—ஆம். அந்தப்படியே செய்வதற்குத் தடையொன்றுமில்லை.

சற்குணவழுதி:—அவையெல்லாம் சரிதாம். சுசீலர் சொல்வதே எமக்கும் உடன்பாடேயாம்.

விரேந்திரசோழன்:—அப்படியாயின் யாம் உடன்படிக்கையின் நிபந்தனைகள் இன்னின்னவென்த் தீர்த்துக்கொண்டு பொழுதுபோக்கின்றி எழுதத்தொடங்கவேண்டியதுதான்.

சுசீலன்:—ஆம், அப்படி இன்னின்னவெனத் தீர்க்கவேண்டிய நிபந்தனைகள் என்ன இருக்கப்போகின்றன?

சற்குணவழுதி:—எமது நாட்டை எம்மிடம் ஒப்புவித்து விட்டு அவர் தம்முடைய சேரநாட்டிற்குப் போகவேண்டியது தான். மற்றைப்படி வேறென்ன?

சூரசேனவர்மன்:—ஆம். யாம் வழுதியார் நாட்டை அவரிடமே யொப்புவித்து விடுகின்றோம். அதற்குஆக்ஷேபனை யொன்றுமில்லை. பிறகு எமது சேரநாட்டை யாம் பெறுவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் நீவிர் செய்ய வேண்டும்.

விரேந்திரசோழன்:—அதற்கென்ன? நீருமது நாட்டைப் பெறுவதற்கு தடையென்ன?

சுசீலர்:—ஐயோ! அது தெரியாதோ தங்களுக்கு? நமது வழுதியாருடை மாமனார் வீரமார்த்தாண்டத் தொண்டைராஜர் சேரநாட்டின் மீ படையெடுத்துச் சென்று கருவூரில் இப்பொழுது யுத்தம் நடந் கொண்டிருக்கிறது!

சற்குணவழுதி:—இதென்ன? ஆச்சரியமாய் இருக்கின்றதே! நாம் மூ பரங்கிப் போர்க்கு அவரிடம் உதவி கேட்காமை பற்றியும், பிற தம் நகராகிய காஞ்சிக்குப் போகாது தஞ்சைக்குப் போன பற்றியும் உண்டாகிய கோபத்தினு லெம்மிடந் தெரிவியாது தா படையெடுத்துச் சென்றிருக்கிறார் போலும்! இதுவுமொரு வே கைதான்! மற்றைப்படி, கடம்பவனப் பெருமான் கருணையி மீட்டும் இராஜ்யாதிகாரம் பெற்றேன்! பெற்றும் பயனென்ன? ஓ! என்னருமைச் சுந்தரானந்தனே! இனி இந்நாட்டினை ஆள்ப யாவர்? நீயும் உயிர்விடுத்தாயே!

சூரசேனவர்மன்:—ஓ! வழுதியாரே! எளியேன் எவ்வளவோ தவஞ்செய் புத்திரபாக்கியமின்றி வருந்துங் காலத்து மகாதேவனருளால் ஓ மகளுதித்தனள்! அவளையும் இழக்குந் துர்ப்பாக்கியஞ் சம்பவித்த இனி அவளை இழந்தபிறகு எனக்கு அரசாள விருப்பமில்லை. ஆன யால் நீரே அந்தச் சேரநாட்டையுங் கைக்கொள்ளும்

(பெருமூச்செறிதல்

(சுந்தரானந்தனும்ரூபாவதியுந்தங்கள் மாறுவேடமகற்றிவருதல்

சுந்தரானந்தன்:—எனது அருமைத் தந்தையாரே! தங்கள் குமாரன் அ யேன் சுந்தரானந்தன் நமஸ்காரம்! (வணங்குதல்

ரூபாவதி:—எனது பிரியமுள்ள தகப்பனாரே! தங்கள் புத்திரி ரூபாவ நமஸ்காரம்! (வணங்குதல்

சற்குணவழுதி:—அப்பா! எனதருமை மகனே! சுந்தரானந்தா! மதிகுல தழைக்க வந்த மாணிக்கமே! இன்னுமுளையோ? இன்றுதான் உ னைப் பெற்றெடுத்தேன்! (தழுவிமுத்தமிடுதல்

சூரசேனவர்மன்:—அம்மா! என்கண்ணே! ரூபாவதி! என் குலம்விள வந்த கோகிலா மணியே! நீ இன்னும் உயிரோ டிருக்கின்றனே நீ இதுவரையிலும் எங்கிருந்தாயோ? (தழுவிமுத்தமிடுதல்

சற்குணவழுதி:—சோமசுந்தரேசப் பெருமானே! எளியோம் மீது உ னுடைய அருளிருக்கமிருந்தவாறு என்னே! என்னே!

(இறைவனைத்துதித்துப்பாடுதல்.)

"தொண்ட வுழவ ராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணைக் கச்சைக் கடவுள் வாழ்க
வருந்தவர்க் கருளு மாதி வாழ்க
வச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
வேதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க."—

சூரசேனவர்மன்:—காணாமற் போன எனது அருமை மகளைப்பெற்றேன்! இனிமேல் என்னெனக்கு அரியதேயோ? சந்திரசேகரருக்கு எம் மிருவரையும் பிறந்தது இன்று தானோ?

(இறைவனைத்துதித்துப்பாடுதல்.)

"கூடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
யின்றெனக் காரமு தானாய் போற்றி."—

விரேந்திரசோழன்:—நம்முடைய நாட்டிற் சந்தரராயும், சரூபராயும் இருந்தவர்கள் இவர்தாமோ? ஆச்சரியம்! ஆச்சரியம்! என்? வழுதி யாரே! உமது மகனுடைய அடையாளம் உமக்குத் தெரியாமலா போயிற்று? ஆனாற் சரூபரைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குக் கொஞ்சஞ் சந்தேகம் இருந்து கொண்டே யிருந்தது.

சுசீலர்:—பரமசிவாக்ஞை இப்படி யெல்லாம் முடியவேண்டும் என்று இருக்கும் போது, யார் என்ன செய்தாலும் முடியுமோ?

சூரசேனவர்மன்:—என் கண்மணியே! ரூபாவதி! நீ சற்குணவழுதியார் மகன் சுந்தரானந்தன் மீது காதல்கொண்டு உடன்போயினையோ? இனி ஒரு க்ஷணமேனும் தாமதேன்! ஓ! சுசீலரே! நீர் இப்பொழுதே சென்று மணமுரசஞ் சாற்றச்சொல்லுவீர்! நன்முகூர்த்தம் பார்த்து கண்மணி ரூபாவதிக்குஞ் சுந்தரானந்தனுக்கும் விவாகம் நடத் துவிப்போம்! என்? தாங்களெல்லோரும் அரண்மனைக்கு எழுந் தருளலாமே! பகவான் சிவபெருமானுடைய கடாட்சத்தாற் சகல மும் இனிமையாய் முடிந்தன! (சுசீலன்போதல்.)

சற்குணவழுதி:—ஆ! அப்படியே! இதோ புறப்பட்டோம்.

வீரேந்திரசோழன்:—தாங்கள் முன்னர்ப் போங்கள். இதோ யாமும் சேனைத்தலைவர் முதலாயினோர்க்கு மனமுரசமார்க்கும்படி உத்தரவு செய்துவிட்டு வருகின்றோம்.

சூரசேனவர்மன்:—இல்லை, இல்லை. யாராவது சேவகர்மூலமாய்ச் சொல்லி யனுப்பிக் கொள்ளலாம். வாருங்கள். போகலாம்.

(கைதொட்டீர்த்தல்.)

சற்குணவழுதி:—நாம் அந்தப்புரத்திற்குப் போய் அங்குள்ளவர்களையும் அழைத்துக்கொண்டு செல்வோமே!

சூரசேனவர்மன்:—அவர்களை அழைத்து வருவதற்கு எமது பட்ட மகிஷி யைப் பரிவாரங்களோடு வாத்திய கோஷங்களுடன் அனுப்புகி றோம், நீங்கள் வாருங்கள்.

வீரேந்திரசோழன்:—ஆனுல்சரி, வாருங்கள். வழுதியாரே! போகலாம். நீங்களிருவரும் சம்பந்திகளாய் விட்டீர்கள்! இனிமேல் உங்களுக் கொரு குறையுமில்லை.

சூரசேனவர்மன்:—சரி, சரி. வாருங்கள், வாருங்கள்.

(எல்லோரும்போதல்.)

அரங்கம்

இடம்:—பாண்டியனரண்மனை. காலம்:—முற்பகல்.

நடர்:—கோமளவல்லியுஞ் சேவிலியும்.

கோமளவல்லி:—சமாதானஞ் செய்துகொண்டு வரப்போன தலைவரும் சுசீலரும் யாது காரணத்தினாலோ இதுவரையிலும் வரவில்லை? ஏதேனும் விபரீதம் விளைந்துவிட்டதோ?

சேவிலி:—அம்மையே! தாங்களென்னுடிறபடி அவ்வாறொன்றும் நடந்தி ருக்கமாட்டாது என்று எண்ணுகிறேன், ஏனெனில்:—அரசாகளா யிருப்பவர்கள் அந்தணரையான வஞ்சகப்போர் ஒன்றும் மிலேச்சர் களைப் போலச் செய்யவே மாட்டார்கள். ஆகையால் தாயே! இதைக் குறித்துக் கவலைப்படுதல் ஒழிக.

(சுசீலன்வருதல்.)

சுசீலன்:—அடியேன் மந்திரி சுசீலன் அரசியாரவர்கட்கு வந்தனம்.

கோமளவல்லி:—என்? சுசீலரே! போனகாரியம் என்னுயிற்று? எல்லாஞ் செவ்வையாய் முடிந்தனவோ? எங்கே மகாராஜா அவர்கள்? இன்னும் வரக்காணேம்!

சுசீலன்:—தாயே! எல்லாம் நம் மகாதேவர் கிருபையினாலே இனிமையாய் முடிந்து விட்டன! காணாமற் போன மகன் நமது ரூபாவதியும் வருகின்றுள்!

கோமளவல்லி:—(கண்ணீர் சொரிந்துகொண்டு) ஓ! ரூபாவதி! இன்று தான் நீ என்வயிற்றிற் பிறந்தாய்! மீளுட்டீ! உன்னை வேண்டிக் கொண்டதின் பலனை யடைந்தேன்! நீ தான் இந்தக் கலியுகத்தில் உண்மையான தேவதை! உன்னை நம்பினோர்க்குக் குறையு முண் டாமோ?

சேவிலி:—எனது கண்மணி ரூபாவதி இதுவரையில் எங்கிருந்தாள்? என்? சுசீலரவர்களே!

(ரூபாவதியையும், சுந்தரானந்தனையும் சூரசேனவர்மன் பிடித்துக்கொண்டு வாராநிற்பச் சற்குணவழுதியும் வீரேந்திரசோழனும்வருதல்.)

சுசீலன்:—அதோ நமது மகாராஜா அவர்களும் வழுதியாரும், சோழரா ஜாவும் வருகிறார்கள்! நீங்களிருவரும் சற்று உள்ளேபோங்கள்.

(கோமளவல்லியுஞ் சேவிலியும் போதல்.)

சூரசேனவர்மன்:—தாங்களெல்லாரும் இப்படி வீற்றிருந்தருளுங்கள்,—அப்பா! எனதுகண்மணி! சுந்தரானந்தா! இப்படிவா.

(முத்தமிடுதல்.)

ஓ! சுசீலரே! நீர் இவ்விடமிருந்து இவர்கள் அனைவருந் தங்குவதற் கேற்ற வசதியான இடம் அமைப்பீராக. நாம் எமது கண்டெடுத்த திலோத்தமைபோலும் பெண்மணி ரூபாவதியையும் எமது அழகொரு வடிவமாய் அமைந்து நின்ற அருமை மருகன் சுந்தரானந்தனையும் இட்டுக்கொண்டு அந்தப்புரஞ் சென்று அவ்விடத்திலுள்ள எமது தலைவிமுதலாயினோரும் இவ்விருவரது காட்சியைப் பெற்றும் ஆனந்தத்தை யனுபவிக்குமாறு செய்துவருகின்றோம். இதற்குட் சேவகா!

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா! ஆக்ஞை!

சூரசேனவர்மன்:—நீ சென்று சிறையிலுள்ள நயவஞ்சகனைச் சீக்கிரமாய் இங்கழைத்துவா. போ. தாமதஞ்செய்யாதே!

(சேவகன்போதல்.)

(சூரசேனவர்மனும், சுந்தரானந்தனும், ரூபாவதியும் போதல்.)

வீரேந்திரசோழன்:—வழுதியாரே! நாம் படையெடுத்து வரும்போது என்ன எண்ணத்தோடு வந்தோம்! அது எப்படி முடிந்தது! பார்த் தீர்களா! இதுவன்றோ சிவபெருமான் செயலென்பது!

சற்குணவழுதி:—நம் அழகேசரது அருட்பிரசாதம் அவ்வாறிருக்கும்போது "பழைமை மொக்குளிற் பல்காலுந் தோன்றி" மாயும் மனிதர் செயலென்னே!

சுசீலன்:—இவையெல்லாம் நம் ஆலாசியநாதர் ஆனந்தம்பூத்தயராகிற்குத் திருவருள் விளையாடல்களே யல்லவோ!

சற்குணவழுதி:—ஆம். அதற்குமோரையமுண்டோ?

(சூரசேனவர்மன்வருதல்.)

சூரசேனவர்மன்:—தமிழ் வேந்தர்காள்! அடியேன் இதுகாறுந் தாங்கள் இருவரையுந் தனியே இவ்விடமிருத்தி விட்டுச் சென்ற பிழையை மன்னித்தருளுவீர்!

வீரேந்திரசோழன்:—அதிலொன்றும் பாதகமில்லை. வீற்றிருந்தருளுங்கள்.

(நயவசனர்வருதல்.)

நயவசனர்:—ராஜ சமுகத்தில் அடியேன் நயவசனன் வந்தனம்!

சூரசேனவர்மன்:—எமது பிரிய சேராகிய நயவசனரே! எளியேம் உண்மையை விசாரியாது நமக்கிழைத்த பெருந் தீங்கினைக் குறித்து மிகவும் விசனப்படுகின்றோம். ஆதலி னெம்மை மன்னித்தருளுவீரென்று நம்புகின்றோம்.

(நயவசனரைவணங்குதல்.)

நயவசனர்:—இவையனைத்தும் பழவினையின் பயனேயாம்! ஆதலின் அவற்றிற்காக நாம் மனவருத்த முறுவதென்னையோ! இறைவனே! கருணாகரா! வழுக்கருளுவாய்! நின்மீது தவறொன்றுமில்லை!

(அரசனெழுதல்; நயவசனர் வீற்றிருத்தல்.)

வீரேந்திரசோழன்:—என் தாமதஞ்செய்யவேண்டும்? சோதிடம் வல்லாரை விளித்து ஒரு நல்ல சுப முகூர்த்தம் வைத்து மணவினையைக் கூடிய சீக்கிரத்தில் முடித்துவிடுவோமே!

சூரசேனவர்மன்:—ஆ! அப்படியே செய்வோம்! ஏன்? சுசீலரே! உம்முடைய குமாரத்தி அம்புஜாட்சியின் விவாகத்தையும் இதனுடன் சேர்த்து நடத்திவிட்டாலென்ன?

சுசீலன்:—ஆம்! அதற்கென்ன? அவ்விடத்து இஷ்டப்படியே செய்துவிடுவோம். அது விஷயத்தில் எனக்கு ஆக்ஷேபனை யொன்றுமில்லை. மற்றைப்படி நமது நயவசனர் குமாரன் சந்திரமுகனுடைய விவாகத்தையுஞ் சேர்த்து நடத்தி விடலாமோ என்று நினைத்தேன். ஆனாற் சமுகத்தின் எண்ணம் எப்படியோ!

சற்குணவழுதி:—ஏன்? அதையுஞ் சேர்த்தே செய்துவிடலாம். அதைக் குறித்தொரு யோசனையுமில்லை. எங்கே எதிலும் மூன்று சேர்ந்து நடத்தலாகாது என்பார்களே யென்று நாம் நினைக்கப் போகிறோமோ? என்று அவ்விடத்தில் ஏதேனும் யோசனையுண்டோ?

சூரசேனவர்மன்:—அதொன்றுமில்லை! அதொன்றுமில்லை! நம்முடைய சமஸ்தானத்து வித்துவான் வித்தியாசாகரப்புலவருடைய சஷ்டியப்த பூர்த்தியும் இப்பொழுதுதான் வருகிறதாம். அதற்கென்ன? அதையுஞ் சேர்த்து இவற்றுடன் நடத்திவிட்டாற் போகிறது. சேவகா.

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா! உத்தரவு!

சூரசேனவர்மன்:—நீ போய் நயவசனர் குமாரன் சந்திரமுகனையும், மந்திரியார் மருகன் சுகுமாரனையும் அழைத்துக்கொண்டு வா.

(சேவகன்போதல்.)

ஓ! சுசீலரே! நீர்சென்று நமது சமஸ்தானத்துக் குருமூர்த்தி ஜோசியரைக்கேட்டு ஒரு நன் முகூர்த்தம் வைத்துக்கொண்டு விரைவாய் வாரும்!

சுசீலன்:—ஆகுக. அப்படியே!

(சுசீலன்போதல்.) (சேவகன்வருதல்.)

சேவகன்:—இதோ அவர்களும் வந்துவிட்டார்கள்!

(சுகுமாரனுஞ் சந்திரமுகனும்வருதல்.) (சேவகன்போதல்.)

சுகுமாரன்:—ராஜசந்நிதியில் அடியேன் சுகுமாரன் வந்தனம்!

சந்திரமுகன்:—அடியேன் சந்திரமுகன் வந்தனம்!

வீரேந்திரசோழன்:—இப்படி வாருங்கள் சமீபத்தில்.

சூரசேனவர்மன்:—வாருங்கள்!—சேவகா!

(சேவகன்வருதல்.)

சேவகன்:—மகாராஜா!

சூரசேனவர்மன்—நீ நம் அந்தப்புரஞ் சென்று, நமது மகளையும் மருகளையுஞ் சீக்கிரம் இங்கு அழைத்துவா!

(சேவகன்போதல்.)

சற்குணவழுதி:—வையை யாற்றின் வடகரையில் நமது பாசறைக்கு ஆளனுப்பி யாயிற்றோ?

சூரசேனவர்மன்:—ஓ! அப்பொழுதே எமது தேவியும் பரிவாரங்களுஞ் சென்றிருக்கிறார்கள். இதற்குள் வந்திருப்பார்கள்.

(சுந்தரானந்தனும் ரூபாவதியும் அம்புஜாட்சியுங் கனகமாலையும் வாராநிற்பச் சுசீலரும் வருதல். சுந்தரானந்தனுஞ் சுகுமாரனுஞ் சந்திரமுகனும் பேசிக்கொள்ளாநிற்ப ரூபாவதி தன்றோழிமாரோடு பேசுதல்.)

சற்குணவழுதி:—ஏன்? சுசீலரே! என்றைக்கு முகூர்த்தம் வைத்தார்?

சுசீலன்:—இன்றைக்கு எட்டாம் நாட்குருவாரம் மகாவித்துவான் வித்தியாசாகரப்புலவருடைய சஷ்டியப்தபூர்த்திவருதலின் அதற்கும் ஏற்ப அன்றைக்கு மிதுனலக்கினத்தில் வைத்திருக்கிறார்! அன்றைக்குச் சகலமும் நன்றாயிருக்கின்றனவென்று சொன்னார்.

சூரசேனவர்மன்:—சரி. அதே முகூர்த்தம். மற்றைய மூன்று விவாகங்களுக்கும் பொருந்துகிறதோ? அதைக் கேட்டீரா?

சுசீலன்:—ஆம். அது அந்த மூன்றுக்கும் பொருந்துகிறது என்று தான் சொன்னார்.

சூரசேனவர்மன்:—ஆனால், நமதுகுமாரத்தி ரூபாவதியின் விவாகத்தோடு மந்திரி சுசீலர் புத்திரி அம்புஜாட்சியின் விவாகமும் நயவசனர் குமாரன் சந்திரமுகன் விவாகமும் புலவர்சஷ்டியப்தமும் நடத்தப்படும். வழுதியாரே! தங்களுடைய மாமனார் வீரமார்த்தாண்டத் தொண்டைமானுக்கு நிருபம் எழுதிக் கூடிய சீக்கிரத்தில் வரவழையுங்கள். நாமும் எமது மந்திரியாரை இராசிஜயபாயரை வரவழைக்கிறோம். சரி. வெகுநேரமாயிற்று. நாம் இனிச்சென்று சற்று இளைப்பாறுவோம். வாருங்கள்.

சற்குணவழுதி:—சரி. போகலாம்.

(இறைவனைத் துதித்துப்பாடுதல்.)

உளமென்னு மாலயத் துன்னைவைத் தப்பணியு
 முத்தமப் பத்த ராவார்
தளர்கின்ற காலத்தி னுன்றுகோ லாகியவர்
 தம்மைப் புரந்து மவர்தம்
வளரன்பு விதைகொண்மன வயலதனு ளல்லின்ப
 மழைபொழியு மெழிலி யாகி
யொளிர்சச்சி தானந்த மூர்த்தியே யெவ்வண்ண
 முனதருளை வாழ்த்து கேனே.

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே"

(எல்லோரும்போதல்.)

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

பின்னுரை.

சுந்தரானந்தர்:—எங்கணும் வியாபியாகி இன்பமும் இரக்கமு முடைய எல்லாம் வல்ல ஈசனது அருள்பெற்றுக் கல்விபெற்றுப் பொருளுற்றுச் சீர்த்தி வாய்ந்து, இணக்கமுள்ள மனைவியை அடைந்து நன்மகவுச் செல்வம் பொருந்தித் தற்காத்துப் பிறர்நன்மை நாடி வாழுதலே மாந்தரியல்பாம். ஆதலின் இயற்கைவிரோதமாகிய நெறியினிற் செல்லுத லொழிந்து, இயற்கை யொழுங்கின் முறை வழுவாது ஒழுகுவேமாக. பிறர்பொருள் வெஃகுதலும் பிறர்க்குக் கேடு சூழ்தலுந் தனக்கே துன்பந் தருதலைக் கண்கூடாகக் கண்டனமாதலின் அவற்றினின்றுந் தவிர்வேமாக. மணவினையின் மூலமாயுள்ளது மெய்யன்பேயாம் ஆதலின், அதனைக் கேவலம் உடற்கூட்டமாக எண்ணுகின்ற மாந்தர்மதி யென்னே! உளத்தோடு உளஞ் சென்று ஒன்றலே காதல்! அதுவே மெய்யன்பு! அதுவே உண்மை நேசம்! இல்வாழ்க்கையே நல்லொழுக்கங் கற்பிக்கும் உத்தமக் கல்லூரியாம் ஆகவே, அகிலத்துள்ள ஆன்மகோடிகளை வெறுத்துத் துறவறம் பூண்டு உடல்வற்றி மெய்ந்நிலை தவறி வாழுநர் போலாது, அன்பினுற் கட்டுண்டு இல்லறம்பூண்டு மனித சமூகத்தில் இருந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்வேமாக.

(சுந்தரானந்தன்வாழ்த்துதல்.)

என்னை யாளு மாமதுரை யீசனருளாற் பொய்த்தலின்றி
 யென்று மெழிலி சொரிந்துமழை யினிதிற் பொழிக வாடவர்தாங்
கன்னற் சாற்றைப் பாகுதனைக் கண்டை வென்ற மொழியுடனே
 கழற வரிய வழகுடைய கற்புக் கரசா மாதர்தமோ
டின்னல் சிறிது மெய்தாம லென்றும் பிரானை மனநிறுவி
 யில்ல றத்தி னியல்வழுவா திருந்தெஞ் ஞான்று மின்புறுக
நன்னர் மகிப ரரசாள்க ஞானந் தழைத்து விளங்கியிந்த
 ஞாலத் துள்ளார் யாவருமே நன்மை யடைந்து வாழியவே.

(சுந்தரானந்தன்போதல்.)

ரூபாவதி நாடகம்

முற்றிற்று.

வாழ்த்து.

கலிவிருத்தம்.

சந்த ரானந்த வள்ளற்றந்தி சேயனை
மந்த வாரணை மர்துறு பகைறி
செந்த மிழிலு மெய்யுஞ் சேரவே
நந்த மடிக ணன்றாக போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்.

பிழை திருத்தம்.

சிறப்புப்பாயிரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	க	ணனைய	ளனைய

நூல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
11	2	சுத்தரியார்	சுந்தரியார்
12	27	ராஜ	ராஜ
22	3	யுன்தனை	யுன்னைத்
25	6	கூப்பி	கூப்பி
28	21	செல்லலாம்	சொல்லலாம்
30	2	புன்னி	புன்னை
31	22	ளநுதன்	[illegible]ந்தன்
36	22	கண்டானும்	[illegible]ண்டனும்
37	26	குயிற்பினை	குயிற்பிணை
39	24	மா	[illegible]மயா,
50	23	மாயினவே	யினவே
54	9	ஓவ்வோ	ஒவ்வோ
56	20	மொன்று	மென்று
57	28	பனி	பணி
58	33	ஞேறு	ஞெறு
60	24	சுத்த	சுந்த
66	38	ஐயோ	ஐயோ
67	13	யலமாக்	யலமக்
81	18	தூ	தூ
88	33	எம்லா	எல்லா
93	18	அடியே	அடியேம்
94	1	முன்றுங்	மூன்றுங்
99	18	கூறுதும்	கூறுதுஉம்
103	17	பாளா	பான
106	25	அரசா	அரசர்
107	35	பமேழை	பமேழை
108	7	தரு	தருஞ்